# ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் அரச நிறுவனங்களின் பணிப்பொறுப்பினை மதிப்பீடு செய்தல்



அறிக்கை இலக்கம் : பீஈஏ/ஏ/ஈஏசீ/2021/02

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

## உள்ளடக்கம்


| இலக்கம் ------ | | விபரம் --------- | பக்க இலக்கம் ------- |
|---|---|---|---|
| 1. | | நிறைவேற்றுப் பொழிப்புரை | 01 |
| 2. | | அறிமுகம் | |
| | 2.1 | பின்புலம் | 06 |
| | 2.2 | செயலாற்றுகைக் கணக்காய்வுக்காகத் தலைப்பினைத் தெரிவு செய்வதற்கான அடிப்படை | 09 |
| | 2.3 | கணக்காய்வின் நோக்கம் மற்றும் மூலப் பிரமாணம் | 10 |
| | 2.4 | கணக்காய்வு முறைமைகள் | 13 |
| | 2.5 | கணக்காய்வு விடயப் பரப்பு மற்றும் விடயப் பரப்பினை எல்லைப்படுத்தல் | 15 |
| | 2.6 | கணக்காய்விற்கான அதிகார பலம் | 16 |
| 3. | | விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் | |
| | 3.1 | நிறுவனத்தின் பின்புலம் மற்றும் அடிப்படைத் திட்டங்கள் | 17 |
| | 3.2 | ஏற்றுமதி விவசாயப் பயிர் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கிலான ஆய்வுகள் | 29 |
| | 3.3 | விதைகளின் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்தல் | 48 |
| | 3.4 | ஏற்றுமதி விவசாயப் பயிர் செய்கையை ஊக்குவித்தல் | 60 |
| | 3.5 | துறை சார்ந்த பயிற்சி அளித்தல் | 85 |
| | 3.6 | ஏற்றுமதி விவசாயப் பயிர் செய்கை தொடர்பான அண்மைக்கால போக்குகள் | 92 |
| | 3.7 | மீள் ஏற்றுமதி | 103 |
| | 3.8 | ஏற்றுமதி ஊக்குவிப்புகள் | 104 |
| | 3.9 | ஏற்றுமதி விவசாய பயிர்ச் செய்கை மற்றும் ஊக்குவிப்பு தொடர்பில் ஏனைய அரச நிறுவனங்களின் கடமைப் பொறுப்புகள் | 115 |
| | 3.10 | அந்நிய செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் கடமைப் பொறுப்புகள் | 128 |
| 4. | | பரிந்துரைகள் | 129 |
| 5. | | இணைப்புகள் | 132 |

## 01. நிறைவேற்றுப் பொழிப்புரை

இலங்கையில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற காரணத்தினால் நீண்ட காலம் தொட்டு உள்நாட்டு நுகர்வுக்காகவும் மற்றும் ஏற்றுமதிக்காகவும் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை பயிரிடப்படுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை ஏற்றுமதி பங்களிப்பில் போதுமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்காமை, உள்நாட்டு சந்தைகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் ஏற்றுமதி குறைந்த சதவீதத்தில் காணப்படுவதால் கிடைக்கும் அந்நிய செலாவணி வருமானம் குறைவடைதல், ஒரு சில ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை கிலோ கிராம் அலகுக்கான ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடும்போது அதிக செலவில் இறக்குமதி செய்தல், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்காமை, மீள் ஏற்றுமதி சிக்கல்கள் மற்றும் வெளிநாட்டு அந்நிய செலாவணி ஈட்டும் தேவைப்பாட்டிற்கு அமைய ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் நடவடிக்கை மேற்கொள்ளும் அரச நிறுவனங்களின் செயலாற்றலை மதிப்பிடல் என்பன இந்தக் கணக்காய்வின் பிரதான நோக்கமாகும்.

ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை சார்ந்த ஆய்வுகள், பயிரிடுதல், உற்பத்தி நடவடிக்கைகள், தரம் மற்றும் சட்ட விதிகளை தயாரித்தல், விற்பனை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் அந்நிய செலாவணியினை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் தொடர்புடைய 16 அரசு நிறுவனங்கள் இந்த கணக்காய்வில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனங்களுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கைக்கான முக்கியமான அரச நிறுவனம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆகும். அந்த திணைக்களத்துக்கு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப் பகுதியினுள் மீண்டுடெழும் மற்றும் மூலதன செலவாக மொத்தம் ரூபா 6,654 மில்லியன் தொகை நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்று இருந்ததுடன் ரூபா 5,520 மில்லியன் தொகை செலவிடப்பட்டு இருந்தது. இதற்கு மேலதிகமாக ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு ஆதரவு வழங்குவதற்கு அந்தக் காலப் பகுதியினுள் மொத்தமாக ரூபா 2,032 மில்லியன் தொகை செலவிடப்பட்டு இருந்தது.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 4 வருடக் காலப் பகுதியினுள் 11 ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கு உரிய 82 மில்லியன் நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்காகத் தனியார் நாற்று மேடைகளுக்கு ரூபா 1,353 மில்லியன் தொகை செலவிடப்பட்டு இருந்ததுடன் அந்தத் தொகையில் 98 சதவீதம் கறுவா, மிளகு, மஞ்சள் மற்றும் பாக்கு போன்ற 4 பயிர்ச் செய்கைகளுக்கு உரிய நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் ஏனைய 7 பயிர்ச் செய்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்த தொகை 2 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும்

வழங்கப்பட்ட நாற்றுக்களின் தொகையுடன் ஒப்பிடும் போது பயிர்ச்செய்கை நிலத்தின் அளவு அதிகரித்து இருக்கவில்லை. இந்தக் காலப் பகுதியினுள் பொருத்தமான தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு 7 துறைகளின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிவாரணத்தின் பெறுமதி ரூபா 126 மில்லியனான குறைந்த பெறுமதியிலேயே காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தரவுகளுக்கு அமைய 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் மசாலா பொருட்கள் மற்றும் வாசனை எண்ணெய் என்பவற்றின் ஏற்றுமதி வருமானம் அமெரிக்க டொலர் 361 மில்லியனில் இருந்து அமெரிக்க டொலர் 335 மில்லியன் வரையில் குறைந்து காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் அமெரிக்க டொலர் 456 மில்லியன் வரையில் அதிகரித்து இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டு வரையில் இந்த துறையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் அமெரிக்க டொலர் 800 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டது.

1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டு 30 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டளை தயாரிக்கப்பட்டு இருக்காமை, ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஆய்வு பணிகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் சட்டத்திற்கு அமைய செஸ் வரி விதிக்கப்பட்டு இருக்காமை போன்ற சட்டத்தை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் நிலவின. சட்டத்திற்கு உரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளர் ஒருவர் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் நாயகத்தினை நியமித்து இருந்தமை, விதை மற்றும் நாற்றுப் பொருட்களை ஒழுங்குறுத்தல் தொடர்பான அதிகாரம் இல்லாமை, ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை தொடர்பான வரையறை காலத்துக்கு காலம் மாறுபடாமை குறைபாடுகளுக்கான 26 விடயங்களுடனான ஏற்றுமதி விவசாய (திருத்திய) அதிகாரச்சட்டமொன்று தயாரிக்கப்பட்டு அவை பாராளுமன்றத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு இருக்காமை போன்ற சட்ட விடயங்கள் இந்த துறைக்குரியதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, விவசாயம் தொடர்பான தேசிய கொள்கையொன்று இல்லாதிருந்தமை, அமைச்சு அடிக்கடி மாற்றமடைதல் ஆகியவற்றால் முன்னுரிமைகள் மாற்றமடைதல் போன்ற விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

அதிகளவு அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய பாக்கு, ஏலம், கிராம்பு, சாதிக்காய், கொக்கோ, வெனிலா, வெற்றிலை, கற்பூரப் புல், லெமன் கிராஸ் ஆகிய நாற்றுகளின் உற்பத்தி மற்றும் அறுவடை குறைந்த மட்டத்தில் காணப்படுதல், விலங்குகளின் தாக்கம் தொடர்பான சிக்கல்களுக்கு தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறுவடை செய்து விற்பனை செய்தல் வரையில் முறையான திட்டம் ஒன்று இல்லாமை, தொழில் பயிற்சி அதிகாரசபை அறிமுகப்படுத்தியுள்ள NVQ 3 சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குப் போதிய அளவு விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டு இருக்காமை, ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையின் உள்நாட்டுத் தேவைப்பாட்டினைச் சரியாக கணக்கீடு செய்வதற்கான முறையொன்று இல்லாமை, உள்நாட்டில் பயிரிடப்படக் கூடிய பயிர்களை இறக்குமதி செய்தல் மற்றும் ஒரு சில பயிர்ச் செய்கைக்கான ஏற்றுமதி வருமானத்தை விட அதிக அளவு இறக்குமதி செலவினை மேற்கொண்டு இறக்குமதி செய்திருத்தல் என்பன கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

ஏற்றுமதி ஊக்குவிப்புக்காக அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து தயாரித்த மசாலா பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தொடர்பான திட்டத்தில் (2018 - 2022) கண்டறியப்பட்ட குறைபாடுகளுள் தரவுகள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு, தொழில்நுட்ப அறிவு குறைபாடு மற்றும் பயிர்ச்செய்கைக்கான மொத்த செலவு அதிகரித்தல் போன்ற காரணிகள் இன்னமும் காணப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்யும் முறை ஒன்று காணப்படாமையால், ஏற்றுமதியாளர்களின் தரவுகள் இல்லாமை, வியாபாரக் குறி அறிமுகப்படுத்தல் குறைவடைதல் மற்றும் அவை பிரபலமாகாமை, மற்றும் புவியியல் சுட்டியைப் (GI) பெற்றுக் கொண்டுள்ள கறுவாவிற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் திட்டமிடல் மட்டத்திலேயே இன்னமும் காணப்படுதல், விற்பனைக் கண்காட்சிகள் நடத்துவதற்கு முடியாமல் இருத்தல் என்பன முக்கியமான அவதானிப்புகள் ஆகும்.

வணிகத் திணைக்களமானது 2006 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கைகளுக்கு உரியதான புதிய சர்வதேச வியாபார ஒப்பந்தங்கள் எதையும் மேற்கொண்டு இருக்காமை, முன்னுரிமை வரி முறையின் கீழ் மட்டுமே ஆதார சான்றிதழ் வழங்குவதற்கு கணினி மயப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பு (REX System) காணப்பட்டமை மற்றும் அதன் கீழ் ஆகக் குறைந்த அளவு எண்ணிக்கையிலான ஏற்றுமதியாளர்களே பதிவு செய்யப்பட்டு இருந்தமை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் மூலம் நிறுவன அனுமதிப் பத்திரம் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தமை முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை, மசாலாப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் பாரிய அளவில் மூலப் பொருட்களாகத் தரச் சான்றிதழ் இன்றி ஏற்றுமதி செய்தல், இயற்கை விவசாயத்திற்கு விவசாய அமைப்புகளை பதிவு செய்தல் மற்றும் ஊக்குவித்தல் குறைவடைதல், இயற்கை உற்பத்திகளுக்கு விசேட சந்தைகள் இல்லாத காரணத்தால் குறைந்த விலைக்கு பொதுச் சந்தைகளில் விற்பனை செய்தல், சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) என்பவற்றைப் பின்பற்றுவதற்கு உரிய தரப்பினரை ஊக்குவிக்கும் முறைமைகள் போதிய அளவு இல்லாத காரணத்தால் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளைச் சர்வதேச சந்தைகளுக்கு வழங்குவதில் சிக்கல்கள் காணப்பட்டன.

2003 இன் 22 ஆம் இலக்க விதைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டு 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும் விதை வழங்குனர்களைப் பதிவு செய்யும் வேலைத் திட்டம் காணப்படாமை, விதைகளின் தரம் வெளிப்படுத்தப்பட்டு இருக்காமை, ஆயுர்வேத உற்பத்திகளுக்கு உள்நாட்டு மசாலாப் பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவற்றை ஏற்றுமதி சந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதற்கு முறையான பதிவு செய்யப்பட்ட முறைமையொன்று காணப்படாமை, மூலிகை அழகு சாதன உற்பத்திகள் மற்றும் ஆயுர்வேத உற்பத்திகளுக்கு இலங்கை தரம் தயாரிக்கப்பட்டு இருக்காமை, ஆயுர்வேத உற்பத்திகளுக்கு உள்ளூர் இஞ்சியின் தரம் குறைவாக இருப்பதால் இஞ்சி இறக்குமதி செய்யப்பட்டு இருந்தமை, பல்வருட பயிர்ச்செய்கை அபிவிருத்திக்கு குறுகிய கால வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பொதியிடல் ஒழுங்குறுத்தலுக்காக நீண்ட காலம் தொட்டு அரச நிறுவனம் ஒன்று இல்லாத காரணத்தால் 2022 ஆம் ஆண்டு வரையில் ஏற்றுமதியாளர்களுக்குப் பொதியிடல் நிவாரணம் பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தமை போன்றன பிரதானமாக அவதானிக்கப்பட்டன.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், விவசாயக் கொள்கைச் சபை மற்றும் தேசிய அறிவியல் அறக்கட்டளை ஆகிய பிரதான ஆய்வு நிறுவனங்கள் மூன்றின் ஊடாக அண்மித்த 15 வருட கால எல்லைப் பகுதியினுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை சார்ந்த 157 ஆய்வுகளுக்காக ரூபா 109.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிப்பதன் அடிப்படையில் ஆய்வுச் சிக்கல்கள் தீர்க்கப்பட்டிருக்காமை, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுதல் இன்னமும் முடியாது இருத்தல், இலங்கை விவசாயக் கொள்கை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு முன்னுரிமைக்கு அமைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை போன்ற காரணிகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. விவசாயப் பயிர்ச்செய்கை ஏற்றுமதி திறந்த கணக்கு முறையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றமையால் அந்தப் பணம் இலங்கை மத்திய வங்கியில் அறிக்கையிடப்படுவதில்லை என்பதும், அது தொடர்பான உறுதிப்படுத்தல்களுக்கான முறைமை ஒன்று இலங்கை மத்திய வங்கியிடம் காணப்படவில்லை என்பதும் நிலவும் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம் மற்றும் அதிகாரமுள்ள வியாபாரிகள் ஒன்றிணைந்து நிகழ்நிலை ஏற்றுமதி கண்காணிப்பு அமைப்பு ஒன்றினைத் தயாரித்து வருவது அவதானிக்கப்பட்டது. அதற்கு அமைய அரச நிவாரணமாக செலவிடப்பட்ட தொகையில் பயிரிடப்படும் விவசாயப் பயிர்ச்செய்கை ஏற்றுமதி வருமானம் இலங்கைக்கு முழுமையாக கிடைப்பது தொடர்பான சிக்கல் இன்னமும் தீர்க்கப்படாது உள்ளது. இந்த அவதானிப்புகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காரணிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பு செய்வதற்காக ஏற்றுமதி விவசாயம் தொடர்பான கொள்கை ஒன்றினை உள்ளடக்கி விவசாயக் கொள்கை ஒன்றினைத் தயாரித்து செயற்படுத்துதல், 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாயத் துறையின் மேம்பாட்டுச் சட்டத்தில் ஆக்கபூர்வமான திருத்தங்களை உள்ளடக்கி உடனடியாக அமுலாக்கம் செய்தல், ஆய்வு முன்னுரிமைகளை அடையாளம் கண்டு ஆய்வுகளை மேற்கொள்ளுதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பு செய்தல், உள்நாட்டு மூலிகை பயிர்ச்செய்கைக்காக இலங்கை ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம், ஆயுர்வேத திணைக்களம் என்பவற்றுக்கு சொந்தமான மூலிகைத் தோட்டங்களின் பயன்பாடு, பிரதேசங்களுக்கு உரித்தான பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல், மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்தி விற்பனை சபை மூலம் மசாலாப் பொருட்களை கொள்வனவு செய்தல், உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நியாயமான விலைக்குத் தரமான மசாலாப் பொருட்களை நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுத்தல், ஏற்றுமதி விவசாயப்பயிர்ச்செய்கைக்கு உரிய விதை மற்றும் நாற்று பொருட்களை உறுதிப்படுத்துவதற்காகக் காணப்படும் தொழில்நுட்ப திறன் அடிப்படையில் ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்திற்கு தேவையான சட்ட ரீதியான அதிகாரத்தினைப் பெற்று கொடுத்தல், நாற்றுகளை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் போது பயிர்ச்செய்கைக்குத் தேவையான வசதிகள் உள்ள நிச்சயமாக அடையாளம்

காணப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு மட்டும் நாற்றுக்களை விநியோகித்தல் மற்றும் அறுவடை செய்தல் வரையில் தொடர்ச்சியான கண்காணிப்பு முறைமைகளை தயாரித்தல், ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை சார்ந்த விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றிதழுக்கு அமைய உற்பத்திக்காக உந்துதல், ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை மற்றும் இணைந்த தரப்பினரின் மையப்படுத்தப்பட்ட தரவு ஒழுங்கமைப்பின் மூலம் தரவு பரிமாற்றம் மற்றும் முன்னேற்ற ஒழுங்குறுத்தல் மூலம் அதிக ஏற்றுமதி வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள கூடிய பயிர்களின் உற்பத்தி, வியாபாரக் குறி பயன்பாட்டிற்காக ஏற்றுமதியாளர்களைத் தூண்டுதல், கறுவாவிற்காகப் பெற்றுக் கொள்ள கூடிய புவியியல் சுட்டி (GI) பயன்பாட்டின் மூலம் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு, பொதியிடலின் தரத்தினை உறுதி செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தலுக்காக அரச நிறுவனங்களின் உதவியினைப் பெற்று கொடுத்தல், ஏற்றுமதியின் மூலம் ஈட்டிக் கொள்ளும் அந்நிய செலாவணியை இலங்கைக்குக் கொண்டு வருதல் தொடர்பான விதிகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்கள் காட்டும் இணக்கப்பாடு தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தல், (நிகழ்நிலை ஏற்றுமதி கண்காணிப்பு ஒழுங்கமைப்பு), 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு அமைய அனைத்து ஏற்றுமதி ஒழுங்குறுத்தலுக்கும் மத்திய நிறுவனம் ஒன்றை நிறுவுதல், புதிய வியாபார ஒப்பந்தங்கள் மூலம் வரி நிவாரணம் மற்றும் வேறு வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், மசாலாப் பொருட்களை மூலப் பொருட்களாக அல்லாது பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியாக ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிகளவு அந்நிய செலாவணித் தொகையினை இலங்கைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனம் சிறந்த முறையில் ஒருங்கிணைப்பு செய்யப்பட வேண்டும் என்பது போன்ற காரணிகள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 02. அறிமுகம்

### 2.1 பின்புலம்

விவசாயத்திற்குச் சாதகமான காலநிலை நிலவும் சூழல் காணப்படுதல் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்ட மக்கள் வாழும் காரணத்தால் நீண்ட காலம் தொட்டு உள்நாட்டு நுகர்வைப் போன்றே ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நீண்டகால வரலாற்றைக் கொண்ட ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையினுள் கோப்பியை அபிவிருத்தி செய்வதற்கான முதலாவது தேசிய முயற்சியானது 1959 ஆம் ஆண்டில் திட்டமிடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் 1968 ஆம் ஆண்டில் தேயிலை ஆணைக் குழு நியமிக்கப்பட்டதுடன், அந்த ஆணைக் குழுவினால் பொருளாதார ரீதியில் உற்பத்தி திறன் அற்ற தேயிலைக் காணிகளில் பயிரிடுவதற்காக மாற்றுப் பயிர்ச்செய்கையாக கொக்கோ, கோப்பி, கறுவா, மிளகு மற்றும் சாதிக்காய் என்பன பரிந்துரைக்கப்பட்டிருந்தன. 1970 ஆம் ஆண்டில் பயிர் பல்வகைப்படுத்தல் செயல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 1972 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறு ஏற்றுமதி பயிர்த் திணைக்களத்தின் முக்கிய நோக்கமாக சம்பிரதாய ரீதியில் பயிரிடப்பட்ட தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு காணிகளைப் பல்வகைப்படுத்தல் மற்றும் ஊடு பயிரிடல் மேற்கொள்வதன் மூலம் பொருளாதார சாத்தியப்பாட்டினை அதிகரிப்பதே ஆகும். 1992 ஆம் ஆண்டு வரையில் சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைகளில் ஏற்றுமதி செய்யப்படும் தொகை மற்றும் பெறுமதிகள் பல மடங்குகளால் அதிகரித்த காரணத்தால் உறுதியான அரச தலையீட்டுடன் துறையின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு சிறு ஏற்றுமதிப் பயிர் திணைக்களமானது 1992 இன் 46 ஆம் இலக்கப் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஏற்றுமதி விவசாயத்திணைக்களமாகப் பெயரிடப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலை நல்ல நிலைமையில் பேணும் நோக்கை நிறைவேற்றிக் கொண்டு ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கைத் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரதும் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை உயர்த்துவதற்கு ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை உற்பத்தியை அளவு மற்றும் தர ரீதியில் உயர்த்துவதன் மூலம் அதிக அளவு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் இந்தத் துறையின் அடிப்படை ஒழுங்குறுத்தல் நிறுவனமான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடாக உள்ளதுடன் 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு பாராளுமன்ற சட்ட ஒழுங்கு விதிகளின் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் அந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியவை ஆகும்.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களைப் பயிரிடல் மற்றும் தயாரித்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்.

- பயிர்களை அபிவிருத்தி செய்தல், தீர்மானிக்கப்பட்ட வகையில் பயிர் செய்தல், பயிர்களைப் பாதுகாத்தல், அறுவடைக்குப் பின்னரான நடவடிக்கைகள் மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கு உரியதான பல்வேறு துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

- உயர்தரத்திலான நாற்று பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் பெற்றுக் கொடுத்தல்.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கைக்கான உற்பத்தி, செயல் திறன் மற்றும் தரம் என்பவற்றை உயர்த்துவதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- பயிர் பாதுகாப்பு ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- ஒருங்கிணைந்த பூச்சிக் கொல்லி முறைகளை ஊக்குவித்தல்.

- ஒருங்கிணைந்த தாவர ஊட்ட முகாமைத்துவத்தை ஊக்குவித்தல்.

- இயற்கை விவசாய ஊக்குவிப்பு.

- சந்தை விபரங்கள், தரம் மற்றும் விலை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

- ஏற்றுமதி விவசாயப்பயிர்ச்செய்கை மற்றும் நாற்றுப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தல்.

- ஏற்றுமதி விவசாய்ப பயிர் உற்பத்தியைத் தயாரித்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

- பெருந்தோட்டத்துறையில் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கைகளை ஊக்குவிப்பதற்கான ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை மற்றும் இணைந்த அரச மற்றும் தனியார் துறைகளின் பிணைப்பை உறுதிப்படுத்துதல்.

- 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துதல்.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை மற்றும் இணைந்த கொள்கை உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ள அரச அமைப்புகளுக்கு பங்களிப்பினைப் பெற்றுக் கொடுத்தல்.

- தொழில்நுட்ப அறிவை வழங்குவதைப் பேணிச் செல்லுதல்.

தற்போதைய காலம் வரையிலும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மூலம் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட 15 விவசாயப் பயிர்கள் ஏற்றுமதி விவசாயப் பயிர்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை கறுவா, மிளகு, ஏலம், கிராம்பு, சாதிக்காய், கோப்பி, கொக்கோ, வெனிலா, வெற்றிலை, கற்பூரப்புல், லெமன் கிராஸ், இஞ்சி, மஞ்சள், கொரக்காப் புளி மற்றும் பாக்கு என்பவை ஆகும்.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் மீண்டெழும், மூலதன மற்றும் ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு நோக்கில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பின்வருமாறு ஆகும்.

**(ரூபா மில்லியன்)**

| **விபரம்** | **ஆண்டு** | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2017** | | **2018** | | **2019** | | **2020** | | **2021** | |
| | **ஒதுக்கீடு** | **செலவு** | **ஒதுக்கீடு** | **செலவு** | **ஒதுக்கீடு** | **செலவு** | **ஒதுக்கீடு** | **செலவு** | **ஒதுக்கீடு** | **செலவு** |
| மீண்டெழும் செலவு | 604.12 | 604.13 | 615.66 | 621.42 | 677.66 | 621.42 | 739.6 | 702.9 | 745 | 710.9 |
| மூலதன செலவு | 674.2 | 402.52 | 555.5 | 488.19 | 666 | 407.85 | 635.2 | 562.67 | 741 | 398.4 |
| ஏற்றுமதி பயிற்சி ஊக்குவிப்பு நோக்கில் விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தல் | 600 | 345.62 | 500 | 440.43 | 600 | 356.34 | 600 | 529.16 | 700 | 360.6 |

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு மேலதிகமாக விவசாயப் பயிர் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஊக்குவிப்பு நோக்கில் நேரடியாக மற்றும் மறைமுகமாக நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்களாக விவசாயத் திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை, ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வணிகத் திணைக்களம், இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலங்கைத் தர நிறுவனம் என்பவை குறிப்பிடப்படக் கூடியதாக உள்ளதுடன் அந்த நிறுவனங்களை அமைப்பதற்கு நிறைவேற்றப்பட்ட அரச ஆணைகள் மூலம் குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்தத் துறையினை முன்னேற்றுவதற்கான நிறுவன ரீதியான கடமைப் பொறுப்புக்கள் மிகவும் முக்கியமானதாக உள்ளதுடன் தற்போது இலங்கை முகம் கொடுத்துள்ள அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக இந்தத் துறையின் மூலம் ஈட்டி கொள்ளக் கூடிய அந்நிய செலாவணியை அதிகபட்ச மட்டத்தில் ஈட்டிக் கொள்வதற்கு உள்ள திறனைக் கவனத்தில் கொண்டு இந்த தலைப்பின் கீழ் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய நீண்ட காலம் தொட்டு ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை உற்பத்தி மற்றும் ஊக்குவிப்புக்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கடமைப் பொறுப்புக்களை மதிப்பீடு செய்ய இந்த கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 2.2 செயலாற்றல் கணக்காய்விற்கான தலைப்பினைத் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் இந்த தலைப்பினை தெரிவு செய்வதற்கு முதன்மையான அடிப்படையாக இருந்தன.

(அ) மொத்த விவசாய உற்பத்திகளில் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை ஏற்றுமதிக்கான பங்களிப்பில் போதிய அளவு முன்னேற்றம் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) ஏற்றுமதி விவசாயப்பயிர்ச்செய்கையாக அடையாளம் காணப்பட்டுள்ள பயிர்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் நீண்ட காலம் தொட்டு இடம்பெற்றிருந்த போதிலும் ஒரு சில பயிர்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் தற்போது திருப்திகரமான நிலைமையில் காணப்படவில்லை.

(இ) ஒரு சில ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும் ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடும்போது அதிக செலவினை மேற்கொண்டு கருத்தில் கொள்ளத்தக்க தொகையினை இறக்குமதி செய்தல்.

(ஈ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய பயிர்ச்செய்கை நில அளவில் கவனத்தில் கொள்ளத்தக்க அதிகரிப்பு இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்காமை தொடர்பில் தொடர்ந்தும் ஊடகங்கள் மூலம் அறிக்கையிடல்.

(ஊ) நுகர்வுக்காகத் தேவைப்படும் ஒரு சில ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பில் தற்காலத்தில் உள்நாட்டு சந்தைகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு நிலைமை.

(எ) மீள் ஏற்றுமதி மற்றும் அந்நிய செலாவணி தொடர்ந்து வருதல் தொடர்பில் கருத்து முரண்பாடு ரீதியான காரணிகள் அறிக்கையிடல்.

(ஏ) இலங்கையில் தற்காலத்தில் நிலவும் அந்நிய செலாவணித் தட்டுப்பாட்டிற்கு பரிகாரமாக ஏற்றுமதி விவசாயப் பயிற்சி ஊக்குவிப்பின் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு உள்ள திறன்கள்.

இலங்கையில் நீண்ட காலம் தொட்டு ஏற்றுமதி விவசாயப பயிர்ச்செய்கை ஏற்றுமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கவனத்தில் கொள்ளத்தக்க வகையில் அதிகரித்துக் கொள்வதற்கு முடியாத நிலைமையில் ஒரு சில ஏற்றுமதி விவசாயப் பயிர்களைப் பாரிய அளவில் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு சில பயிர்களின் உற்பத்திக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலத்தின் அளவு காலத்துக்குக் காலம் குறைவடைந்து செல்வதுடன் ஒரு சில ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை உற்பத்தியினை மீள் ஏற்றுமதி செய்யும் போது தரத்தில் குறைவடையும் காரணத்தால் உள்நாட்டு உற்பத்திகளுக்கான வெளிநாட்டு சந்தைகளின் விலை குறைந்த மட்டத்தில் காணப்பட்டதனால் உள்நாட்டு விவசாயிகளின் உற்பத்திக்கு நியாயமான விலை கிடைக்காது விவசாயிகள் சிரமங்களுக்கு உள்ளாகுதல் போன்ற சிக்கல்கள் தொடர்ச்சியாக அறிக்கையிடப்பட்டுள்ளன. சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைத் துறையில் காணப்படும் இவ்வாறான சிக்கல் நிறைந்த நிலைமைகளைத் தீர்த்துக் கொள்வதன் மூலம் வினைத்திறனற்ற தன்மையைக் குறைத்துக் கொண்டு உற்பத்தித் திறனை அதிகரித்து ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை ஏற்றுமதித் துறையினை முன்னேற்றுவதன் மூலம் இலங்கை பொருளாதாரத்திற்குப் பாரிய பங்களிப்பினை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும் என்பது தெளிவாகின்ற காரணத்தால் செயலாற்றல் கணக்காய்விற்கு இந்தத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 கணக்காய்வின் நோக்கம் மற்றும் மூலப் பிரமாணம்

### 2.3.1 கணக்காய்வு நோக்கம்

ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்பன விவசாயத் துறையினுள் உள்ள பாரம்பரிய பிரிவைப் போன்றே உள்நாட்டு வாழ்க்கை முறை மற்றும் உணவு முறை அதன் அடிப்படையாக உள்ளதுடன் அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பொருளாதார ரீதியில் உறுதியான தன்மையை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு முடியுமாக உள்ளதுடன் அந்த உற்பத்தியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு சில உற்பத்திகள் பயன்பாட்டு ரீதியிலான முக்கியத்துவத்துனைக் காரணமாக கொண்டு விசேடமாக சுய தொழில் உற்பத்தியின் மூலம் சமூகப் பொருளாதார பங்களிப்பின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு அவற்றின் உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பை நோக்காகக்

கொண்டு அதற்கான அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச நிறுவனங்களின் கடமைப் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல்.

### 2.3.2 கணக்காய்வின் துணை நோக்கம் மற்றும் மூலப் பிரமாணம்

மேலே கூறிய கணக்காய்வு நோக்கங்களை எட்டும் நோக்கில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள துணை நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வு அவதானிப்புகள் கட்டி எழுப்பப்பட்டுள்ளன.

| துணை நோக்கங்கள் | கணக்காய்வு மூலப் பிரமாணங்கள் |
|---|---|
| (அ) நிறுவன பின்புலம் மற்றும் காணப்படுகின்ற கொள்கைச் சட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களின் இற்றைப்படுத்தல்கள் பற்றிய மதிப்பீடு. | (i) 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தின் 3(1) பிரிவின் 10, 15, 16 மற்றும் 19ஆம் பிரிவுகள்.<br>(ii) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் 10(1) மற்றும் 12 ஆம் பிரிவுகள்.<br>(iii) 1987 இன் 47ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபை சட்டத்தின் 10 ஆம் பிரிவு.<br>(iv) திட்டமிடப்பட்ட இலக்குகள். |
| (ஆ) ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை ஏற்றுமதியுடன் இணைந்த நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு தொடர்பான மதிப்பீடு | (i) 2018 - 2022 தேசிய ஏற்றுமதி உத்திகளுள் மசாலாப் பொருட்கள் மற்றும் கலவைகள் தொடர்பான உத்திகளுக்கு உரிய செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த முறைமை மற்றும் உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள்.<br>(ii) திட்டமிடப்பட்ட இலக்குகள். |
| (இ) ஏற்றுமதி விவசாயப்பயிற்சி உற்பத்தி ஊக்குவிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மதிப்பீடு | (i) 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தின் 9 ஆம் பிரிவு.<br>(ii) 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை சட்டத்தின் 10 ஆம் பிரிவு. |

(iii) 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்யும் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தேசிய அறிவியல் அறக்கட்டளை நிறுவப்பட்டதன் நோக்கம்.

(iv) இலங்கை விஞ்ஞான ஆராய்ச்சிக் கொள்கைச் சபையினால் வெளியிடப்பட்டுள்ள விவசாய உயிரி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய ஆணைக் குழு அறிக்கையில் ஆராய்ச்சி முன்னுரிமை 2017 – 2021

(v) திட்டமிடப்பட்ட இலக்குகள்.

(vi) ஆராய்ச்சிகளில் வெற்றி நிலைக்கான சார்பு கொள்ளல்.

| | | |
|---|---|---|
| (ஈ) | ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை உற்பத்தியில் முன்னேற்றத்தை மதிப்பிடல். | (i) 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தின் 5 ஆம் பிரிவு.<br>(ii) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை.<br>(iii) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைச் சேவை பிரிவின் வழிகாட்டல்கள்.<br>(iv) பயிர்ச்செய்கை சார்ந்த தொழிலாளர்கள் / விவசாயிகள் போன்றோருக்கு பயிற்சி அளித்தல் தொடர்பான சுற்றறிக்கை.<br>(v) 2003 இன் 22 ஆம் இலக்க விதைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு.<br>(vi) திட்டமிடப்பட்ட இலக்குகள்.<br>(vii) தனியார் நாற்று மேடைகளைச் சார்ந்திருத்தல்.<br>(viii) நாற்று மேடைகளின் பராமரிப்புக்கான தரங்கள்.<br>(ix) நாற்று உற்பத்திக்காக எதிர்பார்க்கப்படும் மொத்த செலவு. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஏற்றுமதி விவசாய பயிர்ச்செய்கை ஏற்றுமதி தொடர்பாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல். | (i) | 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தின் 10 மற்றும் 15ஆம் பிரிவு. |
| | | (ii) | 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு. |
| | | (iii) | 1969 இன் 01 ஆம் இலக்க நிறுவன மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கட்டளைகள். |
| | | (iv) | திட்டமிடப்பட்ட இலக்குகள். |
| (ஊ) | ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை தொடர்பான உள்நாட்டு / வெளிநாட்டு சந்தைகள் தொடர்பான மதிப்பீடு. | (i) | 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு. |
| | | (ii) | இலங்கை மசாலாப் பொருட்கள் கைத்தொழிலின் சமூக - பொருளாதார நிலைமை மற்றும் தற்காலத்தில் அந்த கைத்தொழில் முகம் கொடுத்துள்ள சிக்கல் மற்றும் சாத்தியமான சிங்கள ஆராய்ச்சி அறிக்கை. |
| | | (iii) | 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 வது துணைப் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள் விற்பனை சபை அமைப்பதற்கான செயற்பாடுகள். |
| | | (iv) | திட்டமிடப்பட்ட இலக்குகள். |

### 2.4 கணக்காய்வு முறைமைகள்

இந்தக் கணக்காய்விற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

(அ) ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் அரச நிறுவனங்களில் அது கூடிய முகாமைத்துவம் மற்றும் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுதல், வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றைப் பகுப்பாய்வு செய்தல்.

(ஆ) விவசாய உற்பத்தி ஏற்றுமதியுடன் தொடர்புடைய கட்டளைச் சட்டங்கள், வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகள், ஆலோசனைக் கடிதங்கள் போன்றவற்றை ஏற்புடையதா என்பதை பரீட்சிப்பு செய்தல்.

(இ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், இலங்கை சுங்கம், மக்கள் தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் போன்ற நிறுவனங்களில் சிறு ஏற்றுமதி பயிர்ச் செய்கை தொடர்பான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல், அந்த தரவுகளின் உண்மைத் தன்மையை ஒவ்வொரு நிறுவனங்களுடனும் ஒப்பீடு செய்தல்.

(ஈ) ஏற்றுமதி விவசாய உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுடன் கலந்துரையாடுதல், தகவல்களைக் கோருதல், தற்போது இடம்பெற்றுள்ள ஆராய்ச்சி அறிக்கைகளை ஆய்வு செய்தல் மற்றும் அவற்றின் நடைமுறை பாவனையை பரிட்சிப்பு செய்தல்.

(உ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை நிவாரணம் வழங்கப்படுவதன் நிலைமையை பரிட்சிப்பு செய்தல்.

(எ) ஏற்றுமதி விவசாய துறையில் ஈடுபட்டுள்ள தனியார் துறையினரை சந்தித்து கலந்துரையாடுதல் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல் (விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள், உள்நாட்டு விற்பனை முகவர்கள் போன்றோர்)

(ஏ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மூலம் சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கையாக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மற்றும் அந்த நிறுவனத்தின் மூலம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள கறுவா, மிளகு, ஏலம், கரம்பு, சாதிக்காய் கோப்பி, கொக்கோ, வெனிலா வெற்றிலை, கற்பூர புல், லெமன் கிராஸ், இஞ்சி, மஞ்சள், கொரக்காப்புளி மற்றும் பாக்கு போன்ற பாரம்பரிய விவசாயப் பயிர்ச்செய்கைகளில் உள்நாட்டு சந்தை தொடர்பான தகவல்களை ஆராய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

(ஒ) சிறு ஏற்றுமதி பயிர்ச் செய்கை தொடர்பாக வெளிநாட்டு சந்தை ஊக்குவிப்பை ஆராய்தல்.

(ஓ) ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், விற்பனை மத்திய நிலையங்கள் போன்றவற்றை பௌதீக ரீதியில் பரீட்சிப்பு செய்தல் மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்ளுதல்.

(ஔ) ஏற்றுமதி விவசாயத்துறை தொடர்பில் தர்க்க ரீதியாக செய்தித்தாள் / சஞ்சிகை கடிதம், இணையதள தகவல்கள், தொடர்புடைய நபர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் என்பவற்றை கணக்காய்விற்காக பொருத்தமான முறையில் இணைத்துக் கொள்ளுதல்.

## 2.5 கணக்காய்வு விடயப்பரப்பு மற்றும் விடயப்பரப்பினை எல்லைப்படுத்துதல்

### 2.5.1 கணக்காய்வு விடயப்பரப்பு

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மூலம் ஏற்றுமதி விவசாயப் பயிற்செய்கைளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மற்றும் அந்த நிறுவனத்தின் மூலம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள கறுவா, மிளகு, ஏலம், கரம்பு, சாதிக்காய், கோப்பி, கொக்கோ, வெனிலா, வெற்றிலை, கற்பூர புல், லெமன் கிராஸ், இஞ்சி, மஞ்சள், கொரக்காப்புளி மற்றும் பாக்கு போன்ற 15 விவசாயப் பயிர்ச்செய்கைகள் தொடர்பில் விசேடமாக இந்த கணக்காய்வில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு மேலதிகமாக விவசாயத் திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை, ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வணிக திணைக்களம், இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் மசாலா பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்தி விற்பனை சபை போன்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளுக்கு ஏற்ப ஏற்றுமதி விவசாயப்பயிற்சி ஊக்குவிப்புக்காக நிறைவேற்றப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் மற்றும் தேசிய ஏற்றுமதி உத்திமுறைகள் - மசாலா பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்கள் தொடர்பான உத்திமுறைகள் 2018 - 2022 (National Export Strategy of Sri Lanka-spices and concentrates strategy 2018-2022) திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றம் இந்த கணக்காய்வில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### 2.5.2 கணக்காய்வு விடயப் பரப்பினை எல்லைப்படுத்துதல்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பிரதேச அலுவலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்களில் முன்னேற்றம் தொடர்பில் வினாக்கொத்து மூலம் பெற்றுக் கொள்ளுதல், ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தெரிவு செய்யப்பட்ட நாற்று மேடைகள், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி உருவாக்கும் நிறுவனங்களை பௌதீக ரீதியில் பரீட்சிப்பு செய்தல், ஏற்றுமதி விவசாயப் பயிர்களை பயிரிடும் நிறுவனங்களில் ஆராய்ச்சி அறிக்கை மற்றும் அவை சார்ந்த செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வினாக்கொத்துக்கள் மூலம் பெற்றுக் கொள்ளுதல், ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை தொடர்பாக தனியார் அமைப்புக்களின் தகவல்களை வினாக்கொத்துக்கள் மூலம் பெற்றுக்கொள்ளுதல் போன்ற முறைமைகளைப் பின்பற்றுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தனியார் நிறுவனங்களில் மற்றும் விவசாய அமைப்புகளின் உற்பத்தி தகவல்கள் குறைந்த அளவில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மொத்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இங்கு ஒரு சில தனியார் நிறுவனங்களிடமிருந்து தகவல்களைக் கோருதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒரு சில நிறுவனங்கள் கணக்காய்வுக்கு பதில் வழங்கியிருக்கவில்லை. அதே போன்று இந்த கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியினுள் கொவிட் 19 தொற்று நிலைமை, எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டதனால் ஒரு சில நிறுவனங்களுக்கு பௌதீக ரீதியில் செல்லுவதற்கு முடியாதிருந்ததுடன் கடிதங்கள் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் மேற்கொள்ளப்பட்டது.

## 2.6 கணக்காய்விற்கான அதிகார பலம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 3(1) (ஈ), 5(2) மற்றும் 12(ஏ) பிரிவுகளின் பிரகாரம் தலைமையின் கீழ் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 03. விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள்

### 3.1 நிறுவன ரீதியான பின்புலம் மற்றும் அடிப்படை திட்டங்கள்

#### 3.1.1 ஏற்றுமதி விவசாயம் தொடர்பான தேசிய கொள்கையின் தேவைப்பாடு

ஏற்றுமதி விவசாயப் பயிர்களில் பெரும்பாலானவை பல்லாண்டு பயிர்களாக உள்ளதுடன் உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பு செய்தலுக்காக நீண்டகால வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு பயிர்ச்செய்கை திட்டத்திற்கு ஏற்ப செயற்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது. 2010 ஆம் தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் உரித்தாக இருந்த அமைச்சானது 6 தடவைகளில் மாற்றப்பட்டு இருந்ததுடன் அந்த அமைச்சினால் முன்னுரிமை தெரிவிக்கப்பட்டு இருந்த துறைகளும் மாற்றப்பட்டு இருந்தன. அதற்கமைய “நாங்கள் வளர்ப்போம் - நாட்டை உயர்த்துவோம்” வேலைத் திட்டம், இயற்கை உரம் ஊக்குவிப்பு வேலைத் திட்டம், திவி நெகும வீட்டுத் தோட்ட வேலைத் திட்டம், தனசவிய வீட்டுத்தோட்ட வேலைத் திட்டம், காளான் வளர்ப்பு வேலைத் திட்டம், அன்னாசி பயிரிடல் வேலைத் திட்டம், தேனி கட்டுப்பாட்டு உபகரணங்கள் வழங்குதல், மஞ்சள் மற்றும் இஞ்சி நாற்றுக்களை விநியோகிக்கும் வேலைத் திட்டம், ஏற்றுமதி விவசாய வலய வேலைத் திட்டம் போன்ற வேலைத் திட்டங்கள் குறுகிய கால ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன. இலங்கையினுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை வளர்ப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் கொள்கை ரீதியாக நீண்ட காலம் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் மீள் ஏற்றுமதி, இறக்குமதியினை தடை செய்தல், தடை செய்யப்பட்ட பயிர்கள் மீண்டும் குறுகிய காலத்தினுள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குதல் போன்ற கடந்த பத்தாண்டு காலப் பகுதியினுள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றத்திற்கு உள்ளாகி இருந்தன. தற்போதைய காலம் வரையிலும் 15 ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் அடையாளம் காணப்பட்டு ஊக்குவிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஏற்றுமதி ஆற்றலுடன் கூடிய பயிர்கள் அடையாளம் காணப்பட்டு இருந்த போதிலும் அவற்றை ஊக்குவிப்பதற்கு முறையான நீண்டகால வேலைத் திட்டங்கள் காணப்படவில்லை. தற்போதைய காலம் வரையிலும் கறுவா பயிர் தென்மாகாணம் மற்றும் இரத்தினபுரி மாவட்டம் உள்ளிட்ட நாட்டின் வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் பாரிய நிலப்பரப்பில் பரந்து காணப்படுவதால் அந்தப் பிரதேசங்களில் மேலும் பயர்செய்கைக்காக ஈடுபடுத்தப்படக்கூடிய நில அளவு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளதால் நிலத்தின் உற்பத்தி திறனை அதிகரித்துக் கொள்ளுவது அத்தியாவசியமாகும். அவ்வாறிருக்க நிலையான பயிர்செய்கைக்காக ஈடுபடுத்தப்படாது காணிகள் பாரிய அளவில் காணப்படுவதுடன் பொலநறுவை, அனுராதபுரம், வவுனியா, அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் நீர் வழங்கலை மேற்கொள்ளக்கூடிய பிரதேசங்களில் கறுவா பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்ள கூடியதாக இருந்த போதிலும் பயிர் ஊக்குவிப்பு தொடர்பில் கவனத்தில் கொள்ளத்தக்க முதலீடு மேற்கொள்ளப்படாமை போன்ற காரணிகள் காரணமாக தேசிய கொள்கை ஒன்றின் தேவைப்பாட்டைத் தெளிவாகக் காண முடிகின்றது.

### 3.1.2 கொள்கை உருவாக்கலுக்கு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பங்களிப்பு

1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தின் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துதல், தேசிய ரீதியாக செயற்படுத்தப்பட வேண்டிய வேலைத் திட்டங்களின் திட்டங்களை தயாரிக்கும் போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஒரு தரப்பினராகப் பங்குபற்றி இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட உத்திவழிமுறை திட்டத்தினுள் தேசிய ஏற்றுமதி உத்திமுறை - மசாலா பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தொடர்பான திட்டம் (National Export Stratergy of Sri Lanka-Spices and Concentrates Stratergy 2018-2022), இலங்கையில் கறுவா, மிளகு மற்றும் ஏழாம் பெறுமதி சேர் பகுப்பாய்வு (Analysis of Cinnamon, Pepper and Carsamom value chains in Sri Lanka) போன்றவற்றை தயாரிப்பதற்கு நிறுவனம் பங்களிப்பு செய்து இருந்ததுடன் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பான பெறுமதி தொடரில் பங்குதாரர்களின் பதிவு, புவியியல் சுட்டி என்பவற்றுக்கு உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உடன்படிக்கை செய்து உற்பத்தியினை விற்பனை செய்து கொள்வனவு செய்தலுக்கு ஈடுபடுத்துதல், சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP), சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல், புதிய வகைகள் மற்றும் தொழில்நுட்ப முறைமைகளை விவசாயிகள் இடையே பிரபல்யப்படுத்துதல் போன்ற உத்திமுறைகள் மற்றும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திடம் இருந்து போதிய அளவு பங்களிப்பு கிடைத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டம்

#### 3.1.3.1 சட்டத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல்

1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டு 2022 ஆம் ஆண்டு வரையில் சுமார் 30 வருடங்கள் கடந்து உள்ளன. இந்த சட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 15 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் தொடர்பில் கட்டளைகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

- அறிவிக்கப்பட்ட விவசாயபயிர்ச் செய்கையாளர்களுடன் அந்த பயிர்ச்செய்கை தொடர்பாக உள்ளடக்கப்பட வேண்டிய ஒப்பந்தங்களின் வடிவங்களை தீர்மானித்தல்.
- அறிவிக்கப்பட்ட விவசாயப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு விரிவாக்கம் சேவைகளை வழங்குவதற்கான ஒழுங்குகளை தயாரித்தல்.
- அறிவிக்கப்பட்ட விவசாயப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் மற்றும் தயாரிக்கும் நபர்களுக்கு, நிவாரணம் மற்றும் நிதி உதவி அல்லது வேறு வடிவத்திலான உதவிகளை வழங்குவதற்கான யோசனை முறைமைகளுக்கான ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தல்.
- அறிவிக்கப்பட்ட விவசாயப் பயிர்ச்செய்கை, தயாரித்தல் மற்றும் விற்பனை தொடர்பான தகவல்களை விநியோகிக்கும் யோசனைத் திட்டத்திற்கான ஒழுங்கு விதிகளை தயாரித்தல்.
- அறிவிக்கப்பட்ட விவசாயப் பயிர்களுக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டிய தரங்கள் தொடர்பான தரத்தினை தீர்மானித்தல்.
- இந்த சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட வேண்டியது என நிச்சயிக்கப்பட்ட ஏதேனும் காரணத்திற்காக அல்லது கட்டளை தயாரிப்பதற்கு இந்த சட்டத்தின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் காரணத்திற்காக ஒழுங்கு விதிகளை தயாரித்தல்.

(ஆ) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்கு அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் அனைத்து அறிவிக்கப்பட்ட விவசாயப் பயிர்களுக்குமான நிதி விடயப் பொறுப்பு அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையில் தீர்மானிக்கப்பட கூடிய ஏதேனும் முறையில் அல்லது தொகையில் செஸ்வரி விதிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும் அவ்வாறான செஸ்வரி விதிக்கப்பட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

**3.1.3.2 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தினை திருத்தம் செய்தல்**

(அ) 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தினுள் காணப்படும் குறைபாடுகளான ஏற்றுமதி விவசாயப்பயிர் தொடர்பான விளக்கம் தெரிவித்தல் நடைமுறையில் சாத்தியப்படாமை, பணிப்பாளர் போன்ற பதவிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் நாயகம் பதவி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமை, விதை மற்றும் நாற்றுப் பொருட்களைக் கையாளுதல் தொடர்பில் விதைகள் சட்டத்தின் கீழ் ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகம் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தராக பெயரிடப்பட்டு இருக்காமை. செயற்பாடுகள் மிகவும் விரிவாக தெளிவாக தெரிவிக்கப்பட்டு இருக்காமை போன்ற குறைபாடுகள் உள்ளிட்ட 20 பிரிவுகளில் திருத்தங்கள் உள்ளிட்ட ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு திருத்தம் சட்டம் தயாரிக்கப்பட்டு இருந்தபோதிலும் சட்ட ரீதியாக சட்டம் திருத்தம் செய்வதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. இந்த சட்டத்தினுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பு செய்தலுக்கு தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

- ஏற்றுமதி விவசாயத்துறைக்கு பொருத்தமானது என கருதப்படும் வழிவகைகளை மேற்கொள்வதற்கு ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரங்களை வழங்குவது நோக்கமாகும்.
- 2003 இன் 22 ஆம் இலக்க விதைகள் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தராக கடமையாற்றுதல்.
- 1999 இன் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்பு சட்டத்தில் உத்தியோகத்தராக கடமையாற்றுதல்.
- 1951 இன் 25 ஆம் இலக்க மண் பாதுகாப்பு சட்டத்தின் உத்தியோகத்தராக கடமை ஆற்றுதல்.
- 2 ஹெக்டயரை விட அதிகமான ஏற்றுமதி விவசாயப் பயிற்செய்கை மேற்கொண்டுள்ள காணிகளை துண்டாடுவதற்கு மற்றும் வேறு செயல்களுக்காக பயன்படுத்துவதற்கு பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
- 1992 இன் 46 ஆம் இலக்க சட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்த செஸ்வரிக்குப் பதிலாக வேறு வரியினை விதித்தல்.
- ஏற்றுமதி விவசாயப்பயிர் உற்பத்தி அமைப்பினை தாபித்தல்.
- வருடாந்த உற்பத்தியில் பெருமளவுத் தொகையினை ஏற்றுமதி செய்யும் அல்லது ஏற்றுமதி செய்வதற்கு ஆற்றல் உள்ள பயிர்கள் குறிப்பிடப்படுகிறது.

(ஆ) மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த பயிர்ச் செய்கைகளில் இருந்து தேசிய வருமானத்துக்கு கிடைக்கும் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்துச் செல்லுவதற்கு அந்தத் துறையில் மேலதிக அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மிகவும் வினைத்திறனாகவும் மற்றும் விரிவாகவும் மேற்கொள்ளப்படுவதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு போதிய அளவு நிதி 1992 இன் 46 ஆம் இலக்க சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதைக் காணக்கூடியதாக உள்ளதுடன் 2009 ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்ததினைத் திருத்தம் செய்வதற்கு அப்போதைய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2009 செப்டம்பர் 29ஆம் திகதி இடப்பட்ட பத்திரத்திற்கு 2009 ஒக்டோபர் 28 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேவையான திருத்தங்களுக்கான சட்டத்தினை உருவாக்குவதற்கு சட்ட வரைவாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது என்பதும் அதற்கமைய திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட வரைவு சட்ட வரைவாக்கல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இணக்கப்பாட்டினை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் அமைச்சுகள் அவ்வப்போது மாற்றப்பட்ட காரணத்தால் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 செப்டம்பர் மாதம் தொடக்கம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் முதன்மை கைத்தொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தின் திருத்தத்திற்காக 03/2017 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் 7 முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் 2017 ஜூலை 20 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு 2019 அக்டோபர் 28 ஆம் திகதி ஜனாதிபதி அவர்களின் அவதானிப்பு, நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரின் அவதானிப்பு என்பவை கவனத்தில் கொள்ளப்பட்டதன் பின்னர் அமைச்சரவை பத்திரத்தின் காரணிகளைக் கவனத்தில் கொள்ளுவதற்காக 5 அமைச்சர்களின் பங்களிப்புடன் 3 வார காலத்தினுள் பரிந்துரைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது.

குறித்த பரிந்துரைகளை அமைச்சரவையிடம் சமர்ப்பித்தல் மற்றும் சட்டத்தினை திருத்துதல் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் 2022 செப்டம்பர் 2 ஆம் திகதி கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

### 3.1.4 2018 - 2022 ஆம் ஆண்டுகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய ஏற்றுமதி சுட்டி முறைகள் திட்டத்தில் மசாலாப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் பிரிவுக்கான திட்டம்

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் அபிவிருத்தி உத்தி முறைகள் மற்றும் சர்வதேச சந்தை அமைச்சு என்பவற்றுடன் இணைந்து European Union இன் நிதி உதவியுடன் மற்றும் ITC நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் 5 ஆண்டுகளுக்கான (2018 - 2022) தேசிய ஏற்றுமதி உத்தி முறைகள் (NES) தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு 2018 ஜுலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. இங்கு 2022 ஆம் ஆண்டு வரையிலும் உற்பத்தி பல்வகைப்படுத்தலை நோக்காகக் கொண்ட தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா கைத்தொழில், மசாலா பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள், படகு உற்பத்தி, பொதியிடப்பட்ட உணவு மற்றும் குடிவகை மற்றும் இலத்திரனியல் மற்றும் மின் சாதன பொருட்கள் போன்றவற்றை இலக்காகக் கொண்டு 6 பிரிவுகளில் மற்றும் சந்தை தகவல்கள் மற்றும் ஊக்குவிப்பு, தேசிய நிலைமை உட்கட்டமைப்பு வசதிகள் விநியோக சேவை, மற்றும் புதிய உற்பத்திகள் மற்றும் தொழில் முனைவு போன்ற 04 சந்தை உதவி செயற்பாடுகளுக்கு இந்த உத்தி முறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் மசாலா பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்களுக்கான உத்தி முறைகள் திட்டத்தில் மசாலா பொருட்கள் பிரிவை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு பெறுமதி சேர்த்தல் மற்றும் சந்தை அபிவிருத்தியை தீவிரப்படுத்துவதற்கு, அரச மற்றும் தனியார் கைத்தொழில் முகவர்களால் மிகவும் அழுத்தமான சிக்கல்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- அதிகளவு அறுவடையை பெற்றுக் கொடுக்கும் நாற்றுக்களின் தொகை வரம்புக்கு உட்பட்டு இருத்தல், குறைந்த சார்புடைய உத்தி முறைகளின் பாவனை என்பன மந்தமான உற்பத்தி திறனை ஏற்படுத்துவதற்கு மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட வகைகளின் குறைந்த அளவு பாவனையில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதும்
- சிறந்த முறையிலான பொதியிடல் மற்றும் பெயர் சீட்டு இல்லாமை
- வரையறுக்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்கள் மூலம் ஏற்படும் பயிற்சி மற்றும் பயிற்சி அற்ற தொழிலாளர்கள் போதிய அளவில் இல்லாமை
- உற்பத்தி மற்றும் பொதியிடல் மட்டத்தில் தரம் மற்றும் நடத்தை முறை நடைமுறைப்படுத்தல் போதிய அளவில் இல்லாமை, அரச மற்றும் தனியார் பிரிவுகளுக்கு இடையே மட்டுப்படுத்தப்பட்ட தொடர்பு
- சந்தை தகவல்கள் பலவீனமான முறையில் விநியோகிக்கப்படுதல், வரையறுக்கப்பட்ட விளம்பரங்கள் மற்றும் சந்தையில் மசாலா பொருட்களுக்கான வியாபார பெயர் போதிய அளவு பிரசித்தி பெறாது இருத்தல்
- உற்பத்தியாளர்கள், பொதியிடுவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் என்பவர்களுக்கு இடையே ஒப்பந்த விவசாய முறை மட்டுப்படுத்தப்பட்டு இருத்தல்

- மட்டுப்படுத்தப்பட்ட அறுவடை களஞ்சிய வசதிகள், அறுவடைக்குப் பின்னரான சேதங்கள் அதிக பெறுமதியை கொண்டிருத்தல், மற்றும் குறைந்த மட்ட தொழில்நுட்பம் மற்றும் இயந்திர முறைகளை பயன்படுத்துதல்

இவற்றில் மசாலா பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்களுக்கான உத்தி முறைகளை திட்டமிடல் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மசாலாப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்களுக்கான மூலோபாய திட்டத்திற்கு அமைய புவியியல் மசாலாப் பொருள் சந்தையில் வருடாந்தம் 5 சதவீதம் மற்றும் 2020 ஆம் ஆண்டு அளவில் அமெரிக்க டொலர் 10 மில்லியன் வரையிலும் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது என்பதும் ஆசிய பசுபிக் வலயத்தில் மட்டும் வருடாந்தம் 7 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு உள்ளது என்பதும் கணிக்கப்பட்டு இருந்தது. அதே போன்று இந்தத் துறையில் நிலவும் சந்தை சந்தர்ப்பங்கள் தொடர்பில் அடையாளம் காணப்பட்டு இருந்ததுடன் புதிய சர்வதேச சந்தைனுள் நுழைவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. உதாரணமாக இந்தியாவில் அழகுக்கலை பொருட்களுக்கு மட்டுமான சந்தை அமெரிக்க டொலர் 950 மில்லியன் மட்டும் என்பதும் வருடத்திற்கு 15 சதவீதம் தொடக்கம் 20 சதவீதம் வரையிலான அதிகரிப்பு உள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையினன் ஏற்றுமதி இலக்கிற்கு அமைய மசாலா பொருட்கள் மற்றும் வாசனை எண்ணெய் சார்ந்த ஏற்றுமதி வருமானம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே அமெரிக்க டொலர் 727 மில்லியன் மற்றும் அமெரிக்க டொலர் 800 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஈட்டப்பட்டிருந்த ஏற்றுமதி வருமானம் முறையே அமெரிக்க டொலர் 335 மில்லியன் மற்றும் அமெரிக்க டொலர் 456 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டது. அது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் 46 சதவீதம் மற்றும் 57 சதவீதம் மட்டுமே ஆகும். இந்த உத்தி முறைகளை தயாரித்தல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதான நோக்கத்தினை எட்டுவதற்கு தவறியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இந்த உத்தி முறை திட்டத்தில் 2018-2022 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு திட்டத்திற்கு அமைய ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2018 பெப்ரவரி 21 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2059/36 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 21 அங்கத்தவர்களைக் கொண்ட மசாலா பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள் தொடர்பான ஆலோசனை சபை 3 ஆண்டு காலத்திற்கு நிறுவப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையாணன முதலாவது காலாண்டு வரையில் 20 கூட்டத் தொடர்கள் நடத்தப்பட்டு இருந்தன. இங்கு மசாலாப் பொருட்களுக்கான இலங்கையின் தரங்களை மீண்டும் தாபித்தல், கறுவாவுக்கான புவியியல் சுட்டியை பெற்றுக் கொள்ளுதல், Pure Ceylon Cinnamon இலச்சினையை ஊக்குவிப்பு செய்தல், புவியியல் சுட்டி மற்றும் மசாலா பொருட்களுக்கான சந்தை புள்ளிகளுக்கு தேவையான வகையில் தரங்களை தாபித்தல், சிறந்த விவசாய மற்றும் உற்பத்தி நடைமுறைகளை தயாரித்தல் மற்றும் அறிமுகப்படுத்துதல், மசாலா பொருட்களுக்கான தொழில்நுட்பத்தில் உயர் தரத்திலான நாற்று மேடைகளை முறையாகத் தாபிப்பதற்கு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கீட்டை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அந்த வேலைத் திட்டங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன. இந்தக் கூட்டத் தொடர்களை நடத்துவதற்காக ரூபா 372,000 நிதி செலவிடப்பட்டிருந்தது.

(ii) ஏற்றுமதியாளர்களுக்காக பயிற்சி வேலைத் திட்டங்களை நடத்துவது இந்த திட்டத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்த மற்றுமொரு கடமை ஆகும். 2019 ஆம் ஆண்டில் சிறிய அளவிலான ஏற்றுமதியாளர்களை இலக்காகக் கொண்டு ஐரோப்பிய சந்தையில் நுழைவதற்கான பயிற்சி வேலைத் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டு இருந்தது. சிறிய அளவிலான மற்றும் நடுத்தர அளவிலான ஏற்றுமதியாளர்கள் மற்றும் புதிய ஏற்றுமதியாளர்களை இலக்காகக் கொண்டு 2020 ஆம் ஆண்டில் வழிகாட்டல் முறையின் ஊடாக ஜப்பான், ரஷ்யா, அவுஸ்திரேலியா போன்ற சந்தைகளில் நுழைதல் தொடர்பாக மற்றும் ஐரோப்பிய சந்தைகளுக்கு நுழைதல் தொடர்பாக 02 வேலைத் திட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டு இருந்தன. 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டுக்காக அவ்வாறான பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டு இருக்கவில்லை.

(iii) இந்த வேலைத் திட்டத்திற்கு அமைய 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் மசாலா பொருட்கள் துறை தொடர்பில் வருடாந்தம் 02 சந்தை அறிக்கைகள் வீதம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க ராஜ்ஜியம் தொடர்பாக மற்றும் கனடா சந்தை தொடர்பாக 02 அறிக்கைகள் மட்டுமே வழங்கப்பட்டு இருந்தன.

(iv) திட்டத்திற்கு அமைய 05 மசாலா பொருள் வகைகளுக்கு Ceylon Spice சந்தை பெயர் 2019 ஆம் ஆண்டில் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டு இருந்தது. எனினும் இங்கு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் இதுவரையிலும் பெற்றுக் கொள்ளப்படவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட போதிலும் Ceylon Spice சந்தை பெயரை ஜேர்மனியில் இடம்பெற்ற ANUGA விற்பனைக் கண்காட்சியில் அறிமுகப்படுத்துவதற்காக ரூபா 8 மில்லியன் செலவிடப்பட்டு இருந்தது.

(v) மேலும், கறுவாவிற்காக Pure Ceylon Cinnamon Logo பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்தது. 2019 ஆம் ஆண்டில் ரூபாய்.113,000 செலவிடப்பட்டு இந்த இலச்சினையின் முக்கியத்துவம் தொடர்பாக தெளிவுபடுத்தல் வேலைத்திட்டம் ஒன்று நடத்தப்பட்டு இருந்தது. பின்னர் 2020 ஆம் ஆண்டில் ஜப்பான், ரஷ்யா, அவுஸ்திரேலியா போன்ற சந்தைகளுக்கு நுழைதல் தொடர்பான வழிகாட்டல் முறைமைகளின் ஊடாக இடம்பெற்ற வேலைத்திட்டத்தில் இது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டு இருந்தது.

(vi) திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த வகையில் இந்த வியாபார குறிக்கான Tag line, image, brochure, website போன்றவற்றை தயாரிப்பதற்காக இதுவரையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(vii) திட்டத்திற்கு அமைய வியாபாரப் பெயர்களின் செயலாற்றலை உள்ளடக்கி அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வியாபாரக் குறியீடுகளை விற்பனை செய்தல் மற்றும் அவற்றை ஏற்றுமதியாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பான விபரங்கள் மட்டுமே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது.

(இ) இலங்கை மசாலா பொருட்களை உலகம் முழுவதும் பரப்புவதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் இந்த திட்டத்தின் மூலம் ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த கடமையாகும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| **செயற்பாடு** | **காலப்பகுதி** | **பெறுபேறு** | **மொத்த செலவு (ரூபா மில்லியன்)** |
|---|---|---|---|
| பெறுமதி சேர்க்கப்பட்ட மசாலா பொருட்களின் ஊக்குவிப்புக்காக B2B வேலைத் திட்டம்- ஜப்பான் | 2018 | ஜப்பானுக்காக இலங்கை கறுவா ஏற்றுமதி ஊக்குவிப்பு. வாசனை எண்ணெய் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியை ஆரம்பிப்பதற்கு ஏதுவாதல். | 1.9 |
| Supply Side West விற்பனைக் கண்காட்சி - ஐக்கிய அமெரிக்க ராஜ்ஜியம். | 2019 | அமெரிக்க டாலர் 10 மில்லியன் அளவில் ஏற்றுமதி வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்கு கொள்வனவாளார்களைச் சந்தித்தல். | 9.9 |
| Anuga விற்பனைக் கண்காட்சி - ஜேர்மனி | 2019 | அமெரிக்க டாலர் 05 மில்லியன் அளவில் ஏற்றுமதி வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்கு கொள்வனவாளார்களைச் சந்தித்தல். | 10 |

2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் நிலைமை காரணமாக விற்பனைக் கண்காட்சிகள் இடம்பெற்றிருக்கவில்லை என்பது தெரிவிக்கப்பட்டு இருந்தது.

### 3.1.6 ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான செயற்பாட்டுத் திட்டம்

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆம் ஆண்டுகளுக்கு மசாலா பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்களுக்கான செயற்பாட்டு திட்டங்களில் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2020 ஆம் ஆண்டில் ஜப்பான், பொதுநலவாய நாடுகள், கொரியா மற்றும் அசர்பய்ஜான் போன்ற நாடுகளுக்கான 04 சந்தை ஆராய்ச்சிகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் அந்த சந்தை அறிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது.

(ஆ) 2020 ஆம் ஆண்டில் ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு மாதிரி விளம்பர நடவடிக்கைகளுக்கான வசதிகளை வழங்குவதற்கு நிகழ்நிலை முறைமையின் ஊடாக இரண்டு B2B வேலைத் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் பாரம்பரியமற்ற ஏற்றுமதி ஐந்து சதவீதத்தினால் அதிகரித்துக் கொள்வதற்கும் மற்றும் சந்தை சந்தர்ப்பங்களை அதிகரிக்கச் செய்வதற்கும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் இந்த வேலைத் திட்டங்களுக்கு ஐந்து நிறுவனங்கள் மட்டுமே இணைந்திருந்தன.

(இ) உத்தியோகத்தர்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்கு IPD யுடன் ஒன்றிணைந்து ஐரோப்பாவில் விற்பனை ஊக்குவிப்பு வேலைத் திட்டங்கள் மற்றும் கல்வி சுற்றுலாக்களுக்கு (Study tours) பங்குபற்றுவதற்கு நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்காக EU வளையத்தில் விற்பனை கண்காட்சிகள் ஒழுங்கு செய்தல் தொடர்பாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் வேலைத்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டிருந்தது. அந்த வேலைத் திட்டத்தின் பின்னர் பயிற்சி அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் ஐரோப்பிய சந்தைகளில் விற்பனை ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களுக்கு பங்குபற்றும் ஏற்றுமதியாளர்களுக்காக முன் வேலைத் திட்டங்கள் (Pre fair workshop) நடாத்துதல் சிறந்த ஒரு போக்காகும்.

(ஈ) 2020 ஆம் ஆண்டு மூலிகை அழகு சாதன பொருட்கள் உற்பத்தி மற்றும் ஆயுர்வேத உற்பத்திக்காக SLS தர சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இதற்காக SLSI நிறுவனம் மற்றும் ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைந்து முன்னணி குழு ஒன்று அமைக்கப்பட்டு இருந்தது. 2022 ஜூன் 8 ஆம் திகதி வரையிலும் அந்த தரம் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

(உ) 2020 செயற்பாட்டு திட்டத்தினுள் மசாலா பொருட்கள் மற்றும் மூலிகை கன்றுகள் சார்ந்த ஏற்றுமதி பல்வகைமைக்காக ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகியோரை இணைக்கும் வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருந்தன. அவ்வாறான இரண்டு வேலைத் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்ததுடன் அதில் 25 ஏற்றுமதியாளர்களும் 35 உற்பத்தியாளர்களும் மட்டுமே பங்கு பற்றி இருந்தனர்.

(ஊ) பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி கைத்தொழிலை நோக்கி இடம்பெயர்வதற்காக மூலிகை அழகு சாதன பொருட்களின் உற்பத்திக்கு இலங்கைக்கான தரத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மருத்துவ பாதைகளை நடைமுறைப்படுத்துவதற்கு 2020 செயற்திட்டத்தினுள் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கமைய ஆயுர்வேத மற்றும் அழகு சாதன உற்பத்தி பிரிவினை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டம் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்றுமதி பொருட்கள் உற்பத்தி பிரிவாக அடையாளம் காணப்பட்டு 2021 ஆம் ஆண்டில் ஆலோசனை குழு ஒன்றை நியமித்திருந்தது. அந்த ஆலோசனை சபையில் முதலாவது கூட்டத்தின் போது மருத்துவ ரீதியாக உறுதி செய்யப்பட்ட தரங்களை தாபிப்பதன் தேவைப்பாடு கண்டறியப்பட்டிருந்தது. அதற்காக களனி பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் என்பவற்றுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது என கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதற்கான தரங்களை நிறுவுதல், ஆய்வுக்கூடங்களை நாட்டினுள் தாபித்தல், உறுதிப்படுத்தல்களை நாட்டினுள்ளேயே மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஜுன் 8 ஆம் திகதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

(v) பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி கைத்தொழிலை நோக்கி இடம்பெயர்வதற்காக ஆயுர்வேத பிரிவிற்கு புதிய உற்பத்திகளை சந்தைக்கு உட்பிரவேசிப்பதற்கு உள்ள (வரி அற்ற) சந்தை நுழைவு தடைகளை தீர்ப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் புதிய சந்தைகளுக்குள் நுழைதல் மற்றும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு 2020 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆயுர்வேத உற்பத்திகள் ஏற்றுமதி சந்தைக்கு அறிமுகப்படுத்தும்போது ஆயுர்வேத திணைக்களம் முறையாக பதிவு செய்யாமை கண்டறியப்பட்டிருந்தது. அதற்காக ஆயுர்வேத திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு பதிவு செய்தல் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஏற்றுமதி அபிவிருத்தி சபை கணக்காய்விற்கு தெரிவித்திருந்தது. அதேபோன்று ஆயுர்வேத உற்பத்திகளுக்கான தரம் இல்லாது இருந்தமையும் இதற்காக தடையாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதற்காக SLS மற்றும் ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) மூலிகை உற்பத்தி ஏற்றுமதி சந்தைக்கு அறிமுகப்படுத்தும் போது SLS தரம் பூரணப்படுத்தப்படாது இருந்தமை ஒரு தடையாக அடையாளம் காணப்பட்டிருந்தது. இதற்காக SLS நிறுவனத்துடன் ஒன்றிணைந்து அந்தத் தரத்தினை பூரண படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## 3.2 ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு நோக்கிலான ஆராய்ச்சிகள்

ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கைக்கு நாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்தல், பயிர்களைப் பயிரிடல் மற்றும் அறுவடையை அதிகரித்துக் கொள்ளுதல், அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பத்தை முன்னேற்றுதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேற்கொள்ளுதல், பொதியிடல், விற்பனை செய்தல் போன்ற அனைத்து துறைகளுக்கும் ஏற்பட்டுள்ள சிக்கல்களை அடையாளம் கண்டு முன்னுரிமைக்கு அமைய நிதி ஒதுக்கப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தேசிய ஆராய்ச்சி நிறுவனமாக கருதப்பட வேண்டியது என ஏற்றுமதி விவசாய கைத்தொழில் முன்னேற்ற சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனத்திற்கு சொந்தமான பிரதான ஆராய்ச்சி நிறுவனம் மாத்தளை ஆராய்ச்சி நிறுவனமாக உள்ளதுடன் அங்கு தாவர அறிவியல், மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்கம், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம், தாவர நோயியல், பௌதிக அறிவியல் மற்றும் நாற்று உற்பத்தி, பூச்சியியல் மற்றும் மண் அறிவியல் போன்ற ஆராய்ச்சிகள் 7 பிரிவின் கீழ் பல்வேறு துறைகளை உள்ளடக்கும் வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக குருணாகல், நாரம்மல, கம்பஹா வல்பிட்ட, மாத்தறை, பலொல்பிட்டிய போன்ற இடங்களில் உப ஆராய்ச்சி நிறுவனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பலோல்பிட்டிய தேசிய கறுவா ஆராய்ச்சி நிறுவனம் விசேடமானதாக உள்ளதுடன் கறுவா தொடர்பாக இடம்பெறும் ஒரே ஆராய்ச்சி நிறுவனமாகவும் உள்ளது. திணைக்களத்தின் வருடாந்த ஆண்டு திட்டத்தினுள் நிறுவனத்தின் அனைத்து ஆராய்ச்சி பிரிவுகளின் மூலமும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள ஆராய்ச்சிகளுக்கு உரிய பயிர்கள், ஆராய்ச்சி கால எல்லை மற்றும் எதிர்பார்க்கப்படும் பலன்கள் போன்றவை தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இலங்கை விவசாய கொள்கை சபையில் அமைக்கப்பட்டுள்ள தேசிய ஆராய்ச்சி குழுவின் மூலம் ஆராய்ச்சி முன்னுரிமை அடையாளம் காணப்படுதல் இடம்பெறுகின்றது. இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை, ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் மற்றும் தேசிய அறிவியல் அறக்கட்டளை ஆகிய 3 பிரதான ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் கிட்டிய 15 ஆண்டு கால பகுதிக்குள் 157 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதற்காக ரூபா.109.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை சார்ந்த பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.2.1 தேசிய ஆராய்ச்சி நிறுவனத்தின் தேவைப்பாடு

**இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் அவதானிக்கப்பட்டன**

அ. 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தேசிய ஆராய்ச்சி நிறுவனமாக பெயரிடப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினுள் 7 பிரிவுகளைக் கொண்ட மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் தாபிக்கப்பட்டு இருந்த போதிலும் தேசிய ஆராய்ச்சி நிறுவனமாக

கருதப்படுவதற்கு தேவையான அளவில் பௌதிக வசதிகள் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ஆ. ஏற்றுமதி விவசாயப பயிர்களை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியாக வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்குவதற்கு தேவையான திறன் காணப்பட்ட போதிலும் அதிக சதவீதமானது மூலப் பொருட்களாக ஏற்றுமதி செய்வதற்கு காரணமாக தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானகூட வசதிகள் தட்டுப்பாடாக உள்ளமை, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி தொடர்பான தொழில்நுட்ப அறிவினை வழங்குவதற்கு தொழில்நுட்ப உபகரணங்கள் தட்டுப்பாடாக உள்ளமை, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி இடம் பெற்று முறையான சந்தைக்கு வழங்குவதற்கு போதிய அளவு அறிவு மற்றும் நடைமுறை பயிற்சியினை பெற்று கொடுத்தல் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

இ. மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள மாத்தளை, கண்டி பிரதேசங்களை அண்மித்து ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தி சார்ந்த சிறு அளவிலான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் பாரிய தொகையினர் இருப்பதுடன் அவர்களது உற்பத்தியினை சரியான முறையில் உள்நாட்டு சந்தைக்கு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு வழங்கும் போது தரம் தொடர்பான சான்றிதழை பெற்றுக்கொள்ள கூடிய அரச நிறுவனம் அல்லது தனியார் நிறுவனம் அந்தப் பிரதேசத்தை அண்டி தாபிக்கப்பட்டு இருக்கவில்லை. தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு மாதிரிகளை எடுத்து கொழும்பு பிரதேசத்திற்கு வருவதற்கு பாரிய செலவு மற்றும் காலத்தை செலவிடுவதற்கு சிறு அளவிலான வியாபாரிகளுக்கு முடியாது இருத்தல், ஆராய்ச்சி பிரிவுகளின் தேவைப்பாடுகள் மற்றும் தரப்பினர்களின் பயிர் சார்ந்து காணப்படும் நோய்களை உடனடியாக அடையாளம் காண்பதற்குத் தேவையான பரீட்சிப்புகளை உடனடியாக மேற்கொள்ளுதல், மண் மாதிரிகளை பரீட்சிப்பு செய்து தேவையான உரக் கலவைகளை பரிந்துரை செய்தல், பயிர் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உருவாக்குதல், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தினை உறுதிப்படுத்தும் சான்றிதழை பெற்றுக் கொடுத்தல் (GAP, GMP, ISO, HACCP and organic certificates) போன்ற நடவடிக்கைகளுக்கு ஆய்வு கூட வசதிகள் அவசியமானது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான ஆராய்ச்சி வசதிகளை விரிவுபடுத்தலின் மூலம் உற்பத்திகளின் தரம் தொடர்பான சான்றிதழை வழங்குவதன் மூலம் நிறுவனத்திற்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ளக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் அவை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு சந்தை சந்தர்ப்பங்களை விரிவுபடுத்திக் கொள்வதற்கு முடியுமாக இருப்பதால் வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கும் வருமான உருவாக்கல் வழிகளை அதிகரித்துக் கொள்வதற்கும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை அதிக அளவில் உருவாக்குவதற்காள சந்தர்ப்பங்களும் ஏற்படும் என்பது அவதானிக்கப்பட்டது.

ஈ. இந்த ஆய்வு கூடங்களில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக தேவையான பௌதிக வசதிகளுடன் கூடிய விஞ்ஞான கூடத்தினை நிர்மாணிப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் ரூபா.277.75 மில்லியன் செயற்திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த முன்மொழிவு 2020 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலத்தினுள் தொடர்ச்சியாக 5 சந்தர்ப்பங்களில் அனுமதிக்காக வரவு செலவு மதிப்பீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்காக ரூபாய்.522 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதைய காலம் வரையிலும் தேசிய ஆராய்ச்சி தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

### 3.2.2 இலங்கை விவசாயக் கொள்கைச் சபை

இலங்கை விவசாய கொள்கைச் சபையானது ஆராய்ச்சி செயற்திட்டம் / வேலைத் திட்டம் என்பவற்றுக்கு நிதி வழங்குதல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான முன்னுரிமை துறைகளில் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி தொடர்பில் ஊக்குவிப்பு செய்தல் என்பவற்றுக்கான ஆலோசனை திறன் கொண்ட அமைப்பாக சேவையாற்றுகின்றது. ஆவணப்படுத்துதல் மூலம் விவசாய ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தல், ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பு செய்தல் மற்றும் வசதிகளை வழங்குதல் என்பவற்றுக்கு இந்த நிறுவனம் உதவி புரிகின்றது.

இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் மூலம் பல்வேறு துறைகள் உள்ளடக்கப்படும் வகையில் 6 ஆராய்ச்சி குழுக்கள் தாபிக்கப்பட்டு இருப்பதுடன் அவற்றின் மூலம் 13 ஆராய்ச்சி முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. இந்த ஆராய்ச்சி முன்னுரிமைகளுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையானது உள்ளடக்கப்படுவது விவசாய உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய ஆராய்ச்சி முன்னுரிமையின் கீழாகும்.

இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் விவசாய உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய குழுவினால் வெளியிடப்பட்டிருந்த விவசாய உயிரியல் தொழில்நுட்பத்தின் நூல் தேசிய ஆராய்ச்சி முன்னுரிமை 2017 - 2021 அறிக்கைக்கு அமைய நான்கு ஆராய்ச்சி முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அவையாவன,

i. முக்கியமான ஏற்றுமதி விவசாயப்பயிர்களின் மரபணு பண்புகளை அடையாளம் காணுதல்.

**ii.** மரபணு தொழில்நுட்பத்தின் மூலம் கறுவா பயிரில் பூச்சி மற்றும் நோய்களை அடையாளம் காணுதல்.

**iii.** கறுப்பு மிளகு மற்றும் கோப்பியில் கிருமிகளை எதிர்க்கும் திறனை வளர்த்தல்.

**iv.** மிளகு மற்றும் அரபிக் கோப்பி பாவனையில் biotic and abiotic வகைகளை உருவாக்குதல

விவசாயக் கொள்கை சபையின் விவசாய உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய குழுவிடம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி முன்மொழிவுகள் மற்றும் அந்த ஆராய்ச்சி முன்மொழிவுக்கு அமைய அந்த திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 24 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதற்காக ரூபாய்.45.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. விரிவான தகவல்கள் இணைப்பு இலக்கம் 01 இல் காட்டப்பட்டுள்ளது. இதற்கு உரிய அவதானிப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அமையும்.

(அ) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 10 ஆராய்ச்சி முன்மொழிவுகள் விவசாய கொள்கை சபையின் விவசாய உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. இந்த ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 21.6545 மில்லியன் ஆக இருந்தபோதிலும் அந்த ஆராய்ச்சியின் மூலம் குழுவினால் அடையாளம் காணப்பட்டிருந்த முன்னுரிமைகளுக்கு உரிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கமைய ஆராய்ச்சி முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்கு ஏற்ப ஆராய்ச்சி நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) விவசாய கொள்கை சபையின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் ஆராய்ச்சி முன்னுரிமைகளுக்கு அமைய ஆராய்ச்சி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்காததுடன் 2022 ஆம் ஆண்டுக்கு 7 ஆராய்ச்சி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் NARP வேலைத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினால் அந்த ஆராய்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(இ) நக்கில் பிரதேசத்தை சூழ்ந்து ஏலக்காய் பயிர்ச்செய்கையை அதிகரித்தல் மற்றும் உற்பத்தித் திறன் தொடர்பாக மூன்று வருட கால எல்லையை கொண்ட ஆராய்ச்சிக்காக விவசாய கொள்கை சபையினால் சர்வதேச பல்துறை ஆராய்ச்சி முன்மொழிவு முறைமையின் கீழ் ரூபாய்.1,030,000 நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கால எல்லைக்குள் நிதி கிடைக்காமல் மற்றும் போக்குவரத்து சிக்கல்கள்

காரணமாக 2022 ஆம் ஆண்டு வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை கட்டுவதற்கு முடியாது போயிருந்தது.

(ஈ) வெற்றிலைக்குப் பாரம்பரியமாக ஈடுபடுத்தும் நிழலின் மூலம் வெற்றிலையின் உற்பத்தித்திறன் மற்றும் வெற்றிலையின் தரம் என்பவற்றின் தாக்கம் தொடர்பிலான ஆராய்ச்சிக்காக 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 3 வருட கால எல்லைக்குள் ரூபாய்.4.625 மில்லியன் தொகை செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இறுதி அறிக்கை வழங்கப்பட்டு இருக்காத காரணத்தால் வெற்றிலை பயிர்ச்செய்கையில் நிழலின் மூலம் ஏற்படும் தாக்கம் தொடர்பான தகவல்கள் விவசாயிகள் மற்றும் அது தொடர்பாக ஆர்வம் காட்டும் தரப்பினருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு இன்னமும் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) வெளிநாட்டு சந்தைகளில் அதிக கேள்வி நிலவும் புதிய மிளகு வகையாக இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையினால் குறிப்பிடப்பட்டிருந்த KWW10, KWW12, UD21 ஆகிய மூன்று வகை பயிர்களுக்கும் பொருத்தமான பிரதேசத்தினை தீர்மானம் செய்வதற்காக விவசாயத் திணைக்களத்தின் மாத்தளை ஆராய்ச்சி நிறுவனத்தின் மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்க ஆராய்ச்சி பிரிவின் மூலம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மிளகு பயிர் செய்கையை அபிவிருத்தி செய்யும் பன்முக செயல் திட்டம் (Multi faceted) 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டு இருந்ததுடன் அதற்காக ரூபாய்.2,400,000 செலவிடப்பட்டிருந்தது. அந்த ஆராய்ச்சியின் மூலம் KWW-10 மற்றும் KWW-12 ஆகிய வகைகள் மாத்தளை, நில்ஓயா மற்றும் மித்தெனிய ஆகிய பிரதேசங்களுக்கு பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சி நிறைவடைந்து 4 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் இந்த வகைகளைப் பயிரிடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்க முடியாது போயுள்ளது.

### 3.2.3 தேசிய அறிவியல் அறக்கட்டளை மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்

1994 இன் 11 ஆம் இலக்க அறிவியல் தொழில்நுட்பம் அபிவிருத்தி செய்தல் சட்டத்தின் மூலம் தேசிய அறிவியல் அறக்கட்டளை தாபிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த நிறுவனத்தின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

- விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை என்பவற்றை பெற்றுக் கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் தேவையான ஒரு பகுதியாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப

பயன்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் வறுமையை ஒழித்தல் மற்றும் கொள்கையை உருவாக்கும் போது இலகு தீர்மானங்கள் எடுக்கும் போது விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோரை இணைத்துக் கொள்ளுதல்.

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாத்திய கூறுகள் தொடர்பான நம்பிக்கையை அதிகரிக்கும் நோக்கில் விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளில் அனைத்து பகுதிகளையும் ஊக்குவித்தல் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக மொத்த தேசிய உற்பத்தியில் நியாயமான சதவீதத்தினை ஒதுக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துதல்.

- கைத்தொழில், விவசாயம் மற்றும் சேவைகளை விரைவாக அபிவிருத்தி செய்தல் தொடர்பிலான தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்தல், ஈடுபடுத்துதல் மற்றும் சுவீகரித்தல் என்பவற்றை ஊக்குவிக்கும் போது முடியுமான எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உள்நாட்டு தொழில்நுட்ப அபிவிருத்தியில் இலகு உதவி புரியும் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவனம் செயற்படும்.

தேசிய அறிவியல் அறக்கட்டளையின் நிதி உதவியின் அடிப்படையில் 1975 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 46 வருட கால எல்லைக்குள் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், கொழும்பு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, ருஹுணு ஆகிய பல்கலைக்கழகங்கள் மற்றும் விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஆகிய பல்வேறு நிறுவனங்களின் மூலம் 10 ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கான 17 ஆராய்ச்சிகளுக்காக ரூபாய்.7,773,082 செலவிடப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான 11 வருட காலப் பகுதிக்குள் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக நிதி செலவிடப்பட்டிருக்கவில்லை. மஞ்சள் ஏற்றுமதியை நிறுத்தியிருந்தமையும், ஏற்றுமதி பயிர்களுக்கு இயற்கை உரத்தினை ஊக்குவித்தலையும் முக்கிய செயற்பாடுகளாக கருதி இஞ்சி மற்றும் மஞ்சள் தொடர்பான இரண்டு ஆராய்ச்சிகளுக்காக 2020 / 2021 ஆண்டுகளில் ரூபாய்.4,766,410 செலவிடப்பட்டிருந்தது. அதிக எண்ணிக்கையிலான ஆராய்ச்சிகள் கறுவா பயிர்ச்செய்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மொத்தமாக ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை மற்றும் ஆராய்ச்சிகளின் பலன்களை நடைமுறையில் ஈடுபடுத்துதல் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. விரிவான தகவல்கள் இணைப்பு இலக்கம் 02 இல் காட்டப்பட்டுள்ளன.

### 3.2.4 ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்

1992 இன் 46 ஆம் இலக்க விவசாயத் துறையினை மேம்படுத்தும் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவை தொடர்பான பயிற்சியை பெற்று கொடுத்தல் தொடர்பில் பணிப்பாளர் பொறுப்புக்கூற வேண்டியதுடன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தேசிய ஆராய்ச்சி நிறுவனமாக பெயரிடப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கமைய ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் சார்ந்த ஆராய்ச்சிகள் தொடர்பாக பாரிய பொறுப்பு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருந்ததுடன் அதற்காக மாத்தளை பிரதான ஆராய்ச்சி நிறுவனத்தின் 7 ஆராய்ச்சி பிரிவுகளின் கீழ் பல்வேறு துறைகளை உள்ளடக்கும் வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குருணாகலை, நாரம்மல ஊடு பயிர்கள் மற்றும் வெற்றிலை என்பவற்றுக்கான ஆராய்ச்சி நிறுவனமாகவும், கம்பஹா வல்பிட்ட இழைய வளர்ப்பு மற்றும் தாவர இனப்பெருக்க மத்திய நிலையமாகவும், மாத்தறை, பலொல்பிட்டிய தேசிய கறுவா ஆராய்ச்சி நிறுவனமாகவும், குண்டசாலை நிலம்பை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் துணை ஆராய்ச்சி நிறுவனங்களும் தாபிக்கப்பட்டு இருந்தன. உரிய விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 14 ஆண்டு கால எல்லைக்குள் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து ஆராய்ச்சி பிரிவுகளிலும் இருந்து 116 ஆராய்ச்சிகளுக்காக ரூபாய்.55,682,448 நிதி கோரப்பட்டு இருந்ததுடன் அதற்காக ரூபாய்.56,598,331 நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றிருந்ததுடன் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபாய்.21,633,496 தொகை ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்டிருந்தது. இந்த காலப்பகுதியினுள் 56 ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டு இருந்ததுடன் மேலும் 60 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான தகவல்கள் இணைப்பு 3 இல் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் இலங்கை விவசாய கொள்கை சபையிடம் சமர்ப்பித்திருந்த 7 ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்காக ரூபாய்.16,721,750 நிதி கோரப்பட்டிருந்த போதிலும் அந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு வேறாக அடையாளம் காணக்கூடிய வகையிலான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. மொத்த திணைக்களத்திற்காகவும் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட நிதியினுள் இந்த ஆராய்ச்சிக்கான நிதி உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் ஆராய்ச்சிக்கு போதுமான நிதி கிடைக்காத காரணத்தால் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தமை, கள ஆராய்ச்சியை சரியான முறையில் மேற்கொள்ள முடியாதிருந்தமை போன்ற காரணங்களினால் ஆராய்ச்சி பெறுபேறுகளின் தரம் தொடர்பில் திருப்தியற்ற தாக்கம் ஒன்று ஏற்படுதல் மற்றும் ஆராய்ச்சிகள் குறித்த காலப் பகுதியினுள் நிறைவு செய்வதற்கு முடியாதிருந்தது என கணக்காய்வுக்கு தகவல்கள் கிடைத்திருந்தன. மேலே கூறப்பட்ட ஆராய்ச்சிகளுள் மிளகு பயிர்ச்செய்கை

சார்ந்த 4 ஆராய்ச்சிகள், கொரக்காப்புளி சார்ந்த 2 ஆராய்ச்சிகள் மற்றும் கொக்கோ சார்ந்த ஒரு ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.2.5. மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்

மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிறுவனம் தாவர அறிவியல் பிரிவு, மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்கப் பிரிவு, அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பப் பிரிவு, தாவர நோயியல் பிரிவு, பௌதிக அறிவியல் மற்றும் நாற்று உற்பத்திப் பிரிவு, பூச்சியியல் மற்றும் மண் அறிவியல் பிரிவு ஆகிய 7 ஆராய்ச்சி பிரிவுகளை கொண்டதாக உள்ளதுடன் அந்த ஆராய்ச்சி பிரிவுகளினால் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 119 ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டு 58 ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டு இன்னமும் 61 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் இணைப்பு இலக்கம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தாவர அறிவியல் பிரிவினால் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்ட பாக்கு, இஞ்சி, சாதிக்காய், மிளகு சார்ந்த 7 ஆராய்ச்சிகளுக்காக ரூபாய்.7,746,546 இற்கான நிதி கோரப்பட்டு இருந்ததுடன் அந்த ஆராய்ச்சிகளுக்கு செலவிடப்பட்ட தொகை தொடர்பாக கணக்காய்வுக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஆராய்ச்சிகளுள் 5 ஆராய்ச்சிகள் பாக்கு மற்றும் இஞ்சி பயிர் சார்ந்த செய்கைக்கு பொருத்தமான விதைகளின் அளவு, காலத்தினை தீர்மானித்தல் மற்றும் பொருத்தமான நீர் வழங்கலை தீர்மானித்தல் தொடர்பான ஆராய்ச்சியாக உள்ளதுடன் பாக்கு தொடர்பான ஆராய்ச்சிகள் 2023 ஆம் ஆண்டு வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இஞ்சி பயிர் மற்றும் பதப்படுத்தல் தொடர்பான அறிக்கை ஒன்று 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு இருந்ததுடன் அதில் இஞ்சி விதையினை நடுவதற்கு விதைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான அறுவடை செய்யும் காலம் தொடர்பாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த ஆராய்ச்சியின் மூலம் இஞ்சி விதையினை நடுவதற்காக விதைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான அறுவடை செய்யும் காலம் தொடர்பான ஆராய்ச்சி பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு தரப்பினர்களுக்கு பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இந்த ஆராய்ச்சி ஏற்றுமதி விவசாயப்பயிர் சார்ந்த முன்னுரிமையை வெளிப்படுத்த வேண்டும் என விவசாய கொள்கை சபையினால் அடையாளம் காணப்பட்டுள்ள ஆராய்ச்சி அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்க பிரிவின் மூலம் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை 20 ஆக உள்ளதுடன் அவற்றுக்காக ரூபாய்.24,121,991 நிதி கோரப்பட்டு இருந்தபோதிலும் கிடைக்கப் பெற்ற நிதியின் அளவு மற்றும் செலவிடப்பட்ட தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மிளகு சார்ந்த 09 ஆராய்ச்சிகள், கோப்பி பயிர் தொடர்பான 04 ஆராய்ச்சிகள், ஏலக்காய் தொடர்பான 04 ஆராய்ச்சிகள் மற்றும் கொக்கோ தொடர்பான 18 ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 02 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மொத்தமாக கொள்ளுமிடத்து இந்த ஆராய்ச்சிகளில் அதிக எண்ணிக்கையானவை குறித்த பயிர்ச்செய்கைக்குக் பொருத்தமான பிரதேசத்தினை தீர்மானித்தல், தாய் தாவர பூங்காவினை அமைத்தல், புவியியல் சுட்டியினை பெற்றுக் கொள்ளுதல் சார்ந்த ஆராய்ச்சியாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டதுடன் உலர்வலய சுற்றாடல் நிலைமைக்கு பொருத்தமான மிளகு வகையினை அடையாளம் காணுவது தொடர்பான ஒரு ஆராய்ச்சியும் அந்த ஆராய்ச்சிகளுள் இடம்பெற்றுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி பெறுபேறுகளை விவசாயிகளுக்கு தெரிவித்தல், விவசாயிகளைப் புதிய வகையினை பயிர் செய்வதற்கு ஈடுபடுத்துதல், நாற்று மேடைகளில் தாய் தாவரங்களை பேணுதல், அதிகபட்ச அறுவடையினை பெற்றுக் கொள்வதற்கு பயிர்ச்செய்கையை முகாமைத்துவப்படுத்துதல் தொடர்பில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பது களப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப பிரிவின் மூலம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 23 ஆராய்ச்சிகளுக்காக ரூபாய்.5,080,000 செலவிடப்பட்டு இருந்ததுடன் இந்த ஆராய்ச்சிகளில் 22 ஆராய்ச்சிகள் 2021 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டு இருந்ததுடன் ஒரு ஆராய்ச்சி மட்டும் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த ஆராய்ச்சிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| பயிர் | ஆராய்ச்சி எண்ணிக்கை | ஒதுக்கீடு | கிடைத்த நிதி | செலவு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| இஞ்சி | 02 | 600,000 | 525,000 | 525,000 |
| கொரக்கா | 03 | 700,000 | 550.000 | 550.000 |
| மிளகு | 04 | 1,145,000 | 950,000 | 950,000 |
| மஞ்சள் | 04 | 1,056,000 | 730,000 | 730,000 |
| கறுவா | 04 | 1,200,000 | 1,000,000 | 1,000,000 |
| கோப்பி | 01 | 300,000 | 250,000 | 250,000 |
| கொக்கோ | 01 | 30,000 | 25,000 | 25,000 |
| சாதிக்காய் | 03 | 700,000 | 550,000 | 550,000 |
| ஏலக்காய் | 01 | 300,000 | 250,000 | 250,000 |
| மொத்தம் | **23** | **6,331,000** | **5,080,000** | **5,080,000** |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மஞ்சள் என்பவற்றின் மாதிரிகளில் அடங்கியுள்ள இரசாயன பொருட்களை ஒப்பிடுதல், ஆக்சிஜனேற்றல் பகுப்பாய்வு போன்றவை தொடர்பான 04 ஆராய்ச்சிகளுக்காக ரூபாய்.730,000 செலவிடப்பட்டு இருந்ததுடன் அந்த அனைத்து ஆராய்ச்சிகள் மூலமும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மஞ்சள் தரத்தில் உயர்ந்தது என உறுதி செய்யப்பட்டு இருந்த போதிலும் உள்நாட்டு மஞ்சள் பயிர்ச்செய்கை மற்றும் அவை சார்ந்த உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கு நீண்டகால வேலைத் திட்டம் ஒன்று இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) இந்தக் காலப் பகுதியினுள் மிளகு தொடர்பான 4 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அந்த ஆராய்ச்சிகளின் மூலம் மிளகு விதைகள் சார்ந்த தொகுதிகள் மற்றும் அவற்றின் பௌதிக இரசாயன பகுப்பாய்வு, இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட மிளகுகளின் எண்ணெய், நல்லெண்ணெய் மற்றும் பைப்பரின் என்பவற்றின் உள்ளடக்கத்தை தீர்மானித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டு இருந்தன. இந்த ஆய்வுகளுக்காக ரூபாய்.950,000 செலவிடப்பட்டு இருந்ததுடன் இந்த ஆராய்ச்சிகள் தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவினை மிளகு சார்ந்த உற்பத்தியாளர்கள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்களுக்கு தெரிவித்தல் மற்றும் அந்த அறிவினை நடைமுறையில் பயன்படுத்துதல் என்பவற்றுக்கான முறைமைகள் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) கறுவாவில் அடங்கியுள்ள எண்ணெயின் வீதம் தொடர்பாக மற்றும் சீனியற்ற கறுவா பிஸ்கட்டை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதன் தரத்தினை மதிப்பீடு செய்தல் போன்றவை தொடர்பான 04 ஆராய்ச்சிகளுக்காக ரூபாய்.1.000,000 செலவிடப்பட்டு இருந்தது. இந்த ஆராய்ச்சிகளில் 2019 ஆம் ஆண்டில் சீனியற்ற கறுவா பிஸ்கட் உற்பத்தி அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் 3 ஆண்டு காலம் கடந்துவிட்டிருந்த போதிலும் அந்த பிஸ்கட்டை உற்பத்தி செய்வதற்கான பயிற்சி வேலைத்திட்டங்களை நடத்துதல், உற்பத்தியாளர்களுக்கு உரிய உற்பத்தினை மேற்கொள்ளுவதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவினை நடைமுறையில் பெற்றுக் கொடுத்தல் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு அதற்கான ஊக்குவிப்பினை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கு சரியான முறைமைகள் இல்லாத காரணத்தால் இந்த உற்பத்தி சந்தையில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட உற்பத்திகளுக்கு மேலதிகமாக கொரக்காப்புளி, இஞ்சி, சாதிக்காய் போன்ற பயிர்கள் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல், நீண்ட காலம் பாதுகாத்தல், இரசாயன சேர்மானங்களின் பகுப்பாய்வு போன்றவை தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதிலும் மொத்தமாக நோக்குமிடத்து இந்த ஆராய்ச்சிகள் தொடர்பான தொழில்நுட்ப அறிவினை நடைமுறையில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முறைமையொன்று மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான நிவாரண வேலைத் திட்டம் ஒன்று இல்லை என்பதும் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஏனைய நிவாரண முறைமைகளுடன் ஒப்பிடும்போது பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி கைத்தொழிலுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டு இருக்காததன் மூலம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) தாவர நோயியல் விஞ்ஞான பிரிவின் மூலம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 13 ஆராய்ச்சிகளுக்காக ரூபாய்.8,594,240 நிதி கோரப்பட்டு இருந்ததுடன் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு மற்றும் செய்யப்பட்ட செலவு தொடர்பான தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஆராய்ச்சிகளுள் 05 ஆராய்ச்சிகள் மிளகு பயிர்ச்செய்கை சார்ந்த நோய்கள் தொடர்பானவையாகவும் மற்றும் 02 ஆராய்ச்சிகள் சாதிக்காய் தாவர வேர்களின் நோய் சார்ந்ததாகவும் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

(i) மிளகு உற்பத்தி செயற்பாட்டின் போது சேதத்தை விளைவிக்கும் நுண்ணுயிர்களை அகற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறு "மிளகின் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP)" தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் GMP தொடர்பான சான்றிதழை பெற்றுக்கொண்ட உற்பத்தியாளர்கள் தொடர்பாக 17 பிரதேச அலுவலகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய ஒரு உற்பத்தியாளர் மட்டுமே அதற்காக ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய ஆராய்ச்சி பெறுபேறுகள் உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றமை மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் அடையாளம் காணப்பட்டிருந்த மிளகு இலைகள் உடனடியாக வாடும் நோய் 2018 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கு தொற்று நோய் முறையில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சி பொறுபேற்றுக்கு அமைய தற்போதைய காலத்தில் நோயானது தொற்றும் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டு இருந்த போதிலும் மொனராகலை மாவட்டத்தில் வெல்லவாய செயற்திட்ட உத்தியோகத்தர் வலயத்தில் தற்போதும் நோயினை கட்டுப்படுத்துவதற்கு முடியாது போயுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) 2016 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டிருந்த சாதிக்காய் இலை வாடும் நோயினை கட்டுப்படுத்துதல் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 2021 ஆம் ஆண்டு வரையான 06 வருட காலப்பகுதியினுள் ரூபாய்.8,791,311 செலவிடப்பட்டு இருந்ததுடன் தற்போதைய காலம் வரையிலும் நோயானது தொற்றாக பரவாது இருந்த போதிலும் ஆங்காங்கே நோயானது அறிக்கையிடப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) மிளகு பயிர்ச்செய்கையின் ஆதாரமாக பயன்படுத்தப்படும் கிளிரிசீடியா கிளைகள் மற்றும் தண்டுகள் அழுகி இறக்கும் நோய் 2020 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டு இருந்ததுடன் இது தொடர்பான ஆராய்ச்சிகள் ஆரம்ப மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) பௌதிக அறிவியல் மற்றும் நாற்று உற்பத்தி பிரிவின் மூலம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 47 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதற்காக கோரப்பட்டிருந்த நிதி ரூபாய்.6,667,900 ஆக இருந்ததுடன் கிடைக்கப் பெற்ற நிதி மற்றும் செலவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஆராய்ச்சிகளுள் 13 ஆராய்ச்சிகள் சாதிக்காய் நாற்று உற்பத்தி தொடர்பாகவும், 14 ஆராய்ச்சிகள் மிளகு பயிர்ச்செய்கை மற்றும் நாற்று உற்பத்தி தொடர்பாகவும் 10 ஆராய்ச்சிகள் கராம்பு பயிர்ச்செய்கை மற்றும் நாற்று உற்பத்தி தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. இந்த காலப் பகுதியினுள் ஒரே மாதிரியான ஆராய்ச்சிகள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் இழைய வளர்ப்பு நாற்று உற்பத்தி தொடர்பாக ஈடுபடுதல் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. 2018 - 2022 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட உத்திமுறை திட்டத்தினுள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாற்று மேடைகளுக்கான தட்டுப்பாடு நிலவும் தன்மையில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய நாற்று உற்பத்திக்காக நாற்று மேடையாளர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் தேவைப்பாடு நிலவுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) பூச்சியியல் பிரிவின் மூலம் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 08 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதற்காக ரூபாய்.6,009,909 நிதி கோரப்பட்டு இருந்ததுடன் கிடைக்கப் பெற்ற நிதி மற்றும் செலவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இருக்காதுடன் கோப்பிக் கொட்டை துளைப்பானினால் ஏற்படும் சேதம், இஞ்சி கிழங்கு ஈக்கலினால் ஏற்படும் சேதம், நாற்று உண்ணிகளினால் ஏற்படும் சேதம் போன்ற ஆய்வு துறைகள் இந்த ஆராய்ச்சியின் மூலம் உள்ளடக்கப்பட்டு இருந்தன.

(எ) ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2010 ஆம் ஆண்டிற்கு முந்தைய காலப்பகுதியினுள் மிளகு, ஏலக்காய், கோப்பி, கொக்கோ போன்ற 04 வகையான பயிர்களுக்கு உரிய 20 வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தன. அதனால் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான 06 வருட காலப்பகுதியினுள் 03 வகையான மிளகு, 03 வகையான கோப்பி மற்றும் 03 வகையான பாக்கு என்பன அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தன. 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப்பகுதியினுள் ஏலக்காய்க்கான ‘‘ரன்வெலி யஸஸ் ஸ்ரீ’’ எனும் புதிய வகை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு இருந்ததுடன் ஏனைய பயிர்களுக்காக புதிய வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஏ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த டிங்கிரால, கொகுகும்புரே ரால, பூட்டாவே ரால எனும் மிளகு வகைகளின் ஒரு ஹெக்டேயருக்கான அறுவடை முறையே 2,200 கிலோ கிராம், 2,300 கிலோ கிராம் மற்றும் 2,700 கிலோகிராம் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பயிர்களில் தற்போதைய காலம் வரையிலும் மிளகு பயிர்ச்செய்கை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அறுவடை 850 கிலோகிராமான மிகக் குறைந்த தொகையில் காணப்படுவதாக விவசாயிகளிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளுக்கு அமைய அவதானிக்கப்பட்டது. இந்த வகைகளை அடையாளம் கண்டு பயிரிடல், அறுவடையை அதிகரித்துக் கொள்ளக்கூடிய முறைகள் என்பன தொடர்பாக விவசாயிகளுக்கு போதிய அளவு புரிந்துணர்வு இல்லை என்பது அவதானிக்கப்பட்டது .

(ஐ) 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் 06 கொக்கோ வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டின் பின்னர் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் புதிய கொக்கோவா வகைகளை அறிமுகப்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. அறிமுகப்படுத்தப்பட்டிருந்த வகைகளின் அறுவடை ஒரு ஹெக்டேயருக்கு 7,150 - 5,150 கிலோ கிராம் வீச்சினுள் காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டில் 26,710 கிலோ கிராமாக இருந்த கொக்கோ ஏற்றுமதி 2021 ஆம் ஆண்டில் 3,914 கிலோ கிராம் வரையிலும் குறைவடைந்ததன் மூலம் இந்த வகையைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துதல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அறுவடையை பெற்றுக் கொள்ளுதல் என்பன தொடர்பில் சிக்கல் நிறைந்து உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஒ) 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் 06 வகையான புதிய ஏலக்காய் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு இருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் புதிய வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்காதுடன் 2022 ஆம் ஆண்டில் ‘‘ரன்வெலி யஸஸ் ஸ்ரீ’’ எனும் வகை அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 900 மீட்டருக்கும் குறைவான பிரதேசங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த வகைகளின் அறுவடையானது ஒரு ஹெக்டேயருக்கு 220 – 270 கிலோ கிராம்கள் வரையான வீச்சில் காணப்பட்டதுடன், 900 மீட்டருக்கு அதிகமான பிரதேசங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த வகைகளின் விளைச்சலானது 240 - 270 கிலோ கிராம் வீச்சில் காணப்பட்டது. இந்த வகைகளின் அறுவடை உயர் பெறுமதியை குறித்த போதிலும் ஏலக்காய் ஏற்றுமதியானது 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 839,167 கிலோ கிராம் தொடக்கம் 2,609 கிலோ கிராம் வரையில் குறைவடைந்து காணப்பட்டது.

(ஓ) மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் 149 ஆக காணப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையிலும் அதிகமான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 09 பேர் உள்ளிட்ட உண்மையான எண்ணிக்கை 106 ஆக உள்ளது என்பதால் 52 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது.

(ஔ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கைகைக்காக இரசாயன உரங்கள் மற்றும் செயற்கை பசளைகள் போன்ற இரண்டு வகைகளும் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளதுடன் 04 பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு தேவையான உரத்தின் அளவு மற்றும் ஏற்படக்கூடிய செலவு தொடர்பாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த தகவல்கள் பின்வருமாறு ஆகும்.

| | | உத்தேச தற்போதைய விலை 2023/2/26 ஆந் திகதியில் ஒரு கிலோ கிராமிற்கு (ரூபா) | பயிரைப் பொறுத்து ஒரு செடிக்கு பரிந்துரை செய்யப்பட்ட அளவுக்கான செலவு ரூபா. மிளகு | ஏலக்காய் | கிராம்பு | சாதிக்காய் |
|---|---|---|---|---|---|---|
| இரசாயன உரவகை | யூரியா | 430.00 | 92.62 | 55.90 | 146.59 | 146.59 |
| | எப்பாவள ரொக் பொஸ்பேற்று | 31.00 | 8.35 | 4.03 | 10.56 | 10.56 |
| | எம் ஓ பி | 440.00 | 71.08 | 26.40 | 225.00 | 225.00 |
| | கீசரைட் | 280.00 | 15.08 | 8.40 | 15.90 | 15.90 |
| இரசாயன உரத்தின் மொத்த செலவு (ஒரு செடிக்கு) | | | 187.12 | 94.73 | 398.06 | 398.06 |
| இயற்கை உரம் | | 90.00 | 1080.00 | 720.00 | 1800.00 | **1800.00** |

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களுக்கு அமைய இரசாயன உரத்திற்காக செலவிட வேண்டிய தொகையுடன் ஒப்பிடும்போது SLS தரத்திற்கு அமைய உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை உரத்தின் கிரயம் ஒப்பீட்டளவில் பாரிய பெறுமதியை கொண்டிருத்தல் மற்றும் இயற்கை உரம் பயன்படுத்தப்பட வேண்டிய அளவு உயர்ந்த பெறுமதியை கொண்டுள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறான நிலைமையின் கீழ் இயற்கை உற்பத்திக்கு காணப்படும் கேள்வி, உடல் நலம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இயற்கை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அவர்களது உற்பத்திக்காக அதிக விலையினை பெற்றுக் கொள்ள கூடிய வகையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட முறைமையின் ஊடாக நீண்டு நிலைத்திருக்கக் கூடியதாக விற்பனை செய்வதற்கான முறைமையொன்றைத் தயாரித்தல் மூலம் விவசாயிகளின் வருமானத்தை போன்றே நாட்டின் ஏற்றுமதி வருமானத்தையும் அதிகரித்துக் கொள்ள முடியும் என்பது அவதானிக்கப்பட்டது

### 3.2.6. தேசிய கறுவா ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்

தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையை இலங்கையில் கறுவா தொடர்பாக உள்ள ஒரே ஆராய்ச்சி மத்திய நிலையமாக உள்ளதுடன் தாவர அறிவியல் பிரிவு, மண் அறிவியல் பிரிவு, தாவர பாதுகாப்பு பிரிவு, அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப பிரிவு மற்றும் பயிற்சி பிரிவு போன்ற பிரிவுகளைக் கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலும் இந்த நிறுவனத்தில் சம்பளம் வழங்குதல் தவிர ஏனைய மீண்டலும் செலவுகளுக்காக ரூபாய்.17,969,524 தொகையும் 2016 ஆம் ஆண்டில் ஆய்வு கூட உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 50,000,000 தொகையும் செலவிடப்பட்டு இருந்தது. நிறுவனத்திடம் இருந்து நிறைவேற்றப்பட வேண்டிய முக்கியமான கடமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- சிறந்த தாவர அறிவியல் மற்றும் முறைமைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் உயர் தரத்திலான நாற்றுப் பொருட்களை அறிமுகப்படுத்துதல், நிலத்தின் மண் தடைகளை தவிர்த்தல், மாற்று நாற்று மேடை கலவைகளை அறிமுகப்படுத்துதல்.
- கறுவா பயிர்ச்செய்கைக்கு குறைந்த செலவிலான இயற்கை மற்றும் இரசாயனமற்ற உரத்தினை பயன்படுத்தி கறுவா பயிர்ச்செய்கைக்கு ஊட்டமளிக்கும் முகாமைத்துவ ஒழுங்கமைப்பை தாபித்தல்.
- கறுவா பயிர்ச்செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியமான கிருமிகள், நோய்கள் மற்றும் புற்கள் அவற்றின் உயிரியல், அறுவடை குறைவடைதல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- கறுவா பட்டை எண்ணெய் அறுவடையை அதிகரித்தல், கறுவா பதப்படுத்துதல், சுகாதார வசதிகள், களஞ்சிய காலத்தினை அதிகரித்தல், கறுவா சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல்.

உரிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின்போது பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கறுவா பயிர்ச்செய்கையின் உற்பத்தித் திறன் மற்றும் தரத்தினை அதிகரிக்கும் நோக்கில் 2009 ஆம் ஆண்டில் ஸ்ரீ கெமுனு மற்றும் ஸ்ரீ விஜய என்னும் பெயர்களில் கறுவா வகைகள் இரண்டு அறிமுகப்படுத்தப்படுவதற்கு ரூபாய்.1,600,000 செலவிடப்பட்டிருந்தது. ஏனைய கறுவா வகைகளுடன் ஒப்பிடும்போது அதிக அறுவடை, இலை மற்றும் பட்டைகளில் அடங்கியுள்ள எண்ணெயின் சதவீதம் அதிக பெறுமதியை கொண்டிருத்தல் போன்ற தரமான இலட்சணங்கள் காணப்பட்ட போதிலும் கறுவா விதைகள் மூலம் நாற்றுக்களை பெற்றுக் கொள்வதுடன் ஒப்பிடும் போது இந்த இரகத்தினை பரப்புவதில் கிளை வெட்டல் மூலம் வெற்றிகரமாக கன்றுகளை பெற்றுக் கொள்வது 65% - 70% மட்டத்தில் காணப்படுதல், கிளை வெட்டல் மூலம் நாற்றுக்களை பெற்றுக் கொள்வதற்கு அதிக காலம் செலவிடப்படுதல் (6 - 8 மாதம்), தாய் மேடையை பராமரிப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளமை, விதை கன்றுகளுடன் ஒப்பிடும்போது குறைத்த நாற்று துறையில் அமைக்கப்படுவதுடன் ஒப்பிடுகையில் குறைந்த சாத்தியப்பாடு காணப்படுதல் போன்ற பலவீனங்கள் காரணமாக இந்த இரகங்களுக்கு உரிய கறுவா பயிர்கள் உற்பத்திக்கு தனியார் நாட்டு மேடை உரிமையாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த தாவர வகை இரண்டுக்கும் உரிய நாற்றுக்கள் விவசாயிகள் மற்றும் ஏனைய கோரும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்திருந்ததுடன் கணக்காய்வு சந்தர்ப்பமான 2022 ஜூன் 28 ஆம் திகதியில் மொத்தமாக ஸ்ரீ கெமுனு இரகத்திற்கு உரிய 19,098 கன்றுகளும் மற்றும் ஸ்ரீ விஜய இரகத்திற்கு உரிய 4,200 கன்றுகளும் விநியோகிக்கப்பட்டிருந்தன. இந்த தாவர இரகங்களை அறிமுகப்படுத்தி 10 ஆண்டுகளுக்கு அதிக காலம் கடந்திருந்த போதிலும் நாற்றுக்களை உருவாக்குதல் ஆராய்ச்சி மத்திய நிலையத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, அரச அல்லது தனியார் நாற்று மேடைகளில் இந்த இரக நாற்றுக்களை உருவாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்காமை போன்ற காரணத்தால் புதிய இரகங்களை அறிமுகப்படுத்துவதில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை அடைய முடியவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) ஸ்ரீ விஜய, ஸ்ரீ கெமுனு கறுவா இரகங்களில் உயர்ந்த தர இலட்சணங்கள் காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்ட போதிலும் நாற்றுப் பொருட்களை இலகுபடுத்துதல், தனியார் மற்றும் அரச நாற்று மேடைகளுக்கு நாற்றுப் பொருட்களை வழங்குதல், விவசாயிகளை தெளிவுபடுத்துதல் போன்ற முறைகள் மூலம் இந்த இரகங்களை பரப்புவதற்கு போதிய அளவு வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய கறுவா ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் மூலம் நாற்றுக்களை உருவாக்குதல், பூச்சி கட்டுப்பாடு, மண் பாதுகாப்பு மற்றும் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம் போன்ற காரணிகள் தொடர்பில் பாரிய அளவிலான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதிலும் இந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை தரை மட்டத்தில் இருக்கும் விவசாயிகள், தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள் போன்றோருக்கு வழங்குவதில் குறைபாடுகள் காணப்படுவதுடன் அவர்களினால் இந்த நவீன ஆராய்ச்சி அறிவினை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதை விட பாரம்பரியமான முறைகளை பின்பற்றி தமது பயிர்ச்செய்கைகள் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமையால் பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறன், தரம் என்பவற்றை அதிகரித்துக் கொள்வதற்கு ஆராய்ச்சி பெறுபேறுகளை ஈடுபடுத்துதல் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) 2021 ஆம் ஆண்டில் தேசிய கறுவா ஆராய்ச்சி மத்திய நிலையத்தில் தாவர அறிவியல் பிரிவின் மூலம் கறுவா விதைகளை நாட்டுவதற்கு பதிலாக புதிய சாடி கலவை அறிமுகப்படுத்தப்பட்டு இருந்ததுடன் இது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சாடி கலவைக்கு பதிலான சாடி கலவையாக பயன்படுத்தக்கூடியது என ஆராய்ச்சி தரவுகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சாடி கலவையில் உள்ள மூலப் பொருட்களை தேடிப் பெற்றுக் கொள்வது நாற்று மேடையாளர்களுக்கு சிக்கலாக இருந்ததால் இந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்திருந்த அடிமண், கரதஹய்யா மற்றும் T65 உரத்தினைக் கொண்ட சாடிக் கலவையானது உரிய தனியார் நாற்று மேடையாளர்களினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் களப்பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

அதே போன்று கடந்த காலப் பகுதியினுள் ஆராய்ச்சிகள் மூலம் அடையாளம் காணப்பட்டிருந்த 4 மாற்று சாடி கலவைகளை பரிந்துரை செய்து 2022 ஏப்ரல் 19 ஆம் திகதி பணிப்பாளர், தேசிய கறுவா ஆராய்ச்சி மத்திய நிலையத்தினால் பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி), ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் இந்த பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தேசிய கறுவா ஆராய்ச்சி நிறுவனத்தின் தாவர மரபியல் மற்றும் பயிர் அபிவிருத்தி செய்தல் பிரிவின் மூலம் 2014 / 2015 காலப்பகுதியினுள் ரூபாய்.90,000 செலவில் கறுவா விதை முறையான பரீட்சிப்புடன் 04 - 05 மாத காலம் வரையிலும் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க முடியும் என ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட நாற்று மேடைகளில் விதை களஞ்சியப்படுத்தல் தொடர்பில் ஒழுங்கான முறைமை ஒன்று பின்பற்றப்பட்டு இருக்கவில்லை.

(எ) 2012 - 2013 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் கறுவா பயிர்ச்செய்கைக் காணியில் இஞ்சி, மஞ்சள் என்பவற்றை ஊடுபயிர்களாக நடுவதன் மூலம் கறுவா அறுவடையில் எதிர்மறையான தாக்கம் ஏற்படாது என கண்டறியப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் கறுவா பயிர்ச்செய்கையில் இஞ்சி மற்றும் மஞ்சள் பயிர்களை ஊக்குவிப்பு செய்வதற்காக விவசாயிகளை ஊக்குவிப்பதற்கும் மற்றும் அவர்களை தெளிவுபடுத்துவதற்கும் தேவையான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3. விதைகளின் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்தல்

#### 3.3.1. விதை மற்றும் நாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்தல்

2003 இன் 22 ஆம் இலக்க விதை சட்டத்தின் பிரகாரம் விதை மற்றும் நாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்யும் பொறுப்பு விவசாயத் திணைக்களம் மற்றும் விதை உறுதிப்படுத்தும் சேவை போன்ற நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். சட்டத்திற்கு அமைய அனைத்து பயிர்களினதும் விதை மற்றும் நாற்றுப் பொருட்களை உள்ளடக்கும் வகையில் ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் விதை மற்றும் நாற்றுப்பொருள் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகத்தர்கள், சேகரிப்பாளர்கள், களஞ்சியப்படுத்துவோர் மற்றும் விற்பனையாளர்கள் அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சட்டரீதியான அதிகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு விதை உறுதிப்படுத்தல் சேவையின் கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(அ) 2003 இன் 22 ஆம் இலக்க சட்டத்திற்கு அமைய விதை உறுதிப்படுத்தும் பொறுப்பு விதை உறுதிப்படுத்தும் சேவையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் தொடர்பில் தேவையான தொழில்நுட்ப அறிவு விதை உறுதிப்படுத்தும் சேவையிடம் இல்லாதிருந்ததுடன் தேவையான தொழில்நுட்ப அறிவினை ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொண்டு விதை மற்றும் நாற்றுப் பொருட்களின் தரத்தினை தீர்மானித்தல், விதை சட்டத்திற்கு அமைய பதிவு செய்யும் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்தல் போன்ற நடவடிக்கைகள் விதை உறுதிப்படுத்தும் சேவையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) விதை விநியோகத்தர்களுக்கு பதிவு செய்யுமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் பதிவு செய்தலுக்காக ஆர்வம் காட்டாமை, விதை சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு நாற்று மேடையாளர்கள் கோரியிருந்த போதிலும் விவசாயத் திணைக்களம் அதற்காக நீண்ட காலத்தினை செலவிட்டமை போன்ற காரணங்கள் ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் இலக்காக இருந்த நாற்று உற்பத்திக்கும் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் விவசாயப் பயிர்கள் தொடர்பான தரங்கள் தயாரிக்கப்பட்டு விதை உறுதிப்படுத்தும் சேவைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. 2003 இன் 22 ஆம் இலக்க விதை சட்டம் நிறைவேற்றப்பட்டு சுமார் 20 வருட காலம் கடந்துவிட்டிருந்த போதிலும் அந்த தரங்களை வெளியீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விதை உறுதிப்படுத்தும் சேவையின் 19 பிரதேச அலுவலகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய 2003 இன் 22 ஆம் இலக்க விதைகள் சட்டத்துக்கு அமைய 2021 ஆம் ஆண்டினுள் ஏற்றுமதி விவசாயப் பயிர்களை பயன்படுத்துவோரில் 1393 பேர் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அதிலும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 17 பிரதேச அலுவலகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய 2021 ஆம் ஆண்டினுள் ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட நாற்று மேடைகளின் எண்ணிக்கை 631 என்பதும் ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத நாட்டு மேடைகளின் எண்ணிக்கை 55 சதவீதம் என்பதும் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய நாற்று மேடைகளில் அதிக எண்ணிக்கையானவை ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கண்காணிப்பின்றி நாற்றுக்களை உற்பத்தி செய்கின்றன என்பதும் நாற்றுக்களின் தரத்தினை பேணிச் செல்லுதல் தொடர்பான ஒழுங்குறுத்தல்கள் போதிய அளவில் இடம்பெறவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(உ) விதை சட்டத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்களுக்கு அமைய விதை மற்றும் நாற்றுப் பொருட்கள் பொதியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான ஆறு வருட காலப் பகுதியினும் விதைகள் உறுதிப்படுத்தும் 18 பிரதேச அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த களப் பரீட்சிப்புகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| **ஆண்டு** | **பரீட்சிப்பு செய்யப்பட்ட களங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 2016 | 67 |
| 2017 | 99 |
| 2018 | 219 |
| 2019 | 305 |
| 2020 | 292 |
| 2021 | 368 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2021 ஆம் ஆண்டில் விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் என்பவற்றைப் பயன்படுத்தும் 1393 நபர்கள் மற்றும் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு இருந்ததுடன் அந்த நிறுவனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது விதை உறுதிப்படுத்தும் சேவை உத்தியோகத்தர்களின் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்த களங்களின் எண்ணிக்கை 368 ஆக இருந்ததுடன் அது பதிவு செய்யப்பட்ட நிறுவன எண்ணிக்கையின் 26 சதவீதம் ஆகும்.

(ii) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் தரங்கள் தயாரிக்கப்பட்டு விதை உறுதிப்படுத்தும் சேவையிடம் பெற்றுக் கொடுக்கப்பட்டது என குறிப்பிடப்பட்ட போதிலும் அவை சட்டரீதியாக வெளிப்படுத்தப்பட்டிருக்காத காரணத்தால் தரங்களுக்கு இணங்க செயற்படாத விதை மற்றும் நாற்றுப் பொருட்களைப் பொதியிடும் நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதன் மூலம் தடைகள் ஏற்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படும் நாற்று மேடைகள் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட விரிவாக்கல் உத்தியோகத்தர், வலயப் பொறுப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர் ஆகிய மூன்று பேரைக் கொண்ட குழுவின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்தினுள் அதற்கான தொழில்நுட்ப அறிவைக் கொண்ட பதவி அணியினர் உள்ளனர் என குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பான தொழில்நுட்ப அறிவை ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொண்டு மீண்டும் விதை உறுதிப்படுத்தும் சேவை உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய 2003 இன் 22 ஆம் இலக்க விதைகள் சட்டத்திற்கு அமைய சட்ட ரீதியான நிலைமைகளில் இந்த பரீட்சிப்பு இடம்பெறுவதால் அந்த செயல் 02 அலுவலக பதவி அணியினர்களினால் மேற்கொள்ளப்படுதல் வினைத்திறனற்ற நிலைமையாக உள்ளது என அவதானிக்கப்பட்டதால் அந்த நிலைமை சரியாக ஒரு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான சட்ட ரீதியான சூழல் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3.1.1 ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான நாற்று மேடைகள் மூலம் நாற்று உற்பத்தி

| பயிர் | 2018 | சதவீதம் | 2019 | சதவீதம் | 2020 | சதவீதம் | 2021 | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கறுவா | 447,736 | 46 | 785,800 | 57 | 827,763 | 49.86 | 924,047 | 45.45 |
| மிளகு | 402,767 | 41.4 | 381,873 | 27 | 476,447 | 28.69 | 262,129 | 12.89 |
| ஏலக்காய் | 2,531 | 0.26 | 393 | 0.03 | 4,392 | 0.26 | 8,401 | 0.41 |
| கிராம்பு | 757 | 0.77 | 1,401 | 0.10 | 5,919 | 0.35 | 4,321 | 0.21 |
| சாதிக்காய் | 8,427 | 0.86 | 11,608 | 0.84 | 20,735 | 1.25 | 17,549 | 0.86 |
| கோபி | 56,509 | 5.8 | 59,077 | 4.3 | 84,400 | 5 | 203,258 | 9.9 |
| கொக்கோ | 18,898 | 1.9 | 4,358 | 0.31 | 7,636 | | 2,392 | 0.11 |
| வெனிலா | 4 | 0.0004 | 1 | 7.3 | - | | 52 | 0.002 |
| வெற்றிலை | 1,899 | 0.19 | 1,624 | 0.11 | 1,197 | | 311 | 0.015 |
| கற்பூர புல் | 2,761 | 0.28 | 4,199 | 0.31 | 5,455 | | 2,545 | 0.125 |
| லெமன் கிராஸ் | 0 | | 0 | | - | | 650 | 0.03 |
| இஞ்சி | 0 | | 0 | | - | | 12,000 | 0.59 |
| மஞ்சள் | 0 | | 0 | | 62,500 | 3.76 | 504,080 | 24.79 |
| கொரக்கா புளி | 1,871 | 0.02 | 2,465 | 0.18 | 5,570 | 0.34 | 2,033 | 0.1 |
| பாக்கு | 283,952.9 | 29 | 112,988 | 8.2 | 158,126 | 9.57 | 88,958 | 4.37 |
| **மொத்தம்** | **972,605** | | **1,365,787** | | **1,660,140** | | **2,032,726** | |

ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்துக்கு சொந்தமாக காணப்படும் 11 நாற்று மேடைகள் மூலம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் 15 ஏற்றுமதி விவசாயப்பயிர்களுக்கு உரிய நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள் கீழே கட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நாற்று மேடைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த நாற்றுக்களின் எண்ணிக்கை தொடர்பில் கவனத்தில் கொள்ளும்போது 2018 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த நாற்றுக்களின் எண்ணிக்கையான 972,605 தொகை 2021 ஆம் ஆண்டில் 2,032,726 வரையிலும் 109 சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது.

(ஆ) 11 நாற்று மேடைகள் மூலம் 2018 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த மொத்த கறுவா பயிர்களின் எண்ணிக்கை 447,736 ஆக இருந்ததுடன் அந்த தொகை 2021 ஆம் ஆண்டில் 924,047 வரையிலும் அதிகரித்து இருந்தது. காலப் பகுதியினுள் திணைக்களத்துக்கு சொந்தமான நாற்று மேடைகளின் மூலம் விநியோகிக்கப்பட்டிருந்த கறுவா நாற்றுக்களின் எண்ணிக்கை மொத்த நாற்றுக்களின் எண்ணிக்கையில் 45 சதவீதத்திற்கும் 57 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 11 நாற்று மேடைகளின் மூலம் 2018 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்த மிளகு கன்றுகளின் எண்ணிக்கை 402,767 ஆக இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டு வரையில் மிளகு பயிர் உற்பத்தி 262,129 வரையில் வீழ்ச்சி அடைந்திருந்தது. அதற்கமைய அந்த காலப் பகுதியினுள் மிளகு நாற்று உற்பத்தி 41 சதவீதத்தில் இருந்து 12 சதவீதம் வரையிலும் குறைவடைந்து காணப்பட்டது.

(ஈ) 2018 ஆம் ஆண்டில் 283,953 ஆக இருந்த பாக்கு கன்று உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 88,958 வரையிலும் குறைவடைந்து இருந்தது. அந்தக் காலப் பகுதியினுள் பாக்கு கன்று உற்பத்தி 29 சதவீதத்தில் இருந்து 4.37 சதவீதம் வரையிலும் குறைவடைந்து இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) 2018 ஆம் ஆண்டு 56,509 ஆக இருந்து கோப்பிக்கன்று உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 203,258 வரையில் அதிகரித்திருந்தது. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 11 நாற்று மேடைகளின் மொத்த நாற்றுக்களின் உற்பத்தியில் கோப்பிக் கன்று உற்பத்தி 05 சதவீதம் தொடக்கம் 10 சதவீதம் வரையில் அதிகரித்திருந்தமை சிறந்த போக்காகும் என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) திணைக்களத்திற்கு சொந்தமான 11 நாற்று மேடைகளின் மூலம் ஏற்றுமதியில் அதிக வருமானத்தை பெற்றுக்கொள்ள கூடிய ஏலக்காய், கிராம்பு, சாதிக்காய், கொக்கோ, வெனிலா, வெற்றிலை, கற்பூர புல் மற்றும் லெமன் கிராஸ் ஆகிய 8 ஏற்றுமதி விவசாயப்பயிர்களுக்கு உரிய நாற்று உற்பத்தி மற்றும் விநியோகித்தல் குறைந்த மட்டத்தில் இடம்பெறுகின்றது என்பதும் மற்றும் அது தொடர்பான கவனம் பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றது என்பதும் அவதானிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கான தரவுப் பகுப்பாய்வின் போது வெனிலா, கோப்பி, கொக்கோ மற்றும் கற்பூர புல் போன்ற பயிர்களின் அலகுக்கான ஏற்றுமதி வருமானம் அதிகரித்துச் சென்றுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறான நிலைமையில் கறுவா மற்றும் மிளகு ஆகிய 02 பயிர்களுக்கும் மேலதிகமாக அதிக ஏற்றுமதி வருமானம் கிடைக்கக்கூடிய ஏனைய பயிர்களின் நாற்று உற்பத்தியை அதிகரித்து பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கு விவசாயிகளை ஈடுபடுத்துதல் பொருத்தமானது என்பது அவதானிக்கப்பட்டது.

#### 3.3.1.2 விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நாற்றுப் பொருட்கள் உற்பத்தி

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் ஏற்றுமதி விவசாயப்பயிர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள 15 பயிர்களுள் கொரக்காப்புளி, மிளகு மற்றும் பாக்கு ஆகிய 3 இற்கும் உரிய 117,790 நாற்றுகள் மட்டும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 06 வருட காலப் பகுதியினுள் விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நாற்றுப் பொருட்கள் மத்திய நிலையத்தினால் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாகப் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விவசாயத் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த கொரக்காப் புளி நாற்றுக்கள் மட்டும் 51,625 ஆக இருந்தவுடன் அதற்காக ரூபா 7,548,628 செலவிடப்பட்டு இருந்ததுடன் உற்பத்தி செலவு ரூபாய்.131 தொடக்கம் ரூபாய்.165 வரையில் அதிகரித்து இருந்தது.

(ஆ) விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான விதை மற்றும் நாற்றுப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் தகவல்களுக்கு அமைய 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த மிளகு கன்றுகளின் எண்ணிக்கை 60,017 ஆக இருந்ததுடன் செலவிடப்பட்ட மொத்த உற்பத்தி செலவு ரூபாய்.1,024,621 ஆகும்.

(இ) விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நாற்றுப் பொருட்கள் மத்திய நிலையத்தின் தகவல்களுக்கு அமைய 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த மொத்த பாக்கு கன்றுகளின் உற்பத்தி 6,148 ஆக இருந்ததுடன் அதற்காக ரூபாய்.1,620,040 செலவிடப்பட்டிருந்தது.

#### 3.3.1.3 ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நாற்று மேடையினை பேணிச் செல்லுதல்

இது தொடர்பாக பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 8 மாவட்டங்களில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான பன்னிரண்டு நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு உள்ளதுடன் அந்த 12 நாற்று மேடைகளில் 10 நாற்று மேடைகள் 1972 ஆம் ஆண்டு தொடக்கம் 1992 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தன. ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்டுள்ள 10 நாற்று மேடைகளின் மொத்த காணியின் அளவு சுமார் 51 ஏக்கராக உள்ளத்துடன் நாட்டு மேடைகளுக்காக பயன்படுத்தப்படாது உள்ள காணியின் அளவு 5.7 ஏக்கர் என்பது அவதானிக்கப்பட்டது . இந்த நாட்டு மேடைகளை பேணிச் செல்லுதல் தொடர்பாக கீழே கலந்துரையாடப்பட்டுள்ள பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன.

(ஆ) குண்டசாலை உப ஆராய்ச்சி மத்திய நிலையத்திற்கு 16 ஏக்கர் காணி சொந்தமாக உள்ளதுடன் அந்த நிறுவனம் நாற்று மேடைகளை பேணிச் செல்வதற்காக ஒதுக்கி உள்ள காணியின் அளவு 25 பேர்ச் அளவிலான மிகக் குறைந்த நிலப்பரப்பாக உள்ளதுடன் அதன் மூலம் மிளகு, ஏலக்காய், கோப்பி, லெமன் கிராஸ் மற்றும் மஞ்சள் ஆகிய 6 ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கான நாற்று வகைகளை உற்பத்தி செய்து இருந்த போதிலும் மிளகு தவிர ஏனைய நாற்று உற்பத்திகள் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டன.

(இ) 2003 இன் 22 ஆம் இலக்க விதை சட்டத்திற்கு அமைய விதை மற்றும் நாற்றுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் மற்றும் நபர்கள் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான இந்த 12 நாற்று மேடைகளுள் 5 நாற்று மேடைகள் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) இந்த 12 நாற்று மேடைகளை பேணிச் செல்லும் காணிகளில் 16 ஏக்கர் 3 ரூட் 27.8 பேர்ச் நிலப் பரப்பை கொண்ட 05 நாற்று மேடைகளுக்கான காணியின் சட்டரீதியான உரிமை ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமானதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) நாட்டு மேடைகளின் மூலம் பயிர்ச்செய்கைப் போகங்களுக்கு தேவையான நாற்றுக்களை உற்பத்தி செய்து உரிய கால எல்லைக்குள் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு போதிய அளவு எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இல்லாமை அவற்றை பேணிச் செல்வதற்கு தடையாக உள்ளது. குறித்த பதவி அணியின் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| **நாற்று மேடையின் பெயர்** | **வெற்றிடஎண்ணிக்கை** | **வெற்றிட கால எல்லை** |
|---|---|---|
| செரபிஸ் மத்திய நாற்று மேடை | 04 | 06 வருடங்களாக |
| மாபலான மத்திய நாற்று மேடை | 10 | - |

(ஊ) நாற்று மேடைகளுக்கு தேவையான தரமான விதைகளை பெற்றுக் கொள்வதை போன்றே அந்த விதைகள் முளைக்கும் வரையில் அதன் உயிர் சக்திக்கு சேதம் ஏற்படாத வகையில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு களஞ்சியசாலை வசதிகள் காணப்பட வேண்டிய போதிலும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான 12 நாற்று மேடைகளில் 07 நாற்று மேடைகளுக்கு பொருத்தமான மற்றும் போதிய அளவிலான களஞ்சியசாலை வசதிகள் இல்லாத காரணத்தால் அலுவலக அறைகள் உள்ளிட்ட பயன்பாட்டு இடங்களில் சேகரித்து வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **நாற்று மேடையின் பெயர்** | **களஞ்சியசாலை வசதிகளின் நிலைமை** |
|---|---|
| செரபிஸ் மத்திய நாற்று மேடை | இட வசதி போதிய அளவு இல்லை |
| மத்திய நாற்று மேடை - மாபலான | களஞ்சியசாலை வசதிகள் இல்லை |
| வென்னோருவை மத்திய நாற்று மேடை | களஞ்சியசாலைக்கு சீலிங் இல்லாததால் பூச்சிகளினால் விதைகளின் உயிர்ப்பு சக்தி செய்தமடைதல் |
| பிளாக் வோட்டர் மத்திய நாற்று மேடை | களஞ்சிசாலை வசதிகள் இல்லை |
| மாத்தளை மத்திய நாற்று மேடை | இருக்கும் களஞ்சியசாலை வசதிகள் போதுமானதாக இல்லை |
| இழைய வளர்ப்பு மத்திய நிலையம் மற்றும் மத்திய நாற்று மேடை - வல்பிட்ட | களஞ்சியசாலை வசதிகள் இல்லை |
| ஏற்றுமதி விவசாயப் பயிர் பூங்கா - மித்தெனிய | விசேட வசதிகளுடன் கூடிய களஞ்சியசாலை இல்லை |

(எ) மிளகு நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ளும் போது கூடிய அறுவடையை பெற்றுக் கொடுக்கும் நாற்று இரகத்தினை அதற்காக பயன்படுத்துதல் மிகவும் முக்கியமாக இருப்பதுடன் அதற்காக வேறான பயிர்ச் செய்கையை பேணிக் கொள்ளுவது அவசியம் ஆகும். பெரும்பாலான நாற்று மேடைகளில் அதற்காக தாய் தாவரத்தின் தண்டுகளை பேணி செல்லுதல், நுனி தளிர் தாய் தோட்டங்களை பேணி செல்லுதல் போன்றவற்றை மேற்கொண்டு வந்த போதிலும் அந்த நாற்று மேடைகளுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் உற்பத்தி இலக்கினை பூர்த்தி செய்வதற்கு அந்த பயிர்கள் போதுமானதாக இல்லாமை மற்றும் வெளியே வேறு பயிர்களின் தண்டுகளை பெற்றுக் கொள்ளுவதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லாமை போன்று சிக்கல்கள் நிலவுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறான நாற்று மேடைகளுக்கு உதாரணமாக மாபலான நாற்று மேடை, வென்னோருவை மத்திய நாற்று மேடை என்பவற்றை சுட்டிக்காட்ட முடியும்.

(ஏ) நாற்று மேடைகளில் முளை விடும் விதைகள் மற்றும் கன்றுகளை சரியான தரத்தினை கொண்டவையாக பெற்றுக் கொள்வதற்கு குறித்த கால எல்லைக்குள் ஊட்டப் பொருட்கள், இரசாயன உரம் மற்றும் பூச்சி கொல்லிகள் என்பன குறித்த கால எல்லைக்குள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இல்லாத நாற்று மேடைகளுள் செரபிஸ், மாபலான, வென்னோருவை, பொலொன்கொல்ல ஆகிய மத்திய நாற்று மேடைகள் அவதானிக்கப்பட்டன.

(ஐ) நாற்று மேடைகளுக்கு தொடர்ச்சியாக ஒழுங்கான நீர் வழங்கலை பேணி செல்லுதல் மற்றும் ஏனைய சுற்றாடல் காரணிகளை சரியான அளவில் குறித்த கால எல்லைக்குள் ஈடுபடுத்துவதன் மூலம் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்வதற்கு முடியுமாக உள்ள போதிலும் நில்லம்ப நாற்று மேடைக்கு முழுமையான நீர் வழங்கல் ஒழுங்கமைப்பு தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஒ) நாற்று மேடைகளில் விதை மற்றும் தண்டுகளை நாட்டிய பிறகு குறித்த தரத்தினை கொண்ட கன்றுகளை பெற்றுக் கொள்வதற்கு அவை வளரும் வரையில் பாதுகாப்பாக தேவையான சுற்றாடல் காரணிகளை பெற்றுக் கொள்ளும் போது மூடிய வீடு (Net House) காணப்படுதல் வேண்டும். அதற்கு அமைய திணைக்களத்திக்கு சொந்தமான 12 நாற்று மேடைகளில் 06 நாற்று மேடைகளுக்கு 66 Net House தேவையாக இருந்த போதிலும் பயன்படுத்தக் கூடிய மட்டத்தில் 49 Net House மட்டுமே காணப்பட்டது. அதற்கு அமைய செரபிஸ், மாபலான, வென்னோருவை, பிளாக் வோட்டர் ஆகிய 04 மத்திய நாற்று மேடைகள் மற்றும் குண்டசாலை, நில்லம்ப ஆகிய 02 உப ஆராய்ச்சி மத்திய நிலையங்களில் பாதுகாப்பு வீடுகள் முறையே 2, 1, 3, 1, 4 மற்றும் 6 எனும் ரீதியில் குறைபாடு காணப்பட்டமை, ஒரு சில Net House பழுதடைந்ததன் அடிப்படையில் திருத்தப்பட வேண்டிய மட்டத்தில் காணப்படுதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் நாற்று உற்பத்தியின் இலக்கினை எட்டுவதற்கு தேவையான பாதுகாப்பு வீடு (Net House) வசதிகள் போதிய அளவில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஓ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமாக இருக்கும் 12 நாற்று மேடைகளில் 03 நாற்று மேடைகளுக்கு மட்டும் கை டிராக்டர் அல்லது டிராக்டர் காணப்பட்ட போதிலும் நில்லம்ப நாற்று மேடைக்கு சொந்தமான கை டிராக்டர் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. ஏனைய நாற்று மேடைகளுக்கு தேவையான மூலப் பொருட்கள் மற்றும் நாற்றுப் பொருட்களைக் குறித்த நேரத்தில் பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு பொருத்தமான முறைமை ஒன்றின் தேவைப்பாடு தெளிவாகத் தெரிகின்றது.

(ஔ) நாற்று மேடையில் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக உற்பத்தி திறனுடன் நிறைவேற்றுவதற்கு அந்த நாற்று மேடைக்கு சொந்தமான உயர்ந்த தரத்தினை கொண்ட உபகரணங்கள் காணப்பட வேண்டிய போதிலும் நாற்று மேடைகளில் பயன்படுத்தப்படும் வீல்பரோ, மண்வெட்டி, சவள், கத்தி, கை மண்வாரி மற்றும் முள்ளு என்பவை உள்ளிட்ட உபகரணங்கள் உடைந்து சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இது நாற்று உற்பத்தியின் உற்பத்தி திறனுக்கு தொடர்ச்சியாக தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. 12 நாற்று மேடைகளில் நாற்று உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 3.3.2 தனியார் நாற்று மேடைகளைப் பதிவு செய்தல் மற்றும் நாற்றுக்களை கொள்வனவு செய்தல்

**(அ) தனியார் நாற்று மேடைகளைப் பதிவு செய்தல்**

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 04 வருட காலப் பகுதியினுள் தனியார் நாற்று மேடைகளைப் பதிவு செய்தல் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் அந்த நாற்று மேடைகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட தனியார் நாற்று மேடைகளின் எண்ணிக்கை | கொள்வனவு செய்யப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2018 | 731 | 18,602,292 |
| 2019 | 639 | 20,239,074 |
| 2020 | 523 | 15,857,005 |
| 2021 | 631 | 31,350,774 |

i. மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களுக்கு அமைய 2018 ஆம் ஆண்டில் 731 நாற்று மேடைகள் பதிவு செய்யப்பட்டு இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டளவில் அந்தத் தொகை 631 வரையிலும் குறைந்துள்ளது என்பது பொலன்னறுவை, மாத்தறை, மொனராகலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் நாற்று மேடைகளை பதிவு செய்தல் தெளிவாகத் தெரியும் வகையில் குறைவடைந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் இணைப்பு இலக்கம் 05 இல் காட்டப்பட்டுள்ளன.

ii. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 04 வருட காலப் பகுதியில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நாற்று மேடைகள் மூலமான நாற்று உற்பத்தியுடன் ஒப்பிடும்போது தனியார் நாற்று மேடைகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நாற்றுக்களின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்து இருந்தத்துடன் தனியார் நாற்று மேடைகள் மூலம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 18,602,292 நாற்றுக்கள் 2021 ஆம் ஆண்டில் 31,350,774 வரையில் 68.5 சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது.

### (ஆ) தனியார் நாற்று மேடைகள் மூலம் நாற்றுக்களைக் கொள்வனவு செய்தல்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 11 ஏற்றுமதி விவசாயப்பயிர்களுக்கு உரிய 244,512,400 நாற்றுக்கள் கொள்வனவு செய்வதற்கு தனியார் நாற்று மேடை உரிமையாளர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருந்த போதிலும் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாற்று தொகையில் 33 சதவீதம் அதாவது 82,385,498 நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்ததுடன் அதற்காக ரூபாய்.1,353,976,358 தொகை செலவிடப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பயிர் | ஒப்பந்தம் செய்யப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை | விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுத்த நாற்றுக்களின் எண்ணிக்கை | நாற்றுக்களை வழங்கிய விவசாயிகளின் எண்ணிக்கை | நாற்றுக்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்திய தொகை |
|---|---|---|---|---|
| மிளகு | 19,296,965 | 10,583,211 | 163,834 | 273,828,521 |
| கறுவா | 210,350,825 | 63,142,868 | 58,674 | 939,050,195 |
| ஏலக்காய் | 12,100 | 2,850 | 4 | 171,000 |
| கொக்கோ | 390,720 | 220,905 | 781 | 3,042,170 |
| பாக்கு | 7,025,145 | 3,339,475 | 26,866 | 40,281,729 |
| கொரக்காப் புளி | 8,490 | 1,986 | 168 | 116,334 |
| சாதிக்காய் | 42,575 | 52,194 | 3,133 | 4,902,900 |
| கிராம்பு | 63,875 | 23,006 | 2,411 | 1,510,250 |
| மஞ்சள் | 5,813,355 | 4,260,723 | 619,713 | 79,681,960 |
| கோப்பி | 1,334,850 | 674,107 | 5,850 | 9,446,558 |
| வெனிலா | 173,500 | 84,173 | 1,215 | 1,944,740 |
| **மொத்தம்** | **244,512,400** | **82,385,498** | **882,649** | **1,353,976,358** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 11 பயிர்களுக்கு சொந்தமான நாற்றுக்களை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவான ரூபாய்.1,353,976,358 தொகையில் ரூபாய்.939,050,195 கறுவா நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் நாற்று மேடைகளுக்கு செலுத்தப்பட்டு இருந்ததுடன் அது நாற்றுக்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்டிருந்த மொத்த செலவில் 69 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக தனியார் நாற்று மேடைகளின் மூலம் நாற்றுக்களை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபாய்.1,353,976,358 தொகையில் ரூபாய்.273,828,521 தொகையானது மிளகு நாற்றுக்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த முதலீட்டில் 20 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நாற்றுக்களைக் கொள்வனவு செய்தலுக்காகத் தனியார் நாற்று மேடைகளுக்கு செலுத்தப்பட்ட தொகையில் 98 சதவீதம் கறுவா, மிளகு, மஞ்சள் மற்றும் பாக்கு ஆகிய 04 பயிர்களுக்கும் உரிய நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டு இருந்ததுடன் கொக்கோ, சாதிக்காய், கோப்பி மற்றும் கராம்பு உள்ளிட்ட அதிக ஏற்றுமதி வருமானத்தை ஈட்டக் கூடிய ஏனைய 7 பயிர்களின் நாற்றுக்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட தொகை 02 சதவீதம் மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) தனியார் நாற்று மேடைகளின் மூலம் 4,260,723 மஞ்சள் நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்ததுடன் 619,713 விவசாயிகளுக்கு அந்த நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டு இருந்ததுடன் 10,583,211 மிளகு நாற்றுக்கள் 163,834 விவசாயிகளிடையே விநியோகிக்கப்பட்டிருந்தன. 63,142,868 கறுவா நாற்றுக்கள் 58,674 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு இருந்தது. கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்த நாற்றுத் தொகையும் 882,649 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விவசாயிகளில் 95 சதவீதமானோர் மேலே கூறப்பட்ட 03 வகை பயிர்களையும் பயிரிடும் விவசாயிகள் என்பது அவதானிக்கப்பட்டது. இந்த நாற்றுக்களை விநியோகிக்கும் வேலைத் திட்டத்தின் மூலம் அதிக ஏற்றுமதி வருமானத்தினை ஈட்டக்கூடிய ஏனைய ஏற்றுமதி விவசாயப்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை போதிய அளவில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(v) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட நாற்றுக்களை விநியோகிக்கும் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு தனியார் நாற்று மேடைகளின் மூலம் ரூபாய்.1,508,323,143 பெறுமதியான நாற்றுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2021 மற்றும் 2022 ஆகஸ்ட் 30 வரையில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபாய்.711,686,643 பெறுமதியான நாற்றுக்களுக்காக 614 வழங்குநர்களுக்கு ரூபாய்.277,468,761 தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4 ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பு செய்தல்

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் ஏற்றுமதி விவசாயப்பயிர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு வேலைத் திட்டங்கள் நீண்ட காலம் தொட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 06 வருட காலப் பகுதியினைக் கவனத்தில் கொள்ளும் போது 15 ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபாய்.1,835,359,852 ஆகும். இந்த காலப்பகுதியில் ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்காகவும் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு ஆகும்.

| வேலைத் திட்டம் | வருடம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | |
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| புதிய பயிர்ச்செய்கை வேலைத் திட்டம் | 173,838,204 | 71,900,492 | 104,710,000 | 86,650,000 | 160,337,665 | - | 597,436,361 |
| உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டம் | 43,921,035 | 10,034,064 | 7,040,000 | 10,250,000 | 44,124,933 | 68,887,000 | 184,257,032 |
| தன சவிய வீட்டுத் தோட்ட வேலைத்திட்டம் | 92,919,901 | 171,979,246 | 196,480,000 | 166,830,000 | - | - | 628,209,147 |
| அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப வேலைத்திட்டம் | 16,297,520 | 6,487,062 | 9,810,000 | 14,070,000 | 28,009,500 | - | 74,674,082 |
| இயற்கை கிராம வேலைத்திட்டம் | 1,921,875 | 5,489,255 | 15,850,000 | 5,920,000 | 3,641,090 | 3,877,000 | 36,699,220 |
| செயலற்ற உரிம காணியை செயற்படுத்தும் வேலைத்திட்டம் | 186,355 | - | - | - | - | - | 186,355 |
| பாக்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வேலைத் திட்டம் | - | 724,905 | 3,640,000 | 9,840,000 | 10,839,790 | 14,382,000 | 39,426,695 |
| கொக்கோ அபிவிருத்தி வேலைத்திட்டம் | - | 414,400 | - | - | - | - | 414,400 |
| நன்னீர் பாசன வேலைத்திட்டம் | - | - | 110,000 | 680,000 | 2,253,512 | 1,462,000 | 4,505,512 |
| GAP மற்றும் GAM சான்றிதழ் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் | - | - | 410,000 | - | - | | 410,000 |
| சிறிய அளவிலான பயிர்ச்செய்கை வேலைத்திட்டம் | - | - | - | - | 36,721,370 | 60,031,000 | 96,752,370 |
| வீட்டுத்தோட்ட மற்றும் ஏற்றுமதி | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பயிர் ஊக்குவிப்பு வேலைத்திட்டம் | - | - | - | - | 4,340,610 | 4,876,000 | 9,216,610 |
| கூட்டு கிராம வேலைத்திட்டம் | - | - | - | - | 726,790 | 5,447,000 | 6,173,790 |
| மஞ்சள் மற்றும் இஞ்சி பயிர் செய்து ஊக்குவிப்பு வேலைத்திட்டம் | - | - | - | - | 85,517,850 | 68,826,000 | 154,343,850 |
| பூச்சி மற்றும் விலங்கு சேதங்களை தவிர்க்கும் வேலைத்திட்டம் | - | - | - | - | 1,494,428 | 1,160,000 | 2,654,428 |
| **மொத்தம்** | **329,084,890** | **267,029,424** | **338,050,000** | **294,240,000** | **378,007,538** | **228,948,000** | **1,835,359,852** |

இந்த வேலைத்திட்டத்தின் இடையே நீண்ட காலமாக செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களுக்கு உரிய அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### 3.4.1 புதிய பயிர்ச்செய்கை வேலைத் திட்டம்

பொருளாதார ரீதியில் உற்பத்தி திறனான ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையை நோக்காகக் கொண்ட விவசாயிகள் அல்லது விவசாய தொழில் முனைவோருக்கு தேவையான நாற்றுப் பொருட்கள், தொழில்நுட்ப அறிவுரைகள் மற்றும் முதலீட்டு உதவி என்பவற்றை பெற்றுக் கொடுப்பதற்காக ஏற்றுமதி விவசாயப்பயிர் புதிய பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு வேலைத்திட்டத்திற்கு உரிய 3/2021/1 இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. இந்த புதிய பயிர்ச்செய்கை நான்கு முறைகளில் செயற்படுத்தப்படும்.

- திறமைகள் நிறைந்த இளைய விவசாய தொழில் முனைவோருக்கான வேலைத் திட்டம்
- பொருளாதார புதிய பயிர்ச்செய்கை வேலைத் திட்டம்
- நவீன மயமாக்கப்பட்ட புதிய பயிர்ச்செய்கை வேலைத் திட்டம்
- அரச நிறுவனங்கள், அரச தோட்ட கம்பெனிகள், தோட்டக் கம்பெனிகள் என்பவற்றுக்கு நாற்றுக்களை விநியோகிக்கும் வேலைத்திட்டம்

சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) சான்றிதழைப் பெற்றுக் கொள்ள கூடிய வகையில் இந்த பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், காணியில் உச்சபட்ச உற்பத்தித் திறனை பெற்றுக் கொள்வதற்கு இந்த புதிய பயிர்களுடன் பயிரிடப்படக்கூடிய பாக்கு, கோப்பி, மஞ்சள் மற்றும் இஞ்சி போன்ற வேறு பயிர்களை அறிமுகப்படுத்துதல், வெறும் சாதாரண ஒரு விவசாயியாக அல்லாது தொழில் முனைவோராக பயிர் செய்து வியாபாரமாக முன்னோக்கி செல்லுவதற்கு பயிர் செய்வோரை தெளிவுபடுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த சுற்றறிக்கையினுள் காரணிகள் உள்ளடக்கப்பட்டு இருந்தன.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 04 வருட காலப்பகுதியினுள் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் புதிய பயிர்கள் ஊக்குவிப்பு வேலைத் திட்டத்திற்காக ரூபாய்.411,728,665 நிவாரண செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த வேலைத்திட்டத்திற்கு 17 பிரதேச அலுவலகங்கள் மூலம் 21,541 விவசாயிகளுக்கு 8 பயிர்களுக்கு உரிய 37,234,927 நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்தன. விரிவான தகவல்கள் இணைப்பு இலக்கம் 06 இல் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 12,768 விவசாயிகளுக்கு 33,540,120 கறுவா பயிர்களும் மற்றும் 7,324 விவசாயிகளுக்கு 2,806,377 மிளகு பயிர்களும் விநியோகிக்கப்பட்டு இருந்தன. விநியோகிக்கப்பட்ட மொத்த நாற்றுக்களின் தொகையில் 97.5 சதவீதம் இந்த இரு பயிர்களும் கொண்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிக அந்நிய செலாவணித் தொகையை ஈட்டி தரக் கூடிய அதி கூடிய ஏற்றுமதிக் கேள்வி நிலவும் கோப்பி, சாதிக்காய், கிராம்பு, வெனிலா என்பன உள்ளிட்ட ஏனைய 06 பயிர்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்த மொத்த நாற்றுக்களின் தொகை 888,430 ஆக இருந்ததுடன் அதன் மொத்த சதவீதம் 2.5 சதவீதமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கமைய அந்த பயிர்ச் செய்கைக்கு விவசாயிகளை ஈடுபடுத்துதல் மற்றும் பயிர் ஊக்குவிப்பு பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.2. ஏற்றுமதி விவசாய சிறிய அளவிலான பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு வேலைத்திட்டம்

இந்த வேலைத் திட்டத்தின் மூலம் வீட்டுப் பாவனைக்கு தேவையான மசாலா பொருட்களை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்து கொள்ளுதல், வீட்டுத் தோட்டத்தில் சிறிய அளவிலான பொருளாதார பயிர்ச்செய்கை மேற்கொள்ளுதல், பாரிய அளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத ஏற்றுமதி விவசாயப்பயிர்களை கூட்டு கிராமங்களாக பயிரிடல், காணிகளின் உற்பத்தி திறனை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை முன் நிறுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி விவசாய சிறிய அளவிலான பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் 03 குழுக்களின் கீழ் நாற்றுக்கள் வழங்குதல் இடம்பெற்றுள்ளன.

- சிறிய அளவிலான பயிற்செய்கை ஊக்குவிப்பு வேலைத்திட்டம்
- வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை மற்றும் ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு வேலைத்திட்டம்
- கூட்டு கிராம வேலைத்திட்டம்

வேலைத்திட்டங்களின் மூலம் நாற்றுக்களை விநியோகித்தல் மேற்கொள்ளப்படும் போது இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குழுக்களாக ஒழுங்கமைத்து உரிய பயிர் தொடர்பான அடிப்படை தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டு பயிர்களை விநியோகித்தல் வேண்டும் என இலக்கம் 3/2021/(II) கொண்ட திணைக்கள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் சிறிய அளவிலான பயிர் ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 137,915 விவசாயிகளுக்கு 15 ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கு உரிய 13,626,791 நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டு இருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பயிர்** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **நாற்றுக்களின் எண்ணிக்கை** |
|---|---:|---:|
| மிளகு | 82,731 | 2,626,078 |
| கறுவா | 37,665 | 10,450,679 |
| பாக்கு | 6,511 | 339,486 |
| கொரக்கா புளி | 393 | 17,140 |
| சாதிக்காய் | 4,222 | 17,292 |
| கிராம்பு | 1,756 | 6,763 |
| மஞ்சள் | 39 | 2,095 |
| இஞ்சி | 488 | 21,230 |
| கோப்பி | 2,509 | 98,143 |
| வெனிலா | 1,601 | 47,885 |
| **மொத்தம்** | **137,915** | **13,626,791** |




இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சிறிய அளவிலான பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் கறுவா மற்றும் மிளகு நாற்றுக்களை விநியோகித்தல் மொத்த நாற்றுத் தொகையில் முறையே 76 சதவீதம் மற்றும் 19 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் மூலம் இந்த 02 பயிர்களுக்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஏனைய பயிர்களை ஊக்குவித்தல் தொடர்பான கவனம் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 17 பிரதேச அலுவலகங்களின் மூலம் சிறிய அளவிலான பயிற்சி ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஏலக்காய், கற்பூர புல், கொக்கோ, வெற்றிலை மற்றும் சேர ஆகிய 05 பயிர்களுக்குரிய நாற்று உற்பத்தி மற்றும் விவசாயிகளுக்கு விநியோகித்து இருக்காமல் என்பவற்றின் மூலம் அந்த பயிர்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) ஏலக்காய், கற்பூர புல், கொக்கோ உற்பத்திகளுக்கு ஒரு கிலோ கிராமுக்கு வெளிநாட்டு சந்தைகளில் அதிக ஏற்றுமதி வருமானம் கிடைத்திருந்த போதிலும் அந்த பயிர்களின் உற்பத்தி மற்றும் பயிர் சார்ந்த உற்பத்தி என்பவற்றின் ஏற்றுமதி தொகை குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. அந்த பயிர்களின் ஏற்றுமதி வருமானம் தொடர்பான விரிவான தகவல்கள் இணைப்பு இலக்கம் 07 இல் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியிலும் வெனிலா அலகுக்கான ஏற்றுமதி வருமானம் அமெரிக்க டாலர் 118 தொடக்கம் 222 வரையில் அதிகரித்து இருந்த போதிலும் ஏற்றுமதி தொகையானது 1,553 கிலோகிராம் தொடக்கம் 624 கிலோகிராம் வரையில் குறைவடைந்து இருந்தது. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 4 வருட கால பகுதியில் வினியோகிக்கப்பட்டிருந்த வெனிலா நாற்றுக்களின் தொகை 47,885 என்பதால் நீண்டகால ரீதியில் வெனிலா பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்குப் போதிய அளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கிராம்பு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பவற்றின் பெறுமதிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளும்போது கிராம்பு ஒரு கிலோகிராமை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளும் வருமானத்துடன் ஒப்பிடும் போது ஒரு கிலோகிராமை இறக்குமதி செய்வதற்கு அதிகளவு பெறுமதியான டொலர் செலவிடப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறான நிலைமையில் உள்நாட்டு கிராம்பு உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கு பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 17 பிரதேச அலுவலகங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டிருந்த கிராம்பு நாற்றுக்களின் எண்ணிக்கை 6,763 ஆன குறைந்த பெறுமதியில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி தொடர்பாக கவனத்தில் கொள்ளும்போது இலங்கையின் கோப்பி தேவைப்பாட்டின் அதிக தொகையானது இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இறக்குமதி தொகையானது 94,739 கிலோ கிராம் தொடக்கம் 104,878 கிலோ கிராம் வரையில் அதிகரித்து காணப்பட்டது. கோப்பி பயிர்ச்செய்கை மேலும் ஊக்குவிப்பு செய்யப்பட வேண்டிய நிலையில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 17 பிரதேச அலுவலகங்களில் 3 அலுவலகங்கள் மட்டுமே 98,143 தொகையான நாற்றுக்களை விநியோகித்து இருந்தது. ஏனைய 14 பிரதேச அலுவலகங்களில் கோப்பி உற்பத்தி மற்றும் நாற்றுக்கள் விநியோகித்தல் இடம்பெற்று இருக்காமை கோப்பி பயிர்ச்செய்கை ஊக்குவிப்பிற்கு தடையாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.3 ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையின் உற்பத்தி திறனை உயர்த்தும் வேலைத்திட்டம்

ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையில் உற்பத்தி திறனை உயர்த்துவதன் மூலம் தேசிய ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தியை போதிய அளவில் மற்றும் தரத்தில் உயர்த்துவது இந்த வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இலக்கம் 3/2021/(V) கொண்ட சுற்றறிக்கையின் கீழ் செயற்படும் இந்த வேலைத்திட்டம் 03 பிரதான பிரிவுகளின் (சிறந்த தாவர மரபியல் முறையின் மூலம் பயிர்ச்செய்கையில் உற்பத்தி திறமை உயர்த்துதல், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப பொருத்தமான நீர் வழங்கல் முறையை அறிமுகப்படுத்துதல், பூச்சி மற்றும் விலங்கு சேதங்களை தவிர்த்துக் கொள்ளும் உபகரணங்கள் மற்றும் ஒழுங்கமைப்புகளை அறிமுகப்படுத்துதல்) கீழ் செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன் நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டுள்ள 17 பிரதேச அலுவலகங்கள் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 12,750 விவசாயிகளுக்கு ரூபாய்.103,930,992 பெறுமதியான நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) சிறந்த தாவர மரபியல் முறையை பின்பற்றுவதன் மூலம் தற்போதுள்ள பயிர்ச்செய்கையின் உற்பத்தி திறனை உயர்த்துவதன் கீழ் சிறந்த தாவர மரபியல் முறையின் மூலம் பயிர்ச்செய்கையின் உற்பத்தி திறனை உயர்த்துவதற்கு கைவிடப்பட்ட நாற்றுக்களை பெற்றுக் கொடுத்தல் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இங்கு பயிரின் வயது 01 வருடத்தை விட அதிகமாக இருக்கும் போது கைவிடப்பட்ட நாற்றுக்களைப் பெற்று கொடுத்ததற்காகப் பரிந்துரை செய்யப்பட்டு இருந்தது. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் 7 பயிர்களுக்கு உரிய 6,014,541 நாற்றுக்கள் 12,509 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த நாற்றுக்களை விநியோகிப்பதற்காக செலவிடப்பட்ட நிவாரணங்களின் பெறுமதி ரூபாய்.90,950,016 ஆக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே கட்டப்பட்டுள்ளன.

| **பயிர்** | **பெற்றுக் கொடுத்த நாற்றுக்களின் எண்ணிக்கை** | **விவசாயிகளின் எண்ணிக்கை** | **நிவாரணத்தின் பெறுமதி (ரூபா)** |
|---|---:|---:|---:|
| மிளகு | 516,550 | 4,141 | 39,365,498 |
| கறுவா | 5,467,282 | 7,909 | 45,814,934 |
| ஏலக்காய் | 1,100 | 4 | 250,500 |
| கொக்கோ | 5,135 | 236 | 3,406,390 |
| சாதிக்காய் | 618 | 89 | 696,800 |
| கிராம்பு | 130 | 77 | 897,100 |
| கோப்பி | 23,726 | 53 | 518,794 |
| **மொத்தம்** | **6,014,541** | **12,509** | **90,950,016** |

(ஆ) ஏற்றுமதி விவசாயப் பயிர்களைக் காலநிலை மாற்றங்களுக்கு நேரொத்து மாற்றி அமைப்பதற்கு பொருத்தமான நீர் வழங்கல் முறையினை அறிமுகப்படுத்துதலின் கீழ் 66 விவசாயிகளுக்கு மிளகு பயிர்ச்செய்கைக்காக குழாய் நீர் ஒழுங்கமைப்புகளை பொருத்துவதற்கு ரூபாய்.4,188,919 பெறுமதியான நிவாரணம் வழங்கப்பட்டு இருந்ததுடன் கறுவா பயிர் செய்கைக்காக 18 விவசாயிகளுக்கு ரூபாய்.2,787,405 நிவாரணம் வழங்கப்பட்டு இருந்தது. இங்கு செயற்திட்ட உத்தியோகத்தரின் பரிந்துரையின் அடிப்படையில் ஒவ்வொரு விவசாயப்பயிருக்கும் தேவையான காலநிலை நிலைமைகளை உருவாக்குவதற்குப் பொருத்தமான நீர் வழங்கல் முறை வழங்கப்பட்டிருந்தமை சிறந்த ஒரு போக்காகும்.

(இ) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் பூச்சி மற்றும் விலங்குகளின் சேதங்களை தவிர்க்கும் கருவிகள் மற்றும் ஒழுங்கமைப்பினைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 157 விவசாயிகளுக்கு ரூபாய்.6,004,652 நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் அதிக நிவாரணத் தொகையான ரூபாய்.4,813,494 தொகை கறுவா மற்றும் மிளகு பயிர்ச்செய்கை சார்ந்த பூச்சி மற்றும் விலங்குகளின் சேதங்களை தவிர்க்கும் கருவி ஒழுங்கமைப்பை பெற்றுக் கொடுப்பதற்கு 120 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. புள்ளிவிபர ரீதியில் கொள்ளுமிடத்து பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்திருந்த எண்ணிக்கை ஒப்பிட்டு ரீதியில் குறைந்த எண்ணிக்கையாக உள்ளதுடன் அந்த விவசாயிகளின் வெற்றி மற்றும் அந்த வேலைத்திட்டத்தின் உற்பத்தித்திறன் தொடர்பில் முறையான தொடர் நடவடிக்கை திருப்திகரமாக காணப்படவில்லை.

### 3.4.4 நாற்றுக்களை விநியோகிக்கும் வேறு வேலைத் திட்டங்கள்

தன சவிய வீட்டுத் தோட்ட வேலைத் திட்டம், கூட்டு கிராம வேலைத் திட்டம் மற்றும் பாக்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பு செய்யும் வேலைத் திட்டம் போன்ற மூன்று வேலைத் திட்டங்களின் கீழ் 343,589 விவசாயிகளுக்கு ரூபாய்.661,351,160 பெறுமதியான நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) தன சவிய வீட்டுத் தோட்ட வேலைத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான 04 வருட காலப் பகுதியினுள் நிவாரணமாக ரூபாய்.628,209,147 செலுத்தப்பட்டு இருந்ததுடன் அதன் பயனாளிகளான விவசாயிகளின் எண்ணிக்கை 317,542 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | பெறுமதி<br><br>ரூபா. | விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2016 | 92,919,901 | 53,152 |
| 2017 | 171,979,246 | 140,904 |
| 2018 | 196,480,000 | 123,486 |
| 2019 | 166,830,000 | 155,639 |
| 2020 | 0 | 0 |
| **மொத்தம்** | **628,209,147** | **317,542** |

(ஆ) 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கூட்டு கிராம வேலைத்திட்டத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டில் 1100 விவசாயிகளுக்கு ரூபாய்.726,790 பெறுமதியான நாற்றுக்கள் வினியோகிக்கப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டு இந்த வேலைத் திட்டத்தின் மூலம் ரூபாய்.5,447,000 பெறுமதியான நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்த வேலைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை பெற்றுக் கொள்வதற்காக நாற்றுக்களை விநியோகிக்கும் சந்தர்ப்பம் தொடக்கம் அறுவடையினை விற்பனை செய்யும் சந்தர்ப்பம் வரையில் முறையான திட்டமொன்றைத் தயாரித்து விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கு மற்றும் சந்தை இணைப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என 2021.03.01 திகதியிடப்பட்ட இலக்கம் 3/2021(ii) கொண்ட திணைக்கள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டுக்காக 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையிலும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் நாற்றுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாக்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்**

இலங்கையின் முக்கியமான பாக்கு கொள்வனவாளர் இந்தியாவாக உள்ளதுடன் பாக்கு பயிர்ச்செய்கை ஆயுர்வேத உற்பத்தி நடவடிக்கை, பற்பசை உற்பத்தி நடவடிக்கை, வீட்டுப் பொருட்கள் உற்பத்தி போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படுவதுடன் இந்த பயிரின் விரிவாக்கம் மூலம் மண் மற்றும் நீர் பாதுகாப்பை முன்னேற்றுவதும் நோக்கமாக உள்ளது. பாக்கு ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் நிலையில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் செயற்படுத்தப்பட்ட பாக்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 2,182,529 பாக்கு கன்றுகள் 24,947 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த நிவாரணங்களின் பெறுமதி ரூபாய்.26,968,223 என்பது அவதானிக்கப்பட்டது. நாற்றுக்களை வழங்கி அந்த பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதேனும் பங்களிப்பினை பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த போதிலும் அவற்றின் வெற்றி தொடர்பான முறையான தொடர் நடவடிக்கை செயற்பாடுகள் திருப்திகரமானதாகக் காணப்படவில்லை.

| ஆண்டு | விநியோகிக்கப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை | செலுத்திய நிவாரணத்தின் பெறுமதி | நாற்றுக்கள் வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2018 | 215,139 | 2,626,923 | 2,564 |
| 2019 | 594,053 | 7,439,874 | 8,272 |
| 2020 | 632,937 | 7,965,971 | 5,512 |
| 2021 | 740,400 | 8,935,455 | 8,599 |
| **மொத்தம்** | **2,182,529** | **26,968,223** | **24,947** |

முழுமையாக நோக்குமிடத்து பல்வேறு பயிர் ஊக்குவிப்பு வேலைத்திட்டத்திற்காகப் பாரிய நிவாரண தொகை செலுத்தப்பட்ட போதிலும் போக்குவரத்து செலவிற்காக செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் கொடுப்பனவு ஒரு கிலோ மீட்டருக்கு ரூபா 2 எனும் மிகக் குறைந்த பெறுமதியில் இருந்த காரணத்தால் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பான களப் பரீட்சிப்புகள் குறைந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், ஒரு சில பயிர்ச்செய்கைகளின் மூலம் அறுவடையை பெற்றுக் கொள்வதற்கு பல வருடங்கள் கடந்த போதிலும் தற்போது வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய பயிர்ச்செய்கையாளர் ஒரு வருடத்திற்காக மட்டும் பதிவு செய்து கொள்ளுதல் மூலம் நீண்டகால கண்காணிப்பு மேலும் பலவீனமடைந்து உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.5 ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கைக்கான பயிர் நிலத்தின் அளவை அதிகரித்தல்

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய பிரதானமாக ஏற்றுமதி செய்யப்படும் 08 பயிர்கள் பயிரிடப்பட்ட உண்மையான நிலத்தின் அளவு மற்றும் 03 ஏற்றுமதி விவசாயப்பயிர் வேலைத்திட்டத்தின் (சிறிய அளவிலான பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு, வீட்டுத்தோட்டம் மற்றும் ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு மற்றும் புதிய பயிர் ஊக்குவிப்பு வேலைத் திட்டம்) மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை பயிரிடப்பட்டிருக்குமானால் ஒரு ஹெக்டயருக்கான நிலையான அளவின்படி புதிய பயிர்ச்செய்கைக்கு சேர்க்கப்பட வேண்டிய பயிர்ச்செய்கை நிலத்தின் அளவு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| பயிர் | பயிர்ச்செய்கை நிலத்தின் அளவு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 ஜூன் வரையில் | பயிர்ச்செய்கை நில அளவின் அதிகரிப்பு | 3 வேலைத்திட்டங்களின் மூலம் விநியோகிக்கப்பட்ட நாற்றுக்களின் தொகைக்கு அமைய பயிர் ஹெக். | உண்மையான அளவு மற்றும் இருக்க வேண்டிய அளவுக்கு இடையிலான வேறுபாடு | ஒரு ஹெக்டெயருக்கான நாற்றுக்களின் அளவு (அனுமதிக்கப்பட்ட) |
| கறுவா | 33,588 | 34,231 | 34,777 | 4,925 | 1,337 | 5,966 | 4,629 | 9,000 |
| மிளகு | 40,245 | 41,030 | 41,327 | 41,374 | 1,129 | 5,481 | 4,352 | 1,700 |
| கிராம்பு | 7,958 | 7,977 | 7,981 | 7,981 | 23 | 130 | 107 | 250 |
| சாதிக்காய் | 2,787 | 2,844 | 2,866 | 2,870 | 83 | 288 | 205 | 250 |
| ஏலக்காய் | 1,723 | 1,724 | 1,726 | 1,726 | 3 | 17 | 14 | 2,000 |
| கோப்பி | 4,542 | 4,573 | 4,598 | 4,604 | 62 | 306 | 244 | 3,000 |
| கொக்கோ | 1,804 | 1,827 | 1,855 | 1,860 | 56 | 200 | 144 | 1,100 |
| பாக்கு | 12,702 | 12,752 | 12,997 | 12,997 | 295 | 595 | 300 | 1,100 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2018 ஆம் ஆண்டில் 33,588 ஹெக்டெயராக இருந்த கறுவா பயிர்ச்செய்கை காணியின் அளவு 2021 ஜூன் 30 ஆம் திகதியளவில் 34,925 ஹெக்டெயர் வரையில் 1,337 ஹெக்டெயரால் அதிகரித்து இருந்தது. இந்த காலப் பகுதியினுள் மேலே கூறப்பட்ட 03 வேலைத் திட்டங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டிருந்த கறுவா நாற்றுக்களின் தொகை 53,689,889 என்பதால் ஒரு ஹெக்டெயருக்கான அனுமதிக்கப்பட்ட நாற்றுக்களின் அளவிற்கு அமைய புதிதாக பயிர்ச் செய்கைக்கு சேர்க்கப்பட வேண்டிய காணியின் அளவு 5,966 ஹெக்டெயராக இருக்க வேண்டிய போதிலும் பயிர்ச் செய்கைக்கு புதிதாக சேர்ந்துள்ள காணியின் அளவானது அந்த நாற்றுக்களின் அளவை பயிர் செய்யக்கூடிய காணி அளவில் 22 சதவீதம் மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2018 ஆம் ஆண்டில் 40,245 ஹெக்டெயாராக இருந்த மிளகு பயிர்ச்செய்கை காணியின் அளவு 2021 ஜூன் 30 ஆம் திகதியில் 41,374 ஹெக்டெயர் வரையில் 1,129 ஹெக்டெயரால் அதிகரித்து இருந்தது. இந்த காலப் பகுதியில் 03 பயிர்ச்செய்கை வேலைத்திட்டங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டிருந்த 9,317,390 நாற்றுத் தொகைக்கு அமைய 5,481 ஹெக்டயாராக காணப்பட வேண்டிய போதிலும் பயிர்ச்செய்கை காணியின் அளவு மற்றும் வழங்கப்பட்ட நாற்றுக்களின் அளவுக்கு அமைய பயிர் செய்யப்பட வேண்டிய காணி அளவுக்கு அமைய 4,352 ஹெக்டயர் வேறுபாடு நிலவுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மேலே கூறப்பட்ட 03 வேலைத்திட்டங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டிருந்த கிராம்பு, ஏலக்காய் மற்றும் கோப்பி ஆகிய 03 பயிர்களில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட நாற்றுக்களின் தொகையுடன் ஒப்பிடும்போது புதிதாக பயிர்ச் செய்கைக்காக சேர்க்கப்பட்டுள்ள நிலத்தின் அளவு 20 சதவீதத்திலும் குறைந்த அளவு என்பது அவதானிக்கப்பட்டதுடன் விநியோகிக்கப்பட்டிருந்த நாற்றுத் தொகையுடன் ஒப்பிடும்போது 28 சதவீத அளவான காணி அதிகரிப்பு காணப்படுகின்றது என சாதிக்காய் மற்றும் கொக்கோ பயிர்ச்செய்கை சார்ந்ததாக அவதானிக்கப்பட்டது.

### 3.4.6 இயற்கை பயிர்ச்செய்கைக்காக விவசாய அமைப்புகளைப் பதிவு செய்தல்

ஏற்றுமதி விவசாயப்பயிரை இயற்கைப் பயிர்ச்செய்கையாக மேற்கொள்ளுவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அறுவடைக்கு ஆகக் கூடிய கேள்வி நிலவுவதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் ஆகக் கூடிய விலையினைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன் காரணமாக இயற்கை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கு நிவாரண வேலைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. 2019 ஜுன் 25 ஆம் திகதியிடப்பட்ட திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 3/2019/iv மற்றும் 2021 மார்ச் 01 ஆந் திகதிய **3/2021/iv** ஆம் இலக்கம் கொண்ட திணைக்கள சுற்றறிக்கைக்கு அமைய 17 பிரதேச அலுவலகங்கள் மூலம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளின் எண்ணிக்கை, விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட நிவாரணத்தின் பெறுமதி என்பன பின்வருமாறு ஆகும்.

| **ஆண்டு** | **விவசாய அமைப்புகளின் எண்ணிக்கை** | **விவசாய அமைப்புகளில் உள்ள விவசாயிகளின் எண்ணிக்கை** | **விவசாய அமைப்புகளில் இல்லாத விவசாயிகளின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட நிவாரணத்தின் பெறுமதி ரூபா** |
|---|---:|---:|---:|---:|
| 2017 | | 1,188 | | |
| 2018 | 29 | | 289 | 7,719,775 |
| 2019 | | | 229 | 4,730,023 |
| 2020 | 02 | | 135 | 2,705,825 |
| 2021 | 03 | | 98 | 1,428,000 |
| **மொத்தம்** | **34** | | **751** | **16,583,623** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏற்றுமதி விவசாய பயிர் தொடர்பான இயற்கை பயிர்ச்செய்கைக்கு 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த 29 விவசாய அமைப்புகளில் 1,188 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 / 2021 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளின் எண்ணிக்கை 5 ஆகக் குறைவடைந்ததனால் இயற்கை பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாய அமைப்புகளின் எண்ணிக்கை கவனத்தில் கொள்ளத்தக்க வகையில் குறைந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இயற்கை பயிர்ச்செய்கைக்கு விவசாய அமைப்புகளின் மட்டத்தை போன்று விவசாயிகளும் தனியாக ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தில் பதிவு செய்வதுடன் அதற்கு அமைய திணைக்களத்திற்கு உரிய 17 பிரதேச அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த விவசாயிகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் 289 ஆக இருந்ததுடன் அது படிப்படியாக 2021 ஆம் ஆண்டு முறையே 229, 135 மற்றும் 98 ஆக குறைவடைந்து காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டு அது 66 சதவீதத்தினால் குறைவடைந்து உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கைக்கு 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் செலுத்தப்பட்டிருந்த மொத்த பெறுமதி ரூபாய்.16,583,623 ஆகும். இயற்கை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைவதுடன் இயற்கை பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட நிவாரணத்தின் பெறுமதி 2018 ஆம் ஆண்டில் ரூபாய்.7,719,775 தொடக்கம் 2021 ஆம் ஆண்டில் ரூபாய்.1,428,000 வரையில் 81 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது.

(ஈ) இயற்கை பயிர்ச்செய்கை அமைப்புகளினால் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயற்கை சான்றிதழைப் பெற்றுக் கொண்ட போதிலும் இயற்கை உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்கு நியாயமான விலையினை பெற்றுக் கொள்ள கூடிய கொள்வனவாளர்களை தேடிக்கொள்ள முடியாததைப் போன்றே இயற்கை உற்பத்தி கொள்வனவாளர் குறைந்த விலையினை முன்வைக்கும் காரணத்தால் கொள்வனவு செய்தல் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியாது என இயற்கை விவசாய அமைப்புகள் மூலம் கணக்காய்வின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய அவதானிக்கப்பட்டது.

(உ) மிளகு, கிராம்பு, சாதிக்காய் போன்ற பயிர்களைப் பயிரிடும் இயற்கை பயிர்ச்செய்கை அமைப்புக்கள் ஏதேனும் எண்ணிக்கையில் காணப்பட்ட போதிலும் அதற்காக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியை உருவாக்குவதற்கு தயாரிப்பு மத்திய நிலையங்களை அமைப்பதற்கு போன்றே புதிய தொழில்நுட்ப அறிவினை பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கமைய இயற்கை பயிர்ச்செய்கையின் முன்னேற்றம் மற்றும் விவசாயிகள் அதில் ஈடுபடுதல் படிப்படியாக குறைவடையும் போக்கு என்பன அந்த வேலைத்திட்டங்களின் தரவுப் பகுப்பாய்வில் அவதானிக்கப்பட்டது என்பதுடன் அதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பாக செலுத்தப்பட்டிருந்த கவனம் போதுமானதாக இல்லை.

### 3.4.7 தரவு மற்றும் தகவல்களைப் பேணுதல்

(அ) இந்தத் துறையின் அபிவிருத்திக்காக தரவுகள் மற்றும் தகவல்களை பேணிச் செல்லுதல் அவசியமானதுடன் மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் ஏற்றுமதி விவசாயப்பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பான ஒரு ஆய்வு 2014 ஆம் ஆண்டில் இறுதியாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த ஆய்வுக்கு அமைய 11 பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கை 3,530,258 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பயிரின் பெயர்** | **விவசாயிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| மிளகு | 940,550 |
| கோப்பி | 455,063 |
| கறுவா | 301,756 |
| கொக்கோ | 76,921 |
| ஏலக்காய் | 25,038 |
| கிராம்பு | 239,903 |
| சாதிக்காய் | 84,672 |
| வெற்றிலை | 420,284 |
| பாக்கு | 965,616 |
| மஞ்சள் | 8,264 |
| இஞ்சி | 12,191 |
| மொத்தம் | 3,530,258 |

(ஆ) 2022 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்காதுடன் பயிர்ச்செய்கையாளர்கள் தொடர்பான மத்திய தரவு ஒழுங்கமைப்பொன்று பேணப்படாததன் சிக்கல் 2018 - 2022 காலப் பகுதியினுள் செயற்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட தேசிய ஏற்றுமதி உத்தி முறை - மசாலா பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்கள் தொடர்பான திட்டத்தினுள் அடையாளம் காணப்பட்டு இருந்ததுடன் அதற்கு தேவையான வழிவகை மேற்கொள்ளுதல் தாமதம் அடைந்த காரணத்தால் 2022 ஆம் ஆண்டளவிலும் விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்பான இற்றைப் படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாது உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) இந்தப் பயிர்களின் நுகர்வுத் தேவைப்பாடு எந்த அளவிற்கு உள்ளது என்பதை கண்டறிதல் மேற்கொள்ளப்பட்டிருக்காதுடன் மக்கள் தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டின் வீட்டு வருமான செலவு ஆய்வின் மூலம் மஞ்சள், மிளகு, கொரக்காப்புளி மற்றும் கோப்பி என்பவற்றின் தனிநபர் மாதாந்த நுகர்வு தொடர்பான தரவுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவன நுகர்வு தொடர்பான தரவுகள் உள்ளடக்கப்படவில்லை என்பதால் அந்த பயிர்களின் வருடாந்த நுகர்வுத் தேவைப்பாட்டினை கணக்கீடு செய்ய முடியாதுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.8 ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த பெறுமதியை சேர்த்தல்

ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையினால் கிடைக்கும் அறுவடையில் அதிக சதவீதமானவை ஏற்றுமதி செய்யப்படுவதுடன் உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களின் அறுவடை மிகவும் குறைந்த சதவீதத்திலேயே உள்நாட்டு நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மசாலா பொருட்களான மிளகு, மஞ்சள், இஞ்சி, கொரக்காப்புளி, கறுவா, ஏலக்காய் என்பன நேரடியாக அல்லது சிறிய அளவில் மாற்றத்திற்கு உட்பட்டு நுகர்வுக்காக பயன்படுத்தப்படுகின்றது. கோப்பி. கொக்கோ. வெனிலா போன்ற உற்பத்திகள் குடிபான ரீதியாக மற்றும் உணவு உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றது. அதே போன்று உள்நாட்டு ஆயுர்வேத உற்பத்திக்காக மஞ்சள். இஞ்சி. மிளகு, சாதிக்காய், கொரக்காப்புளி, வெற்றிலை மற்றும் கிராம்பு என்பவற்றை பயன்படுத்துதல் இடம் பெறுகின்றது.

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(அ) உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதி விவசாயப் பயிர்களில் அதிக சதவீதமானவை ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும் உள்நாட்டு நுகர்வுக்காக ஒரு சில பயிர்கள் இறக்குமதி செய்யப்படும் போது ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுகையில் அதிக விலையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என 2016 ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கிராம்பு மற்றும் சாதிக்காய் ஏற்றுமதி வருமானம் மற்றும் இறக்குமதி செலவு என்பவற்றை பகுப்பாய்வு செய்யும் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்பட்டு நுகர்வு செய்யப்படும் ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் மொத்த தொகையை நோக்குமிடத்து உள்நாட்டு நுகர்வுத் தொகை எந்த அளவு உள்ளது எனும் அடிப்படையில் அல்லது உள்நாட்டு ஏற்றுமதி விவசாயப்பயிர்ச் செய்கையாளர்களின் உற்பத்தி தரவுகளைச் சேகரித்து உள்நாட்டு நுகர்வு எந்த அளவு உள்ளது என கண்டறிதல் நீண்ட கால கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு அத்தியாவசியமான காரணி என அவதானிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு ரீதியில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியை உருவாக்குதல், உற்பத்தியை விற்பனை செய்தல் மற்றும் உள்நாட்டு சந்தை நிலைமைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ‘‘இலங்கையின் ஏற்றுமதி உத்தி முறை மசாலா பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்கள் உத்தி முறை 2018 - 2022’’ திட்டத்தில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் இலக்கம் 1.2.2 இற்கு அமைய அனைத்து மசாலா பொருட்கள் தரப்பினரும் பதிவு செய்யப்படுதல் மற்றும் புவியியல் சுட்டி ஒழுங்கமைப்பை அடிப்படையாகக் கொண்ட வரைபடத்தின் ஆதாரத்துடன் பயிர் செய்யும் பிரதேசங்களை அடையாளம் காண்பதற்கான இலக்கை அமைத்து இருந்ததுடன் அதற்காக பொறுப்புக் கூறும் பிரதான நிறுவனம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆகும். ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தினால் ஏற்றுமதி விவசாய உற்பத்திப் பண்ணை, அமைப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை பதிவு செய்தல், இலங்கையின் மிளகு மற்றும் கறுவாவிற்கான புவியியல் சுட்டியை பெற்றுக் கொள்வதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபாய்.10,647,000 செலவிடப்பட்டு 300 டப் கணனிகள் கொள்வனவு

செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி அளவில் பதிவு செய்யப்பட்டிருந்த பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 8,359 மட்டுமே என்பதால் கருவிகளை கொள்வனவு செய்து 02 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்து விட்டிருந்த போதிலும் குறித்த தரப்பினர்களைப் பதிவு செய்தல் போதிய அளவில் இடம்பெற்றிருக்கவில்லை. மசாலா பொருட்கள் சார்ந்த தரப்பினர்களைப் பதிவு செய்தல் நடப்புக் கால தேவைப்பாடு என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) மசாலாப் பொருட்கள் சார்ந்த பெறுமதி தொடரில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினர்களையும் பதிவு செய்வதற்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு உதவி புரியும் தரப்பினர்களாக தோட்டக் கைத்தொழில் அமைச்சு, மசாலா பொருட்கள் சபை, மசாலா பொருட்கள் உற்பத்தியாளர்களின் சங்கம், விவசாயத் திணைக்களம், மக்கள் தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் மற்றும் நில அளவையியல் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் செயற்பாட்டு திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டு இருந்த போதிலும் குறித்த செயலை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு குறைத்த நிறுவனங்களுடன் செயற்பட வேண்டிய வேலைத் திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தி இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 6 ஏற்றுமதி விவசாயப்பயிர்களுக்கு உரிய பெறுமதி சேர்க்கப்பட்ட 17 உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அந்த உற்பத்திகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | பயிர் | அறிமுகப்படுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியின் பெயர் |
|---|---|---|
| 2016 | கொக்கோ | கொக்கோ வைன், வினாகிரி |
| 2016/2017 | இஞ்சி | இஞ்சி, இஞ்சி ஜாம் |
| 2018 | கொரக்காப் புளி | கொரக்கா புளி பேஸ்ட், கொரக்கா புளி குடிபானம், கொரக்கா புளி சட்னி, கொரக்கா புளி ஜாம், கொரக்கா புளி பவுடர் |
| 2019,2021,2022 | கறுவா | சீனியற்ற கறுவா பிஸ்கட், கறுவா சுவையூட்டிய நெல்லி குடிபானம், கறுவா சுவையூட்டிய சொக்லேட், கறுவா இலை எண்ணெய் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பூச்சி விரட்டும் ஊதுபத்தி |
| 2021 | மிளகு | பைபரின் |
| 2020/2021/2022 | மஞ்சள் | மஞ்சள் பேஸ்ட், கர்கியூமின், நானோ கர்கியூமின் |

ஏற்றுமதி விவசாயப்பயிர் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் இருந்து புதிய உற்பத்திகள் அடையாளம் காணப்பட்டிருந்தமை சிறந்த ஒரு போக்காகும். இந்த உற்பத்திகள் தொடர்பாக மக்களை தெளிவுபடுத்துதல், நடைமுறைப் பயிற்சியினை பெற்றுக்கொடுத்தல், உற்பத்திகளைச் சந்தைகளுக்கு வழங்கப்படக் கூடிய வகையில் தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றிற்கு சரியான முறைமையினைத் தயாரித்து இருக்காததால் உற்பத்தியை சந்தைக்கு வழங்குதல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. (ஈ) அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப செயல்முறையை சீராக்குவதற்குப் பொருத்தமான தொழில்நுட்ப பயன்பாட்டினால் ஏற்றுமதி விவசாயத்தின் தரத்தினை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் உற்பத்திகளின் தரத்தினை அதிகரித்தல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேற்கொள்ளுவதற்கு ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களைக் கொண்ட 07 துறைகளின் கீழ் இந்த வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 1,069 விவசாயிகளுக்கு ரூபாய்.126,747,650 பெறுமதியான நிவாரணம் வழங்கப்பட்டு இருந்தது. விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| சிறு குறியீட்டு இலக்கம் | உருப்படி | விவசாயி களின் எண்ணிக் கை | 2018 - 2021 நிவாரண பெறுமதி |
|---|---|---|---|
| A | தாவர மரபியல் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான உபகரணங்கள் / இயந்திரப் பொறிகளை வழங்குதல். | 564 | 7,813,291 |
| B | அறுவடைக்கான உபகரணங்கள் / இயந்திரப் பொறிகளை வழங்குதல். | 301 | 22,925,834 |
| C | சிறிய / நடுத்தர அளவிலான சேகரிப்பு மத்திய நிலையங்களை அமைத்தல் / புனரமைப்பு செய்தல். | 139 | 60,224,825 |
| D | மத்திய சிவகிரிப்பு மத்திய நிலையங்களை தாபித்தல். | 20 | 10,953,700 |
| E | ஆவியாகும் எண்ணெய்யைப் பிரித்தெடுக்கும் அலகினை புதிதாக நிர்மாணித்தல் / புணரமைப்பு செய்தல். | 45 | 24,830,000 |
| F | களஞ்சியசாலை வசதிகளை நிர்மாணித்தல். | 0 | 0 |
| G | பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி தொழிற்சாலை வசதிகள். | 0 | 0 |
| | **மொத்தம்** | **1,069** | **126,747,650** |

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(i) இலங்கை நீண்ட காலம் தொட்டு ஏற்றுமதி விவசாயப்பயிரை மூலப்பொருளாக ஏற்றுமதி செய்து வரும் நிலைமையில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியினை ஊக்குவிக்கும் முதலீட்டினை ஊக்குவிக்க வேண்டிய போதிலும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப செயல்முறைகளை சீராக்குவதற்காகப் பொருத்தமான தொழில்நுட்ப பயன்பாட்டில் ஏற்றுமதி விவசாயப்பயிர்களின் தரத்தினை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தின் மூலம் 07 துறைகளுக்கு 04 வருட காலப் பகுதியினுள் 1,069 நபர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிவாரணம் ரூபாய்.126,747,650 என அவதானிக்கப்பட்டது. ஏற்றுமதி விவசாயப்பயிர் நாற்றுக்களை விநியோகிக்கும் நிவாரண வேலைத் திட்டத்திற்கு இந்த காலப் பகுதியில் செலவிடப்பட்டிருந்த ரூபாய்.1,835,359,852 தொகையுடன் ஒப்பிடும்போது பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவானது 8 சதவீதமான மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) ஏற்றுமதி விவசாயப்பயிர் சார்ந்த ஏற்றுமதியினை மேற்கொள்ளும் போது அந்த உற்பத்திகளின் தரம் மற்றும் பெறுமதியினை அதிகரிக்கும் நோக்கில் முதலீட்டு முன்னுரிமைக்கு அமைய களஞ்சியசாலை வசதிகளை உருவாக்குதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக் கைத்தொழிலுக்கான வசதிகளை வழங்குதல் போன்ற துறைகளுக்கு நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை என ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் பிரதேச அலுவலகத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய அவதானிக்கப்பட்டது.

(உ) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஏற்றுமதி விவசாயப்பயிர் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல், ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்குப் பல்வேறு சான்றிதழ்களை வழங்கும் சேவைகள் என்பன வழங்கப்படுகின்றது . அதற்கமைய நிறுவனத்தினால் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதியாளர்களின் உற்பத்திகளின் தர பரீட்சிப்பு அறிக்கையினை வழங்குதல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(i) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 04 ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உருவாக்கும் தொழில்நுட்பத்தைத் தொழில் முனைவோரிடம் பெற்றுக் கொடுக்கும் போது உற்பத்தியின் சுபாவத்தின் அடிப்படையில் ரூபாய்.30,000 - ரூபாய்.356,000 வரையான வீச்சில் பணம் அறவிடப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அது தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பயிர் | பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியின் பெயர் | அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு | அறவிடப்பட்ட கட்டணம் |
|---|---|---|---|
| கறுவா | மசாலா பொருள் சோஸ் (Spicy Source Technology) | 2018 | |
| இஞ்சி | இஞ்சி வற்றல் மற்றும் இஞ்சி தூள் உற்பத்தி Ginger dehydration and ginger powder | 2020 | 30,000 |
| | RTS இஞ்சி குடிபானம் RTS Ginger drink | 2019 | 60,000 |
| | Ginger paste Ginger shot | 2020 | 110,000 |
| | Ginger with corundum drink | 2021 | 50,000 |
| வெற்றிலை | வெற்றிலை தூள் **(Betel powder)** | 2021 | 40,000 |
| மஞ்சள் | மஞ்சள் தூள் மற்றும் மஞ்சள் பேஸ்ட் **Turmeric powder and paste** | 2021 | 175,000 |
| இஞ்சி | Ginger with Coriander drink | 2021 | 50,000 |

(ஊ) 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆவது உப பிரிவின் கீழ் 2021 ஜனவரி 15 ஆம் திகதி இடப்பட்ட வர்த்தமானியின் மூலம் மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்தி விற்பனை சபை தாபிக்கப்பட்டு இருந்ததுடன் அதன் பிரதான வியாபார நடவடிக்கையாக மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளின் தரத்தினை உயர்த்துதல், அங்கீகார சான்றளித்தலுடன் பெறுமதி சேர்த்தல், உற்பத்தியினை ஊக்குவித்தல், புதிய தொழில்நுட்ப முறைமைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த சந்தையினை மேம்படுத்தும் நோக்கில் முறையாக தயாரிக்கப்பட்ட பொறிமுறையினைத் தாபித்தல் போன்றவை குறிப்பிடப்பட்டிருந்தன..

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**i.** மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளின் விற்பனை சபை தாபிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டில் 22 விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டமை சிறந்த போக்காக இருந்த போதிலும் இந்த 22 விற்பனை நிலையங்களில் 16 விற்பனை நிலையங்களும் இரத்தினபுரி மாவட்டத்தை அண்மித்து அமைக்கப்பட்டிருந்தன. ஏனைய விற்பனை நிலையங்களில் 04 விற்பனை நிலையங்கள் கொழும்பு மாவட்டத்திலும் காலி மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ஒரு விற்பனை நிலையம் வீதமும் அமைக்கப்பட்டிருந்தது. நாடு முழுவதிலும் இந்த விற்பனை நிலையங்களை அமைக்கும் போது உற்பத்திக்கான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் வசதிகள், சந்தை, களஞ்சியசாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் சந்தை வசதிகள் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இந்த விற்பனை நிலைய செயல் திட்டத்தில் அவ்வாறான அடையாளம் காணல்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

ii. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள 15 பயிர்கள் சார்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் குறைந்த எண்ணிக்கையில் விற்பனை நிலையங்கள் சார்ந்து விற்பனை செய்யப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. அந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக கறுப்பு மிளகு தூள், கறுவாகுயில், கறுவாத் தூள் மஞ்சள் மற்றும் இஞ்சித் தூள் என்பவற்றை குறிப்பிட முடியும்.

iii. மசாலாப் பொருள் வகைகளை தரப்படுத்துதல், தரத்தினை பரீட்சித்து உறுதிப்படுத்துதல் மற்றும் அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல் என்பன நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடமான குறுகிய காலம் கடந்து விட்டிருந்த போதிலும் நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மூலப்பொருட்களை பரீட்சிப்பு செய்வதற்குப் போதிய அளவு வசதிகள் இல்லாததுடன் இருக்கும் வசதிகளின் கீழ் மாதிரி பரீட்சிப்பு மட்டும் மேற்கொள்ளப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய பரீட்சிப்புகளுக்கு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவன ஆய்வு கூடத்தினை வழங்குவதற்கு இணங்கி இருந்ததாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2018 - 2022 தேசிய ஏற்றுமதி உத்தி முறையினுள் அடையாளம் காணப்பட்டிருந்த ஆய்வு கூட வசதி தட்டுப்பாடு 2022 ஆம் ஆண்டு வரையிலும் அதே போன்று காணப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

iv. ''மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்தி விற்பனை சபை'' ஆரம்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் 8 ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் விற்பனை செய்யப்பட்ட தொகை மற்றும் பெறுமதி கவனத்தில் கொள்ளத்தக்க வகையில் அதிகரித்திருந்தமை சிறந்த போக்காக உள்ளதுடன் உள்நாட்டு ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கையாளர்களுக்குத் தமது உற்பத்திகளை விற்பனை செய்து கொள்வதற்கும் நுகர்வோருக்கு தரமான உற்பத்திகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

| ஏற்றுமதி விவசாயப்பயிர் | விற்பனை செய்யப்பட்ட தொகை (பைக்கற்) | | விற்பனை பெறுமதி ( ரூபா) | |
|---|---|---|---|---|
| | 2021 | 2022 | 2021 | 2022 |
| கறுவா | 301 | 14,542 | 28,595 | 1,272,110 |
| மிளகு | 614 | 44,278 | 98,240 | 8,849,020 |
| ஏலக்காய் | 222 | 9441 | 26,640 | 1,129,080 |
| கிராம்பு | 99 | | 7,425 | |
| சாதிக்காய் | 5 | | 900 | |
| கோப்பை | 41 | 448 | 6,080 | 80,640 |
| மஞ்சள் | 3,566 | 77,195 | 713,200 | 7,721,950 |
| கொரக்கா புளி | 311 | 12,981 | 24,880 | 11,001,160 |

(எ) மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தைச் சூழ்ந்து நிர்மாணிக்கப்பட்டுள்ள மசாலா பொருள் பூங்கா மூலம் அது தொடர்பான ஆர்வத்தை காட்டும் பயிர்ச்செய்கையாளர்கள், உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட துறை தொடர்பான ஆர்வத்தை காட்டும் பாடசாலை மாணவர்கள், உள்நாட்டு பார்வையாளர்கள், வெளிநாட்டு பார்வையாளர்கள் உள்ளிட்ட தரப்பினர்களுக்கு அறிவை பெற்றுக் கொள்வதற்காக பயன்படுவதுடன் தகவல் மத்திய நிலையத்தின் மூலம் தேவையான நபர்களுக்கு தகவல்களைக் கூறுவதற்கும் அத்துடன் விசாரணை செய்து தெரிந்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டு உள்ளமை சிறந்த ஒரு போக்கு என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.9. ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பதற்கு ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் பயன்பாடு

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் உள்நாட்டு சுகாதார அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி வரி விலக்கு அளிப்பதற்கு தகைமையுடைய பொருள் பட்டியல் ஒன்று 2011 ஏப்ரல் 20 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. அதற்குரிய அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(அ) அந்த பொருள் பட்டியலின் அட்டவணை இலக்கம் 01 இல் உள்ளடக்கப்பட்டிருந்த உறுதிப்படுத்தப்பட்ட மூல மருந்து பட்டியலில் உள்நாட்டில் பயிரிடப்படக்கூடிய ‘‘காய்ந்த இஞ்சி’’ உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த சுங்கவரி நிவாரண பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் அமெரிக்க டாலர் 3,380,102 பெறுமதியான காய்ந்த இஞ்சி 1,468,000 கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. இந்த மருந்தை இறக்குமதி செய்வதற்கு காரணமாக சந்தையில் நிலவும் மருந்துக்கான கேள்விக்கு உள்நாட்டு வழங்கள் போதுமானதாக இல்லாமை மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்களின் தரம் தொடர்பான அதிருப்தி போன்றவை தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என ஆயுர்வேத திணைக்களம் குறிப்பிட்டு இருந்தது. இது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **மருந்தின் பெயர்** | **தொகை (கிலோ கிராம் )** | **பெறுமதி (ஐ.அ.டொ)** |
|---|---|---|---|
| 2017 | காய்ந்த இஞ்சி | 394,850 | 836,969 |
| 2018 | காய்ந்த இஞ்சி | 520,200 | 1,067,161 |
| 2019 | காய்ந்த இஞ்சி | 381,200 | 934,893 |
| 2020 | காய்ந்த இஞ்சி | 171,750 | 541,079 |
| 2021 | காய்ந்த இஞ்சி | 0 | 0 |
| **மொத்தம்** | | **1,468,000** | **3,380,102** |

(ஆ) இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தினால் ஆயுர்வேத மருந்து உற்பத்தி செய்வதற்கு 09 ஏற்றுமதி விவசாயப் பயிர்களை உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஏற்றுமதி விவசாயப் பயிர் தொகை மற்றும் பெறுமதி பின்வருமாறு ஆகும்.

| ஆண்டு | ஏற்றுமதி பயிர் அளவு (கிலோ கிராம்) | பெறுமதி ( ரூபா) |
|---|---|---|
| 2017 | 16,922 | 13,163,779 |
| 2018 | 18,856 | 12,965,331 |
| 2019 | 20,874 | 17,137,584 |
| 2020 | 30,286 | 32,065,827 |
| 2021 | 23,991 | 31,544,524 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆயுர்வேத மருந்து உற்பத்திக்காக உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஏற்றுமதி விவசாயப்பயிர்களின் அளவு 16,922 கிலோ கிராம் தொடக்கம் 30,285 கிலோ கிராம் வரையில் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளது. 2021 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாயப் பயிர் கொள்வனவு 23,990 கிலோ கிராம் வரையில் குறைந்து இருந்ததுடன் அதற்காக பச்சை இஞ்சி கொள்வனவு செய்தல் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 12,000 கிலோ கிராமிற்கு கிட்டிய தொகையில் குறைந்திருந்தமை தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) 2022 நான் ஆண்டுக்கான 9 ஏற்றுமதி விவசாயப்பயிர்களுக்கான மதிப்பிடப்பட்ட தொகை 34,280 கிலோ கிராம் என இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டிருந்தது.

(iii) இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் ஆயுர்வேத மருந்து உற்பத்திக்குத் தேவையான ஏற்றுமதி விவசாயப்பயிர் தொகை தொடர்ச்சியாக அதிகரித்து செல்லுவதுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டிருந்த தேவைப்பாடு 42 சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது. இதனால் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், ஆயுர்வேத திணைக்களம், அரசாங்கத்திற்கு சொந்தமான மூலிகைப் பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் சார்ந்து இது வரையிலும் மேற்கொள்ளப்படும் உற்பத்தி நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கும் தேவைப்பாடு நிலவுகின்றது எனவும் அதற்காக ஏற்றுமதி விவசாயத்

திணைக்களத்தின் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதிக அறுவடை மற்றும் உயர் தரத்தினை கொண்ட பயிர்களை பயிரிடுவதன் தேவைப்பாட்டை பூர்த்தி செய்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பச்சை மஞ்சள் ஒரு கிலோ கிராமின் விலை முறையே ரூபாய்.544 மற்றும் ரூபாய்.418 என்பது அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மஞ்சள் பயிர்ச்செய்கையில் விவசாயிகளுக்கு தமது அறுவடையை விற்பனை செய்து கொள்ள முடியாது மிகவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்திருந்தனர். அதற்கான முறைமையொன்றைத் தயாரிப்பதன் மூலம் விவசாயிகளை அது தொடர்பில் தெளிவுபடுத்துதல் கவனத்தில் கொள்ளத்தக்க மட்டத்தில் இடம்பெறவில்லை.

## 3.5 துறை தொடர்பாக பயிற்சியளித்தல்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஏற்றுமதி பயிர்களை பயிரிடல், அறுவடை செய்தல் மற்றும் பொதியிடுவதற்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் என்பவற்றுக்கான பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்வதுடன் பெற்றுக் கொடுக்கப்படும் பயிற்சியானது மும்மடங்காகும். சேவை பயிற்சி மத்திய நிலையம் மாத்தளை அல்வலவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அங்கு பயிற்சி தேவைப்பாடுகளுக்கான வசதிகளைப் போன்றே தங்குமிட வசதிகளும் காணப்படுகின்றன. கறுவா, மிளகு, கொக்கோ, கோப்பி போன்ற பயிர்களை பயிரிடல் பொதியிடல் மற்றும் விற்பனை தொடர்பில் ஆர்வம் காட்டும் விவசாய குழுக்கள், சனசமூக அமைப்புக்கள், அரசு சாரா அமைப்புகள், தொழில் முனைவோர் குழுக்கள், வேறு அரச / அரை அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இந்த நிறுவனம் பயிற்சி வேலைத் திட்டங்களை நடத்துகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.5.1 பயிற்சி பாடநெறிகளை நடாத்துதல் - ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 17 பிரதேச அலுவலகங்கள் மூலம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 04 வருட காலப் பகுதியினுள் ஏற்றுமதி விவசாயப்பயிர் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் தொடர்பாக விவசாயிகள், வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் ஆகியோரை பயிற்றுவித்தல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| | உற்பத்தியின் பெயர் | பயிற்சி அளிக்கப்பட்ட எண்ணிக்கை 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| i. | மிளகு உலர்த்துதல், வெள்ளை மிளகு உற்பத்தி | 2 | 48 | 58 | 0 |
| ii. | மஞ்சள் தூள் மற்றும் கூழ் உற்பத்தி | 0 | 38 | 0 | 363 |
| iii. | கறுவா குச்சி உற்பத்தி | 19 | 0 | 21 | 16 |
| iv. | கறுவா எண்ணெய் உற்பத்தி | 09 | 10 | 03 | 09 |
| v. | வெள்ளை மிளகு, மிளகு சோஸ், மஞ்சள் தூள் மற்றும் மஞ்சள் பசை, இஞ்சி இனிப்பு, ஜிஞ்சர் பியர், சுவையூட்டப்பட்ட இஞ்சி மாத்திரை உற்பத்தி | 1600 | 1177 | 248 | 201 |
| vi. | மிளகு மற்றும் கறுவா | 13658 | 4093 | 1678 | 1090 |
| vii. | மிளகு, கறுவா, சாதிக்காய், கிராம்பு, கோப்பி, வெனிலா, கொக்கோ, மஞ்சள், இஞ்சி | 8128 | 8519 | 1336 | 2822 |
| viii. | இஞ்சி, மிளகு டொபி, மிளகு, சாதிக்காய் சோஸ், சாதிக்காய் ஜாம், சாதிக்காய் சட்னி உற்பத்தி | 150 | - | 80 | |
| ix | அனைத்து விவசாயப்பயிர்கள் | 4512 | 5195 | 3322 | 1132 |
| | **மொத்தம்** | **28078** | **19080** | **6746** | **5633** |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய 2018 ஆம் ஆண்டில் 17 பிரதேச அலுவலகங்கள் மூலம் 28,078 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி தொடர்பாகப் பயிற்சி அளித்தல் பாரிய அளவில் குறைவடைந்து இருந்ததுடன் அந்தத் தொகைகள் முறையே 19,080, 6,746 மற்றும் 5,633 வரையிலும் குறைவடைந்திருந்தது.

(ஆ) பிரதேச அலுவலகங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட தரப்பினர்களுள் அதிக தொகையினர் விவசாயிகளாக இருந்ததுடன் அவர்களுக்கான பயிற்சி பெரும்பாலும் ஏற்றுமதி விவசாயப்பயிர்களைப் பயிர் செய்தல் சார்ந்ததாக இருந்ததுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக்கான பயிற்சிகள் மிகவும் குறைந்த அளவில் இருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக நேரடியாக அடையாளம் காணப்படக்கூடிய உற்பத்திகளான கறுவா எண்ணெய், மஞ்சள் தூள், பசை, மிளகு சோஸ், மிளகு டொபி, சாதிக்காய் சோஸ், ஜாம், சட்னி, இஞ்சி இனிப்பு, ஜின்ஜர் பியர் போன்ற உற்பத்திகள் தொடர்பாகப் பயிற்சியினை பெற்ற விவசாயிகள், வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை **2018** ஆம் ஆண்டில் **1,759** ஆக இருந்ததுடன் அந்தத் தொகை **2021** ஆம் ஆண்டில் **573** வரையில் **67** சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது.

(ஈ) பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி தொடர்பாகப் பயிற்சி பெற்ற நபர்கள் தொடர்பான தகவல்கள் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் தரவு ஒழுங்கமைப்பினுள் பேணப்பட்டு அவர்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியினை மேற்கொண்டு சந்தைகளுக்கு வழங்குகின்றார்களா என்பது தொடர்பிலும் மற்றும் அவர்கள் அந்த உற்பத்தியை மேற்கொள்ளும் போது எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொண்டு தொடர்ச்சியாக உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு அவர்களுக்கு தேவையான நிவாரண வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடானது செயற்படும் நிலையில் இருக்கவில்லை.

(உ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களில் பயிற்சிக்காகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் ஒரு பகுதி பிரதான பயிற்சி மத்திய நிலையத்திற்கு அனுப்பப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான 04 வருட காலப் பகுதியினுள் அவ்வாறு பிரதான பயிற்சி மத்திய நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 110 ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. பயிற்சி அளிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த எண்ணிக்கையானது முறையே 35. 28. 35, மற்றும் 12 ஆகும். இதற்கமைய பிரதேச ரீதியில் ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் முறையான பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவது குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.5.2 GMP/GAP சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல் - இலங்கை கட்டளைகள் நிறுவனம்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) சான்றிதழ் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சிறந்த உற்பத்தி நடைமுறை சான்றிதழ் (GMP) என்பன ஏற்றுமதி விவசாயப் பயிரை ஏற்றுமதி செய்யும் போது மிகவும் முக்கியமானதாகும். இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் (GAP) இற்கு SLS 1523 part 3 மற்றும் 2017 ஆம் ஆண்டில் GMP SLS 1562 part 1 ஆகிய தரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் (GAP) சான்றிதழைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான தரங்களைத் தயாரித்தல் மற்றும் செயல் தொகுப்பினைத் தயாரித்தல் என்பன 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருந்ததுடன் அதற்காக இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலம் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் கறுவா, மிளகு, கோப்பி மற்றும் கொக்கோ ஆகிய பயிர்களுக்கு உரிய (GAP) சான்றிதழைப் பெற்றுக் கொடுத்தல் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. கொக்கோ பயிரிடும் 25 விவசாயிகளுக்கு (GAP) சான்றிதழ் வழங்கப்பட்டு இருந்ததுடன் கறுவா மற்றும் மிளகு பயிரிடும் 50 விவசாயிகளுக்கு இந்த சான்றிதழை வழங்குவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்பு வேலைத் திட்டம் நீண்ட காலமாக செயற்பட்ட போதிலும் (GAP) சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சிறந்த உற்பத்தி நடைமுறை சான்றிதழ் (GMP) பெற்றுக் கொடுத்தல் இலங்கை கட்டளைகள் நிறுவனம் அல்லது வேறு சர்வதேச தர சான்றிதழ் வழங்கும் நிறுவனத்தினால் ஆகும். இது தொடர்பாக ஏற்றுமதி விவசாயப் பயிர் தொடர்பில் செயற்படுவோரை தெளிவுபடுத்தி அவர்களை சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு ஈடுபடுத்துவதற்கும், சான்றிதழை பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கில் முதலீட்டு நன்கொடை பெற்று கொடுத்தல் என்பன ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் மசாலா பொருட்கள் தொடர்பில் செயற்படும் 06 பேருக்கு மட்டும் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய சிறந்த உற்பத்தி நடைமுறை (GMP) சான்றிதழ் வழங்குதல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.5.3 பயிற்சி பாடநெறிகளை நடத்துதல் - கைத்தொழில் அபிவிருத்தி சபை

இலங்கையில் கைத்தொழில் பிரிவின் அபிவிருத்திக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள முன்னணி அரசு நிறுவனம் கைத்தொழில் அபிவிருத்தி சபையாகும். அதற்கமைய ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த கைத்தொழிலுக்கான தேவைப்பாட்டிற்கு அமைய தேவையான இயந்திரங்களை நிர்மானித்தல், உற்பத்தி, இயந்திரங்களை தெரிவு செய்யும்போது விபரக் குறிப்புகளை தயாரித்தல், பயிற்சி பாடநெறிகளை நடத்துதல், ஒழுங்கமைப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் உற்பத்தி தரத்தினை பெற்றுக் கொள்ளுவதற்கு உதவி செய்தல் போன்ற பல சேவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் 4 ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்குரிய 21 பயிற்சி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டு 758 பேரைப் பயிற்றுவிற்பதற்காக ரூபாய்.692,273 செலவிடப்பட்டு இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் பயிற்சி பாடநெறிகளுக்கான பங்குபற்றல் முந்தைய இரு வருடங்களுடன் ஒப்பிடும்போது குறைவடைந்து இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | நடத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | மொத்த செலவு ( ரூபா ) |
|---|---|---|---|
| 2019 | 6 | 217 | 174,782 |
| 2020 | 5 | 297 | 223,160 |
| 2021 | 8 | 183 | 179,157 |
| 2022 | 2 | 61 | 115,175 |
| **மொத்தம்** | **21** | **758** | **692,273** |

### 3.5.4 விசேட பயிற்சி பாடநெறி - தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

தேசிய பயலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் கறுவா உற்பத்தி செயற்பாடுடிற்காக (Cinnamon Factory Operations) NVQ Level L 3 சான்றிதழ் பத்திரப் பாடநெறி நடாத்தப்பட்டு இருந்தது. அந்த பாடநெறிக்கான பதிவு செய்தல் குறைந்தளவு மட்டத்தில் காணப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டு வரையிலும் ஒரு சான்றிதழ் பத்திரம் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கொழும்புப் பிரதேச அலுவலகத்தில் 2019 ஜூன் மாதம் மாதாந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு இருந்ததுடன் பாடநெறிக்காக பங்குபற்றுவதற்கு தேவையானோரிடம் பட்டியல் பெற்றுத் தருமாறு செயற்திட்ட உத்தியோகத்ததிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு இருந்த போதிலும் அந்த பாடநெறிக்கு ஈடுபடுத்தப்பட்ட நபர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்காதுடன் அந்த பாடநெறிக்கான பதிவு செய்தல் வெற்றிகரமான மட்டத்தில் பேணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

மேலே கூறப்பட்ட 04 நிறுவனங்கள் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் தொடர்பான பயிற்சி பாடநெறிகளை நடத்துதல், உற்பத்திகளின் தரத்தினை உயர்த்துவதற்காக தர சான்றிதழ்களை அறிமுகப்படுத்துதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைகளுக்கு வழங்குதல் மற்றும் உற்பத்திக்கான தர சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதில் ஈடுபடல் என்பன குறைந்த மட்டத்திலேயே உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.5.5 பயிற்சி பாட நெறிகளை நடத்துதல் - கறுவா ஆராய்ச்சி நிறுவனம்

கறுவா தயாரிப்பு மற்றும் பயிர்ச்செய்கை தொடர்பான பயிற்சிப் பாடநெறி நடத்தும் நோக்கில் 2012 ஆம் ஆண்டு தேசிய கறுவா ஆராய்ச்சி மத்திய நிலையம் அமைக்கப்பட்டதுடன் கறுவா கைத்தொழிலின் தீவிர சிக்கலான கறுவா உடைப்பவர்களின் தட்டுப்பாட்டைத் தீர்த்துக் கொள்வதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. பயிற்சி மத்திய நிலையத்தின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

- சிறந்த உற்பத்தி நடைமுறைகளின் கீழ் கறுவா தயாரித்தல்
- சிறந்த விவசாய நடைமுறைகளுடன் பயிர் நிலத்தை முகாமைத்துவப்படுத்தல்
- கறுவா கைத்தொழில் தொடர்பான அடிப்படை தெளிவுபடுத்தல் வேலைத்திட்டம்
- கறுவா நாற்று மேடை முகாமைத்துவம் மற்றும் விதைகளைக் களஞ்சியப்படுத்தல்
- சிறந்த விவசாய நடைமுறைகளை (GAP) பின்பற்றி இயற்கை முறையில் கறுவா உற்பத்தி
- கறுவா பயிர்ச்செய்கையில் காணக்கூடிய ஊட்ட முகாமைத்துவம் பூச்சி மற்றும் நோய் முகாமைத்துவம்
- கறுவா பயிர்ச்செய்கையில் மண் மற்றும் ஊட்ட முகாமைத்துவம்
- கறுவா பெறுமதி சேர்த்தல் மற்றும் விற்பனை
- கறுவா தொழில் முனைவோருக்கான அபிவிருத்தி வேலைத்திட்டம்
- சிறிய அளவிலான கறுவா பயிர்ச்செய்கை முகாமைத்துவம் தொடர்பான அடிப்படை தெளிவு படுத்தல் வேலைத்திட்டம்

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கறுவா பயிற்சி மத்திய நிலையம் 162 பயிற்சி வேலைத் திட்டங்களை நடத்துவதற்காக ரூபாய்.6,261,962 செலவிடப்பட்டு 3,605 பேருக்கு வழங்கப்பட்ட பயிற்சி தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | நடத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | மொத்த செலவு ( ரூபா ) |
|---|---|---|---|
| 2018 | 29 | 696 | 1,966,401 |
| 2019 | 35 | 920 | 613,515 |
| 2020 | 22 | 364 | 160,210 |
| 2021 | 40 | 660 | 1,393,820 |
| 2022 | 36 | 965 | 2,128,015 |
| மொத்தம் | 162 | 3605 | 6,261,962 |

இது தொடர்பாக பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கறுவா பயிற்சி மத்திய நிலையத்தின் மூலம் 2018 - 2022 காலப் பகுதியினுள் 3,605 நபர்களுக்கு கறுவா கைத்தொழில் தொடர்பான 162 வேலைத் திட்டங்கள் நடத்தப்பட்டு இருந்த போதிலும் பயிற்சியினைப் பூர்த்தி செய்த பயிற்சி பெற்றோர் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரா என்பது தொடர்பான தொடர் நடவடிக்கை முறைமை இந்த நிறுவனத்தில் காணப்படவில்லை.

(ஆ) 2018 - 2022 காலப் பகுதியினுள் கறுவா உற்பத்தியாளர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியினை உருவாக்குவதற்கு 595 பயிற்சி வேலைத் திட்டங்கள் நடத்தப்பட்டு இருந்ததுடன் இந்த பயிற்சி அறிவை நடைமுறையில் பயன்படுத்தி சந்தையை இலக்காகக் கொண்ட உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பான அறிக்கைத் தரவுகள் இந்த நிறுவனத்திடம் காணப்படவில்லை.

(இ) கறுவா ஏற்றுமதியாளர்களுக்கு அதிகூடிய விலையினைப் பெற்றுக் கொள்வதற்கு உற்பத்திகளின் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளும் தர சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக (SLS81, GMP, ISO9001, ISO22000, HACCP) பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டு இருந்த போதிலும் பங்கு பற்றிய பயலுநனர்களுள் எந்தளவு தொகையானோர் இந்தத் தரச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டு தமது உற்பத்திகளை உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்குகின்றனர் என்பதை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி இருக்கவில்லை.

இதற்கமைய கறுவா பயிற்சி மத்திய நிலையத்தினால் தமது பயிற்சி வேலைத்திட்டங்களின் செயலாற்றல் மட்டத்தை மதிப்பிடும்போது பயிற்சி பெறுவோருக்கு வழங்கப்படும் பயிற்சியானது நடைமுறையில் களப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில், தயாரிப்புகளில், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளில், சந்தை இலக்கினை தீர்மானித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் எந்த அளவில் நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பில் மதிப்பிடும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதால் இந்த பயிற்சி வேலைத் திட்டங்களின் வெற்றி, தோல்வி என்பவற்றை அடையாளம் கண்டு பயிற்சி முறைமையை இற்றைப்படுத்துதல் இடம் பெற்றிருக்கவில்லை.

### 3.6 ஏற்றுமதி விவசாயப்பயிர் சார்ந்த அண்மைக்கால போக்கு

விவசாய ஏற்றுமதி பங்களிப்பில் ஏற்றுமதி விவசாயப்பயிர்களின் பங்களிப்புகளில் போதியளவு அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதுடன் அது முக்கியமாக பெருந்தோட்ட பயிர்கள் தவிர்த்து பங்களிப்பை பெற்றுக் கொடுக்கக்கூடிய முக்கியமான துறையாகும். ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை ஏற்றுமதி தொடர்பில் புள்ளி விபரத் தகவல்கள் பின்வருமாறு ஆகும்.

#### 3.6.1 இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகளின் பிரகாரம்

இலங்கை மத்திய வங்கி அறிக்கைகளுக்கு அமைய கறுவா, மிளகு, கிராம்பு, சாதிக்காய், கொக்கோ, கோப்பி, பாக்கு, வெற்றிலை ஆகிய பயிர் வகைகளின் ஏற்றுமதி வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளது. அந்த தரவுகளின் பகுப்பாய்வில் மொத்த விவசாய ஏற்றுமதிகளில் அந்த பயிர்களின் ஏற்றுமதி வருமானம் 2017 - 2021 காலப் பகுதியில் 16 சதவீதம் தொடக்கம் 18 சதவீத வீச்சில் காணப்பட்டது. அதற்கமைய 2017 - 2021 காலப் பகுதியினுள் அதன் அதிகரிப்பு 2 சதவீதம் மட்டுமே ஆகும்.

| | **பெறுமதி (ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2018** | **2019** | **2020** | **2021** |
| மொத்த விவசாய ஏற்றுமதி வருமானம் | 2767.2 | 2579.3 | 2461.9 | 2336.2 | 2729.5 |
| ஏற்றுமதி விவசாயப்பயிர் ஏற்றுமதி வருமானம் | 448.61 | 386.83 | 346.07 | 386.73 | 504.28 |
| பங்களிப்பு (சதவீதம்) | 16.21 | 15.00 | 14.06 | 16.55 | 18.48 |
| அதிகரிப்பு (சதவீதம்) | | (1.21) | (0.94) | 2.49 | 1.93 |

***ஆதாரம் : வருடாந்த அறிக்கை, இலங்கை மத்திய வங்கி***



### 3.6.2 இலங்கை சுங்க தரவுகளுக்கு அமைய

(அ) இலங்கை சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் நீண்ட காலம் தொட்டு மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒரு சில பயிர்கள் ஏற்றுமதி நடவடிக்கைகள் தற்போதைய காலத்தில் திருப்திகரமான நிலைமையில் காணப்படவில்லை என இலங்கை சுங்க தரவுகளுக்கு அமைய அவதானிக்கப்பட்டது. விரிவான தரவுகள் இணைப்பு இலக்கம் 8 இல் காட்டப்பட்டுள்ளது.




(ஆ) ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தினால் 15 ஏற்றுமதி விவசாயப் பயிர் வகைகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும் கடந்த 05 வருட தரவுகளை அவதானிக்கும் போது அந்த 15 ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 70 சதவீதத்திற்கும் அதிகமான தொகை 02 ஏற்றுமதி விவசாயப்பயிர் வகையில் தங்கியுள்ளது.

| ஆண்டு | மொத்த ஏற்றுமதி வருமானம் (ரூபாய்.மில்லியன்) | 02 பயிர்களின் வருமானம் (கறுவா, மிளகு) | |
|---|---|---|---|
| | | (ரூபா மில்லியன்) | (சதவீதம்) |
| 2017 | 62,755 | 43,641 | 70 |
| 2018 | 57,429 | 46,927 | 82 |
| 2019 | 55,343 | 39,735 | 72 |
| 2020 | 63,988 | 47,348 | 74 |
| 2021 | 90,221 | 68,549 | 76 |

### 3.6.3 ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தரவுகளுக்கு அமைய

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தரவு வகைப்படுத்தலுக்கு அமைய பிரதான ஏற்றுமதி உற்பத்தி துறைகளில் 2012 ஆம் ஆண்டில் மற்றும் 2021 ஆம் ஆண்டில் தரவு அவதானிப்பின் போது, கடந்த பத்து ஆண்டு காலத்திற்கு இடையில் மசாலா பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் உற்பத்திப் பிரிவின் அதிகரிப்பு 0.97 சதவீதம் மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டது. (இணைப்பு 09)

### 3.6.4 ஏற்றுமதிச் சந்தை

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தரவுகளுக்கு அமைய இலங்கையின் மசாலாப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதி சந்தை 2016 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளை ஒப்பிடும்போது ஏற்றுமதி சந்தை பரந்த வீச்சினை நோக்கி முன்னேறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. (இணைப்பு 10)

### 3.6.5 இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

#### 3.6.5.1 இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கடமைப் பொறுப்புகள்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை எனப்படுவது சட்ட ரீதியான அதிகாரம் மிக்க இலங்கையின் முன்னணி அரச வியாபார ஊக்குவிப்பு நிறுவனம் ஆகும். 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தேசிய ஏற்றுமதி இலக்கை எட்டுவதற்கான உத்திமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றி கொள்கை ஆலோசகர், கண்காணிப்பாளர், ஊக்குவிப்பாளர், வசதி செய்பவர் மற்றும் அறிவு வழங்குபவராக நடவடிக்கை மேற்கொள்ளுகின்றது. அதே போன்று சர்வதேச வியாபாரம் மற்றும் அது தொடர்பான அனைத்து காரணிகளுக்குமான பிரதான இணைப்பு நிறுவனமானது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையாகும். புதிய உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு இலங்கையை முக்கிய ஏற்றுமதி மத்திய நிலையமாக அமைப்பதே இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நோக்காக உள்ளதுடன், அதன் செயற்பாடானது புதிய உற்பத்திகள் தொழில் முனைவோர் மற்றும் உலகளாவிய ஒருங்கிணைப்பின் மூலம் ஏற்றுமதி போட்டித் தன்மையை உறுதிப்படுத்துவதாகும்.

1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளிடையே ஒரு சில கீழே காட்டப்பட்டுள்ளதுடன் அந்நிய செலாவணியை ஈட்டும் போது இலங்கையின் காலநிலை மற்றும் புவியியல் காரணிகளின் அடிப்படையில் வரலாற்று ரீதியாக முக்கியத்துவத்தை வெளிப்படுத்தக் கூடிய ஏற்றுமதி விவசாயப்பயிர் அபிவிருத்தி தொடர்பில் செலுத்தியுள்ள கவனம் போதிய அளவில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

- தேசிய ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கை மற்றும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சு சபைக்கு ஆலோசனை வழங்குதல்

- இலங்கையில் ஏற்றுமதி அபிவிருத்திக்கு வழிகாட்டும் வியாபார ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்வதற்கு பரிந்துரைகளை முன் வைத்தல் அல்லது நாடுகளுக்கு இடையே வணிகக் கொள்கை, நிதி மற்றும் வேறு அது தொடர்பான வேலைத் திட்டங்களை உருவாக்குவதற்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்

- ஏற்றுமதி உற்பத்திகள் வழங்கலை அபிவிருத்தி செய்யும் வசதிகளை உருவாக்குதல்
- ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி மற்றும் அது தொடர்பான அனைத்து சிக்கல்களையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடிய, அரசாங்கம் உள்ளிட்ட மத்திய நிலையமாக செயற்படுதல்

- இந்த சட்டத்தில் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் சேதம் ஏற்படாது அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பொதுவான ஏற்றுமதி சேவையினை நடைமுறைப்படுத்துதல் அல்லது வழங்குதல்
    - உற்பத்தியாளர்களுக்கு மற்றும் வியாபாரிகளுக்கு நிகழ் நேர முக்கியத்துவம் வாய்ந்த வியாபார தகவல்கள்
    - வெளிநாட்டு சந்தைகளின் விற்பனை ஆராய்ச்சிகள்
    - ஏற்றுமதி சந்தைகளுக்கு புதிய உற்பத்திகளை உருவாக்குதல் மற்றும் இருக்கும் உற்பத்திகளை ஏற்றுமதி சந்தைகளுக்கு பொருத்தமான வகையில் தயாரிப்பதற்கான உதவி வழங்குதல்
    - சோதனை விற்பனை முயற்சிகள் உள்ளிட்ட புதிய உற்பத்திகளை விற்பனை செய்தல் அல்லது புதிய சந்தைக்கு உள்ளிடும் ஆரம்ப சந்தர்ப்பத்தில் உதவி செய்தல்

- கொழும்பில் மற்றும் வெளிநாடுகளில் ஏதேனும் இடங்களில் கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடையே சந்திப்புகளை ஒழுங்கு செய்தல்
- ஏற்றுமதி ஆலோசனை சேவை
- வியாபார கண்காட்சி, வியாபாரக் கூடங்கள் மற்றும் வியாபாரத்தை ஊக்குவிக்கும் வேறு முறைமைகளுக்கு பங்குபற்றுவதற்கு உதவி செய்தல்
- வியாபார ஊக்குவிப்பு மற்றும் ஏற்றுமதி விற்பனை நடவடிக்கை தொடர்பான பயிற்சி பாடநெறிகள்
- ஏற்றுமதி உற்பத்தியாளர்களினால் மற்றும் ஏற்றுமதியாளர்களினால் முகம் கொடுக்கும் சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கு உதவி செய்தல்
- தரக் கட்டுப்பாடு, பொதியிடல், இறக்குமதி கடன் வசதிகள், மற்றும் காப்புறுதி தொடர்பாக உதவி செய்தல்
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயற்பாடுகளில் மற்றும் ஆவண தயாரிப்பில் உதவி செய்தல்

### 3.6.5.2 இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்தல்

(அ) 1985 ஜூன் 27 ஆம் திகதியிடப்பட்ட 355/14 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான கட்டளையின் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு தொடர்பான சட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தவிர வணிகப் பெறுமதி உள்ள ஏதேனும் ஒரு பொருள் 1985 ஓகஸ்ட் 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஏற்றுமதி செய்யும் எந்த ஒரு நபரும் இந்த கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் எனும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அனைத்து ஏற்றுமதியாளர்களும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்தல் கட்டாயமாகும். அதே போன்று ஒவ்வொரு வருடமும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்தல் புதுப்பிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வாறு ஏற்றுமதியாளராக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்வதனால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட வரப்பிரசாதங்களை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

- ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் ஒழுங்கு செய்யப்படும் கண்காட்சி, செயற்திட்டம், பயிற்சி உள்ளிட்ட ஏனைய அபிவிருத்தி ஊக்குவிப்பு வேலைத் திட்டங்களில் பங்குபற்றக் கூடியதாக உள்ளமை
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் ஏற்றுமதியாளர்களின் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் அரச மற்றும் சட்ட ரீதியான நிறுவனங்களுடன் பரிமாற்றம் செய்யப்படுவதால் அந்த நிறுவனங்களில் இடம் பெறும் ஏற்றுமதி ஆவண செயல்முறை மற்றும் நடவடிக்கை இலகுவாதல் மற்றும் அந்த நிறுவனங்களில் ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்கும் வரவேற்பு மற்றும் நம்பிக்கை
- வெளிநாட்டு வியாபாரங்களில் கொள்வனவாளர்களிடம் இருந்து கிடைக்கும் வரவேற்பு மற்றும் நம்பிக்கை
- இலகுவாக வெளிநாட்டு நாணயக் கணக்கினை (Foreign Currency Account) திறப்பதற்கு உதவியாக இருக்கும்
- வெளிநாட்டு பயணங்களுக்கு விசா பெற்றுக் கொள்வது சுலபமாகும்
- ஏற்றுமதியாளர்களின் மன்றத்தின் ஊடாக ஏற்றுமதியாளர்களுக்கு காணப்படும் வியாபார சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கு கிடைக்கும் சந்தர்ப்பம்
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பேணப்பட்டு வரும் இலங்கை ஏற்றுமதியாளர்களின் பெயர் பட்டியலில் இணைவதற்கான சந்தர்ப்பம்
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் தொடர்புடைய வெளிநாட்டு கொள்வனவாளார்களை இலகுவாக பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களுடன் தொடர்புபடுத்தக் கூடியதாக உள்ளமை
- வருடாந்தம் நடாத்தப்படும் ஜனாதிபதி ஏற்றுமதி விருதுக்கு விண்ணப்பிப்பதற்கு அடிப்படைத் தகமை ஆகும்.
- பொருட்கள் மற்றும் சந்தை தொடர்பாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மூலம் ஆலோசனை சேவையினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

(ஆ) 2019 ஏப்ரல் 11 ஆம் திககியிடப்பட்ட இலக்கம் 2118/60 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் “1985 ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்யும் பிரேரணை முறை கட்டளை, அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட எதற்கும் பாரபட்சம் இல்லாத வகையில் திருத்தப்பட்டுள்ளது” என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய அப்போது இருந்து ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் எனும் தேவைப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் தெளிவுபடுத்தப்பட்டிருந்த வகையில் இவ்வாறு ஏற்றுமதி செயற்பாடுகளில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்படுதல் அவசியமானதாக இல்லாத போதிலும், ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய விஷேட வரப்பிரசாதம் காரணமாக ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்த்து இருக்கும் வியாபாரிகளினால் தொலைபேசி ஊடாக பாரிய அளவில் விண்ணப்பங்கள் மற்றும் விசாரணைகள் கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ) ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் தற்காலிக / நிரந்தர பதிவு செய்தல் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு மூலப்பிரமாணங்களையும் கருத்தில் கொள்ளுவது முக்கியமானது என்பதால் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் ஒரு நிறுவனத்தினுள் பதிவு செய்யப்படுவதால் அனைத்து ஏற்றுமதியாளர்களும் ஒரு நிறுவனத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்படும் சந்தர்ப்பத்தைக் காண முடியும்.

இவ்வாறான பின்புலத்தில், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிடம் உள்ளது 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் தொடர்பான தரவுகள் மட்டுமே ஆகும். அதற்கமைய மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளின் 603 ஏற்றுமதியாளர்களின் பதிவு செய்யப்பட்ட தரவுகள் கணக்காய்வுக்கு கிடைக்கப் பெற்றிருந்ததுடன் ஒவ்வொரு வருடத்திலும் பதிவு செய்யப்பட்டிருந்த எண்ணிக்கை பின்வருமாறு ஆகும்.

| **ஆண்டு** | **பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை** |
|---|---|
| 1985 | 02 |
| 1992 | 01 |
| 2009 | 04 |
| 2010 | 07 |
| 2011 | 13 |
| 2012 | 23 |
| 2013 | 26 |
| 2014 | 29 |
| 2015 | 33 |
| 2016 | 57 |
| 2017 | 36 |
| 2018 | 34 |
| 2019 | 9 |
| பதிவு செய்யப்பட்ட திகதி குறிப்பிடப்படாத | 329 |
| **மொத்தம்** | **603** |

இதற்கமைய மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் தொடர்பான முறையான தகவல் ஒழுங்கமைப்பு எந்த ஒரு நிறுவனத்திடமும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக துறையின் முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கு அது தடையாகக் கூடியதாக உள்ளது.

**3.6.5.3 மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் தொடர்பான தரவுகள்**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்தல் 2019 ஆம் ஆண்டின் பின்னர் கட்டாயமாக்கப்படாத காரணத்தால் அந்த வருடத்தின் பின்னர் அனைத்து ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதி விவசாயப்பயிர் ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்களின் 2018 ஆம் ஆண்டுக்கான தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது ஏற்றுமதி சந்தையில் 363 ஏற்றுமதியாளர்கள் ஈட்டியிருந்த ரூபாய்.53,418 மில்லியன் தொகையில் 76.45 சதவீதமானது 33 ஏற்றுமதியாளர்களிடையே மட்டும் தங்கி இருந்தது. அதற்கமைய ஏனைய ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் ஏற்றுமதி நடவடிக்கைகளில் இருந்து பெற்றுக் கொள்ளும் வருமானம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. விரிவான தகவல்கள் இணைப்பு இலக்கம் 11 இல் காட்டப்பட்டுள்ளது.

**3.6.6 தெரிவு செய்யப்பட்ட ஏற்றுமதி விவசாயப்பயிர்களின் ஏற்றுமதி வருமானம்**

**3.6.6.1 கறுவா பயிர்ச்செய்கை**

(அ) 2016 ஆம் ஆண்டில் ஏற்றுமதி விவசாயப் பயிர் ஏற்றுமதியின் மூலம் கிடைத்த மொத்த வருமானத்தில் ரூபாய்.23,176 மில்லியன் அதாவது மொத்த வருமானத்தில் 52 சதவீதம் கறுவா ஏற்றுமதியின் மூலம் கிடைத்திருந்தது. 2020 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதி விவசாயப் பயிர் வருமானத்தில் 60 சதவீதம் கறுவா ஏற்றுமதியின் மூலம் கிடைத்திருந்தது. அதன் பெறுமதி ரூபாய் 38,218 மில்லியன் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் 42,454,285 கிலோ கிராமாக இருந்த ஏற்றுமதி விவசாயப் பயிர் ஏற்றுமதித் தொகையில் 34 சதவீதம் கறுவா என்பது அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி விவசாயப் பயிர் ஏற்றுமதித் தொகையில் 48,992,848 கிலோகிராம் வரையில் அதிகரித்து இருந்ததுடன் அதில் கறுவா ஏற்றுமதித் தொகை 18,721,834 கிலோ கிராமாக அதாவது 38 சதவீதமாக அதிகரித்து இருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் ஒரு கிலோகிராம் கறுவாவின் சராசரி ஏற்றுமதி வருமானம் ரூபாய்.1,577 ஆக இருந்தத்துடன் அதன் பெறுமதி அமெரிக்க டொலர் 11 ஆகும். 2020 ஆம் ஆண்டில் ஒரு கிலோ கிராம் கறுவாவின் ஏற்றுமதி வருமானம் ரூபாய் 2,041 வரையில் அதிகரித்து இருந்த போதிலும் அதன் பெறுமதி அமெரிக்க டொலர் 11 ஆகும். இதற்கமைய 5 வருட காலத்தினுள் ஒரு கிலோ கிராம் கறுவாவின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துக் கொள்ளுவதற்கு தவறியிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **ரூபா** | **அமெரிக்க டொலர்** |
|---|---|---|
| 2016 | 1577 | 11 |
| 2017 | 1858 | 12 |
| 2018 | 1987 | 12 |
| 2019 | 1832 | 10 |
| 2020 | 2041 | 11 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கறுவா ஏற்றுமதியைக் கவனத்தில் கொள்ளும்போது அதிக அளவிலான கறுவாத் தொகை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள நாடுகளுள் மெக்சிகோ பிரதான இடம் வகிக்கின்றது. 2016 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 69.3 மில்லியன் பெறுமதியான கறுவா அதாவது மொத்த கறுவா ஏற்றுமதியில் 52.43 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டு இருந்தது.

(ii) பொதுவாக மெக்சிகோ இறக்குமதியாளர்கள் கறுவாவிற்கு எதுவிதமான தரச் சான்றிதழ்களையும் கோருவதில்லை. அவ்வாறு இருக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் கொள்வனவாளர்கள் (இறக்குமதியாளர்கள்) உற்பத்தி மற்றும் உற்பத்தி தரம் தொடர்பாக மிகவும் அக்கறை காட்டுவர். அந்த தரச் சான்றிதழ்களுள் SLS 81:2020, ISO 6535:1997 GAP, GMP, fair trade, microbiological safety requirement என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. இதனால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதித் தொகை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) 2013 ஜூன் 05 ஆம் திகதி இடப்பட்ட 1813/15 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கறுவாவிற்கான SLS 81:2010. தரம் 2014 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஏப்ரல் 03 ஆம் திகதி அப்போதைய நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் போது வர்த்தமானி அறிவித்தலை செயலிழக்க செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதற்குரிய வர்த்தமானி வெளியிடப்பட்டு இருக்கவில்லை. 2021 மே 30 ஆம் திகதி ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் மீண்டும் இலக்கம் 1813/15 கொண்ட வர்த்தமானி அறிவித்தலை செயற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியதன் பின்னர் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை தயாரிக்கப்பட்டு வருவதாக இலங்கை கட்டளைகள் நிறுவனம் தெரிவித்திருந்தது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான 9 வருட காலப் பகுதியினுள் ஏற்றுமதி செய்யப்பட்ட கறுவாவிற்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் மேலே கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அனுமதி சான்றிதழ் அல்லது தரச் சான்றிதழ் வழங்கியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.6.6.2 மிளகு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வருமானம்

இது தொடர்பாக பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டில் ரூபாய்.44,510 மில்லியனான மொத்த ஏற்றுமதி விவசாயப் பயிர் வருமானத்தில் ரூபாய்.10,530 மில்லியன் அதாவது 23 சதவீதம் மிளகு ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்பட்டு இருந்தது. 2020 ஆம் ஆண்டளவில் மொத்த ஏற்றுமதி விவசாயப் பயிர் ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானமான ரூபாய்.63,961 மில்லியனில் 14 சதவீதம் மிளகு ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்பட்டு இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் 7,875,553 கிலோகிராம் மிளகை ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூபாய்.10,530 மில்லியன் ஈட்டப்பட்டு இருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் 9,038,450 கிலோகிராம் மிளகை ஏற்றுமதி செய்ததன் மூலம் ஈட்டப்பட்டிருந்த வருமானம் ரூபாய்.9,128 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் ஏற்றுமதித் தொகை 1,162,897 கிலோகிராமால் அதிகரித்து இருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏற்றுமதி வருமானம் ரூபாய்.1,402 மில்லியனால் குறைந்து இருந்தது. இதற்கமைய ஒரு கிலோகிராம் மிளகின் ஏற்றுமதி வருமானம் கடந்த 05 வருட காலப் பகுதியினுள் குறைந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டில் ரூபாய்.1,337 ஆக இருந்த ஒரு கிலோ கிராம் மிளகின் பெறுமதி அமெரிக்க டொலர் 9 ஆன போதிலும் 2020 ஆம் ஆண்டளவில் ஒரு கிலோகிராம் மிளகின் விலை ரூபாய்.1,010 வரையில் அதாவது அமெரிக்க டாலர் 05 வரையில் குறைவடைந்து இருந்தது. இதற்கமைய 05 வருட காலப் பகுதியினுள் மிளகின் உற்பத்தித் தொகையினை அதிகரித்துக் கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி தொடர்பில் கவனத்தை செலுத்தி ஏற்றுமதி வருமானத்தை மேலும் அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கற்பூரப் புல், கொக்கோ, வெனிலா மற்றும் கோப்பி ஆகிய 4 பயிர்களின் அலகொன்றுக்கான ஏற்றுமதி வருமானம் மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும் மொத்த ஏற்றுமதி விவசாயப் பயிர் ஏற்றுமதி வருமானத்தில் மிகவும் குறைந்த வருமானமே இந்த 4 பயிர்களில் இருந்து கிடைத்துள்ளது என்பது கீழே உள்ள தரவுகளுக்கு அமைய அவதானிக்கப்பட்டது.

| உருப்படி | 2016 | | 2017 | | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதி தொகை (கிலோகிராம் | பெறுமதி (ரூபா மில்லியன்) | ஏற்றுமதி தொகை (கிலோகிராம் | பெறுமதி (ரூபா மில்லியன்) | ஏற்றுமதி தொகை (கிலோகிராம் | பெறுமதி (ரூபா மில்லியன்) | ஏற்றுமதி தொகை (கிலோகிராம் | பெறுமதி (ரூபா மில்லியன்) | ஏற்றுமதி தொகை (கிலோகிராம் | பெறுமதி (ரூபா மில்லியன்) |
| கற்பூர புல் | **304** | **1.1** | **984** | **5.0** | **5,392** | **28.5** | **5,745** | **31.2** | **2,762** | **18.7** |
| கொக்கோ | **4,355** | **4.1** | **26,710** | **17.9** | **4,283** | **5.2** | **2,043** | **3.2** | **2,805** | **3.9** |
| வேனிலா | **1,057** | **18.1** | **5,995** | **27.0** | **1,553** | **63.2** | **709** | **24.8** | **624** | **25.7** |
| கோப்பி | **13,685** | **20.5** | **13,793** | **29.2** | **23,605** | **46.6** | **22,695** | **63.1** | **26,643** | **58.6** |
| மொத்தம் | **19,402** | **43.9** | **47,482** | **79.2** | **34,832** | **143.** | **31,191** | **122.4** | **32,834** | **107.0** |
| மொத்த ஏற்றுமதி வருமானம் | **42,454,285** | **44,510.2** | **56,386,248** | **62,491.7** | **44,951,691** | **57.,252.07** | **43,868,934** | **55,299.4** | **8,992,848** | **63,961.7** |
| 4 பயிர்களின் வருமான சதவீதம் | **0.0457** | **0.0988** | **0.0842** | **0.1268** | **0.0775** | **0.2509** | **0.0711** | **0.2215** | **0.0670** | **0.1674** |

## 3.7 மீள் ஏற்றுமதி

(அ) 8 ஏற்றுமதி விவசாயப் பயிர்களை இறக்குமதி செய்தலைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு 2020.08.17 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2189/04 கொண்ட வர்த்தமானி வெளியிடப்பட்டு இருந்ததுடன் அது 2022 டிசம்பர் 16 ஆம் திகதியான கணக்காய்வுத் திகதி வரையிலும் செல்லுபடியானதாக இருந்த போதிலும் அந்தக் காலப் பகுதியினுள் குறித்த 8 பயிர்களுக்கும் உரியதான 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் முறையே 310,091 கிலோகிராம் மற்றும் 105,844 கிலோ கிராம் இறக்குமதி செய்யப்பட்டு இருந்தது. இதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை முறையே ரூபாய்.254,801,281 மற்றும் ரூபாய்.237,407,229 ஆக இருந்தது.

(ஆ) 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 8 பயிர்களுக்கு உரியதான முறையே 301,091 கிலோ கிராம் மற்றும் 105,844 கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்டு இருந்த போதிலும் அந்தக் காலப் பகுதியினுள் குறித்த 8 பயிர்களுக்கும் உரிய மீள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த தொகை முறையே 196,387 கிலோ கிராம் மற்றும் 65 கிலோ கிராம் என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2018 ஆம் ஆண்டில் குறைந்த விலையின் கீழ் இலங்கைக்கு மிளகு இறக்குமதி செய்யப்பட்டு மீள் ஏற்றுமதி செய்தல் தொடர்பான சிக்கல் கலந்துரையாடப்பட்டு இருந்ததுடன் அவ்வாறான நிலைமையில் மிளகு இறக்குமதி தொடர்பான கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மொத்தமாக மிளகு 110,742 கிலோ கிராம் இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும் 267 கிலோ கிராம் மட்டுமே மீள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய 8 ஏற்றுமதி விவசாயப்பயிர்களின் இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த காலப் பகுதியினுள் அந்தப் பயிர்களை இறக்குமதி செய்யும் தேவைப்பாடு தொடர்பாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

2018 தொடக்கம் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பான விபரங்கள்

| இலக்கம் | பயிர் | 2021 | | | | 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இறக்குமதி தொகை (கிலோ கிராம்) | இறக்குமதி பெறுமதி (ரூபா) | மீள் ஏற்றுமதி தொகை (கிலோ கிராம்) | மீள் ஏற்றுமதி பெறுமதி (ரூபா) | இறக்குமதி தொகை (கிலோ கிராம்) | இறக்குமதி பெறுமதி (ரூபா) | மீள் ஏற்றுமதி தொகை (கிலோ கிராம்) | மீள் ஏற்றுமதி பெறுமதி (ரூபா) |
| 01 | கறுவா | 87 | 86,107 | 32 | 40,862 | 18,030 | 52,343,529 | 5 | 22,195 |
| 02 | கிராம்பு | 10,011 | 11,273,841 | 297 | 274,454 | 2 | 8,327 | | . |
| 03 | மிளகு | 59,208 | 68,186,770 | 207 | 187,151 | 51,534 | 129,183,841 | 60 | 166,263 |
| 04 | ஏலக்காய் | 512 | 545,105 | 1,926 | 1,941,869 | 131 | 431,046 | . | . |
| 05 | சாதிக்காய் | 2 | 4,836 | . | . | 1 | 5,541 | . | . |
| 06 | இஞ்சி | 472 | 465,495 | . | . | 121 | 656,845 | . | . |
| 07 | மஞ்சள் | 799 | 583,567 | 193,925 | 48,415,258 | 24 | 60,079 | . | . |
| 08 | பாக்கு | 239,000 | 173,655,560 | . | . | 36,000 | 54,718,021 | . | . |
| **மொத்தம்** | | **310,091** | **254,801,281** | **196,387** | **50,859,954** | **105,844** | **237,407,229** | **65** | **188,458** |

ஆதாரம் - புள்ளி விபரவியல் பிரிவு, இலங்கை சுங்கம்

## 3.8 ஏற்றுமதி ஊக்குவிப்பு

### 3.8.1 மசாலா பொருட்களுக்கான வியாபாரக் குறியீட்டினை கட்டி எழுப்புதல் மற்றும் நிலை நிறுத்துதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை புவியியல் ரீதியாகவும் மற்றும் உள்நாட்டு ரீதியாகவும் ஒரு நாடாக மற்றும் உற்பத்தி மற்றும் சேவைகளுக்கு உரிய வர்த்தக நாமத்தை கட்டி எழுப்புதல் மற்றும் நிலை நாட்டுதல் தேசிய ஏற்றுமதி உத்திமுறையில் வியாபார ஊக்குவிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தியாவசியமான ஒரு அங்கமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய ஏற்றுமதி அபிவிருத்தி சபை மசாலா பொருட்களிடையே கறுவா, மிளகு, ஏலக்காய், சாதிக்காய் மற்றும் கிராம்பு ஆகிய 05 பயிர் வகைகளுக்கும் வெவ்வேறாக 05 வர்த்தக நாமமும் ''இலங்கை மசாலா பொருட்கள்'' (Ceylon Spices) வர்த்தக நாமமும் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. வர்த்தக நாமத்தை உருவாக்கும் நடவடிக்கைகளுக்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 06 மில்லியன் தொகை செலவிடப்பட்டு இருந்தது. வியாபாரக் குறியீட்டினை பதிவு செய்வதற்குரிய அனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருந்த போதிலும், தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் ஊடாக பதிவினை முழுமையாக்குவதற்குரியதாக இதுவரையிலும் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாத போதிலும் மசாலாப் பொருட்கள் ஏற்றுமதி மத்திய நிலையத்தில் உள்ள சுமார் 394 ஏற்றுமதியாளர்கள் (2021 சுங்க தரவுகளுக்கு அமைய) தொகையில் இந்த வர்த்தக நாமத்தை பெற்றுக் கொண்டிருந்த ஏற்றுமதியாளர்கள் 05 பேர் மட்டுமே ஆகும்.

(ஆ) இதுவரையிலும் பதிவு செய்யப்பட்ட வியாபாரக் குறியீட்டிற்கு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்பட்டிருக்காமை தொடர்பில் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் ஊடாக செய்யப்பட்ட விசாரணைக்கு பதிவு செய்வதற்கு எண்ணி உள்ளது சான்றிதழ் குறியீடா எனத் தெரிவிக்குமாறும் மற்றும் அதற்காக வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த விண்ணப்பப் படிவ கட்டணத்திற்கு மேலதிகமாக ரூபாய்.2,300 தொகையினைச் செலுத்துமாறும், சான்றிதழ் குறியீட்டினைப் பயன்படுத்தும் போது தாக்கத்தை ஏற்படுத்தும் நிபந்தனை ஆவணத்தினை சமர்ப்பிக்குமாறும் எழுத்து மூல அறிவிப்பின் மூலம் 2020 மே 29 ஆம் திகதி விண்ணப்பதாரிக்கு வழங்கப்பட்டுள்ளது என கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரையிலும் அந்தப் பதிவினை பூர்த்தி செய்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபை தவறியிருந்தது.

(இ) இந்த வர்த்தக நாமத்தை முதல் தடவையாக 2019 ஆம் ஆண்டு கொழும்பில் ரூபாய்.650,000 செலவிடப்பட்டு உள்நாட்டு ரீதியில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதில் ரூபாய்.150,000 ஏற்றுமதி அபிவிருத்தி சபையினாலும் மற்றும் மீதி UNIDO நிறுவனத்தின் மூலமும் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் 2019 ஆம் ஆண்டில் ஐரோப்பிய சந்தைகளில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபாய்.7.5 மில்லியன் தொகை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் செலவிடப்பட்டிருந்தது.

இங்கு இலங்கை கட்டளைகள் நிறுவனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் மற்றும் வணிக அமைச்சு ஆகிய நிறுவனங்களின் ஒரு பிரதிநிதி வீதம் கொண்ட குழுவின் மூலம் ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள், தர சான்றிதழ்கள் (மசாலா பொருள் வகைகளுக்கு உரியதாக இலங்கை தரத்திற்கு இணங்க அங்கீகாரம் பெற்ற ஆய்வுக்கூடத்தில் வழங்கப்பட்ட), GMP (ஆகக் குறைந்த தகைமை) / ISO, HACCP அல்லது ஒரு தரச்சான்றிதழ் மற்றும் மாதிரி ஆய்வு செய்யப்பட்டதன் பின்னர் வர்த்தக நாமத்தினை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும். இதற்குத் தேவையான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த வர்த்தக நாமத்தை இதுவரையிலும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் இணையதளத்தில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏற்றுமதி சந்தையில் வேறு நாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் தரம் குறைந்த உற்பத்திகளில் இருந்து வேறுபட்டு இலங்கையின் உற்பத்தியாக அடையாளத்தை உறுதிப்படுத்துதல் இந்த வர்த்தக நாம பயன்பாட்டின் விசேட வரப்பிரசாதமாகும். எனினும் கணக்காய்வு தினம் வரையிலும் இந்த வர்த்தக நாம பயன்பாடு ஏற்றுமதியாளர்களிடையே போதிய அளவு பிரபல்யமாக இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.8.2 தூய இலங்கை கறுவா குறியீடு Pure Ceylon Cinnamon Logo

இந்தக் தூய இலங்கை குறியீடு இலங்கையின் உற்பத்தியான கறுவா மற்றும் கறுவா சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்குப் பயன்படுத்த முடியும். இதற்காக தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் 2012 அக்டோபர் 22 ஆம் திகதி பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதன் 10 வருட செல்லுபடியாகும் காலம் 2022 அக்டோபர் 22 ஆம் திகதி நிறைவடையும். இதற்குரிய விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) இந்த வர்த்தக நாமக் குறியீட்டினை பயன்படுத்துவதனால் ஏற்றுமதியாளர்களுக்கு சர்வதேச ரீதியில் அதிக வரவேற்பு, உலக சந்தையில் காணப்படும் தரம் குறைந்து உற்பத்திகளில் இருந்து வேறுபட்டு அடையாளம் காணக்கூடியதாக உள்ளமை, உற்பத்தியின் பெறுமதி மற்றும் தரம் அதிகரித்தல், உலக சந்தையில் PCC குறியீட்டுடனான கறுவா உற்பத்திகளின் சுத்தத்தினை உறுதிப்படுத்துதல், சிறந்த விலைக்கு, அதிக சர்வதேச சந்தைகளுக்கு ஏற்றுமதியை பல்வகைப்படுத்தல் என்பன விசேட வரப்பிரசாதங்களாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என ஏற்றுமதி அபிவிருத்தி சபை சுட்டிக்காட்டி உள்ளது.

இந்த வர்த்தக நாமத்தை உருவாக்குதல் உள்ளிட்ட வர்த்தக நாமத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளுக்காக இதுவரையிலும் ரூபாய்.13,713,332 தொகை செலவிடப்பட்டு இருந்தது.

| **விபரம்** | **செலவு (ரூபா)** |
|---|---|
| PCC Logo உருவாக்குவதற்காக - 2009 | 600,000 |
| வர்த்தக நாமம் பதிவு செய்வதற்காக (SL, EU, USA, Mexico, Peru and Colombia) | 2,800,000 |
| வர்த்தக நாமத்தினை அறிமுகப்படுத்தும் விழாவிற்காக - கொழும்பு - 2010 | 1,200,000 |
| வர்த்தக நாமத்தினை அறிமுகப்படுத்தும் விழாவிற்காக - கொழும்பு - 2011 | 9,000,000 |
| PCC தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் - 2018 | 113,332 |
| **மொத்த செலவு** | **13,713,332** |

PCC Logo பெற்றுக் கொள்ளும் ஏற்றுமதியாளர்கள் அதனைப் பதிவு செய்யும்போது ரூபாய்.7,500 தொகை செலுத்தப்பட வேண்டியதுடன் வருடாந்தம் அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிக்கும் போது ரூபாய்.6,000 தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) கறுவா மற்றும் கறுவா சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடும் 131 ஏற்றுமதியாளர்களிடையே (2021 சுங்க தரவுகளுக்கு அமைய) PCC Logo பெற்றுக் கொண்ட ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை 20 மட்டுமே ஆகும். பாரிய அளவில் செலவிடப்பட்டு இந்த வர்த்தக நாமத்தினை அறிமுகப்படுத்தி சுமார் 10 வருட காலம் கடந்துவிட்ட போதிலும் அதன் பாவனை ஏற்றுமதியாளர்களிடையே போதியளவில் பிரபல்யமடைந்து இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்னிணைப்பு 12 இன் பிரகாரம் ஆகும்.

### 3.8.3 ஏற்றுமதியாளர்கள் வர்த்தக நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகளில் பங்குபற்றுதல்

வர்த்தக நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகள் என்பன இலங்கை உற்பத்தி மற்றும் சேவைகளை உலகளாவிய சந்தைகளில் காட்சிப்படுத்துவதற்கு மற்றும் உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் மற்றும் உலகளாவிய கொள்வனவாளர்களிடையே தொடர்பினைக் கட்டி எழுப்புவதற்கு உள்ள சிறந்த முறையாகும். இது தொடர்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை பி2பி ஊக்குவிப்பிற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக வெளிநாட்டு சந்தைகளில் சர்வதேச வியாபார கண்காட்சிகளுக்கு இலங்கை ஏற்றுமதியாளர்களின் பங்களிப்பினை ஒழுங்கு செய்தல், உள்நாட்டு வர்த்தக நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல், மத்திய தர ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பு செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்துவதற்கு உலகளாவிய வர்த்தக நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகளுக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோரின் பங்கேற்கச் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுகின்றது. ஏற்றுமதியாளர்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையாடல்களுக்கு அமைய இவ்வாறான வேலைத் திட்டங்களில் பங்குபற்றுவதனால் வெளிநாட்டு சந்தை சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது. Bio Fach, Gulfood, IFEAT போன்ற வர்த்தக கண்காட்சிகளுக்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபை பங்குபற்றி இருந்த போதிலும் கடந்த 3 வருட காலப் பகுதியினுள் பங்குபற்றி இருக்காததன் காரணமாக எட்டக்கூடிய வாய்ப்புகளை அதிகரிப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் அர்த்தமுள்ளதாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.8.4 கறுவாவிற்கான புவியியல் சுட்டியினைப் (GI) பெற்றுக் கொள்ளுதல்

விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) கறுவாவிற்கான அனைத்து உணவு மேம்பாடு மற்றும் புலமைச் சொத்துக்களை பாதுகாப்பதற்கான உரிமைகள் அமைச்சரவை அனுமதியின் மூலம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு உரித்து உடையதாக உள்ளது. அதற்கமைய கறுவாவிற்கான புவியியல் சுட்டியைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பெறுபேறாக 2022 பிப்ரவரி 02 ஆம் திகதி GI சான்றிதழ் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சான்றிதழைப் பெற்றுக் கொண்டதனால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பலன்கள் கிடைக்கும் என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

- உள்நாட்டு ரீதியில் மரபு ரீதியான உற்பத்திகள் மற்றும் உற்பத்தி முறைகளுக்கு பெற்றுக் கொள்ளப்படக்கூடிய உயரிய புலமைச் சொத்து பாதுகாப்பு இதன் மூலம் உரித்தாகும்
- இலங்கை கறுவா, இலங்கையின் மரபு ரீதியான உற்பத்தியாக இருப்பதுடன் அதன் தயாரிப்பு முறைமைகள் இதன் மூலம் பாதுகாக்கப்படுகின்றது என்பது
- கிராமிய ரீதியாக பரந்து காணப்படும் கறுவா விவசாயிகள், சேகரிப்பாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட கறுவா வழங்கல் வலையமைப்பை இறுதி உற்பத்தியில் பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்பது
- அதன் மூலம் கிராமிய பிரதேசத்தினுள் உற்பத்தியினை விரிவாக்குவதற்கும் மற்றும் கிராமிய அபிவிருத்திக்கு சந்தர்ப்பம் ஏற்படும் என்பதும்
- GI கறுவாவிற்கு விவசாயிகளுக்கு GAP சான்றிதழும் உற்பத்தியாளர்களுக்கு GMP சான்றிதழும் ஏற்றுமதியாளர்களுக்கு HACCP சான்றிதழும் கட்டாய அங்கமாக உள்ளது என்பதால் இலங்கைக் கறுவாவின் தரத்தினை உயர்த்த முடியும் என்பது
- உள்நாட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக் கொள்ளளவை உயர்த்தக் கூடியதாக உள்ளமை மற்றும் அதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிக்க முடியும் என்பது
- புவியியல் சுட்டி விபரக் குறிப்புகளுக்கு இணங்க கறுவா தயாரிப்பின் மூலம் தர நிலையில் உயர்ந்த கறுவாவினை சந்தைகளுக்கு வழங்க முடியும் என்பது

- வெளிநாட்டு சந்தையில் கறுவாவிற்கான ஏனைய போட்டி நாடுகளை விட உண்மையான இலங்கை கறுவாவை விற்பனை செய்வதற்கும் மற்றும் உயர்ந்த வருமானத்தினை பெற்றுக் கொள்வதற்கும் வழி பிறக்கும் என்பது
- கறுவாவிற்கு எதிர்வரும் ஆண்டுகளில் பில்லியன் தொகையான அமெரிக்க டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது என்பது

இந்த பலன்கள் கறுவா பெறுமதி சேர்ப்பதினுள் இருக்கும் சிறிய அளவிலான விவசாயிகள் உள்ளிட்ட கறுவா பயிர்ச்செய்கையாளர்கள், தயாரிப்பாளர்கள், வியாபாரிகள், நாற்று மேடை உரிமையாளர் மற்றும் உற்பத்தியாளர்களினால் உருவாக்கப்பட்ட சுமார் 50,000 கறுவா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களுக்கு GI செயற்பாட்டில் பதிவு செய்து வரப் பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த செயற்பாட்டிற்குப் பல்வேறு தரப்பினர்கள் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள வகையில் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| விபரம் | Euro/ US$ | Rs. | தரப்பினர் |
|---|---|---|---|
| GI சான்றிதழ் புள்ளி பதிவின் ஆரம்ப செலவுகள் Initial work on certification mark registration & GI | | 5,000,000.00 | EDB |
| தொழில்நுட்ப ஆவணங்கள் தயாரித்தல் ஆலோசனைக் கட்டணம் Preparation of Technical Dossier Consultancy fees | US$705,000 | | UNIDO |
| சட்டச் செலவுகள் Legal fees/Lawyer in Brussels (Grant Received from CFC Euro 15,000) | Euro 80,000 | 2,000,000.00 | EDB |
| கட்டுப்பாட்டுத் திட்டங்கள் Control Plans | | 2,300,000.00 | EDB |
| கண்டறியக்கூடிய ஒழுங்கமைப்பு Traceability system | 45,000 | 10,350,000.00 | UNIDO |
| EDB மொத்த செலவு Cost met by EDB | | **29,300,000.00** | |
| UNIDO மொத்த செலவு Cost met by UNIDO | | **10,350,000.00** | |

இந்த உத்தரவாதத்தைப் பெற்றுக் கொடுக்கும் போது ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புக்கொண்டு மற்றும் கவனத்தில் கொண்டிருந்த GI இலச்சினைக்கமைய கறுவா தயாரிக்கப்பட்ட முறை என்பதால் கறுவாவிற்கு GI சான்றிதழ் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சமர்ப்பித்திருந்த விண்ணப்பப் பத்திரத்துடன் புவியியல் சுட்டியை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டு கறுவா தயாரிக்கும் முறை தொடர்பான நடைமுறை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு அந்த நடைமுறைக்கு அமைய கறுவா தயாரிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரை செய்துள்ளது.

(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கறுவா தயாரிப்பு நடைமுறைகளுக்கு ஏற்புடையதான வகையில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் கறுவா தரப்படுத்தப்படுதல் வேண்டும். இதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து GI விபரக்குறிப்பு மதிப்புத் தொடரினுள் செயற்படுத்துவதற்காக கட்டுப்பாட்டு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனினும் அந்த விபரக் குறிப்புகளுக்கு ஏற்புடையதாக கறுவா தயாரிக்கப்படும் முறையினை மதிப்புத் தொடரின் மூலம் இதுவரையில் செயற்படுத்தப்படவில்லை.

(இ) புவியியல் சுட்டியினைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டில் பல்வேறு தரப்பினர் இதுவரையில் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

| **நிறுவனம்** | **பெற்றுக் கொடுக்கப்பட்ட உதவி** | **காலப்பகுதி** |
|---|---|---|
| ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | கறுவா பயிர்ச்செய்கையாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் GI சங்கத்தின் ஒழுங்கு செய்தல். இந்த செயல் திட்டத்தின் வெளிப்புற கட்டுப்பாட்டாளராக இயங்குதல். | 2009 - இது வரையில் மற்றும் எதிர்காலத்தில் தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) | SLSI கறுவா தரத்தினை தயாரித்தல். GAP, GMP தரங்களை தயாரித்தல். | 2009 - 2021 |
| கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) | தேவையான ஆராய்ச்சித் தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல். | 2009 - 2021 |
| வணிகத் திணைக்களம் (DOC) | வெளிநாட்டு தூதரக அலுவலகங்கள் ஊடாக ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டத்தரணிகளுடனான தொடர்பு. | 2009 - 2021 |
| மசாலா பொருட்கள் சங்கம் (The spice Council) | கறுவா பயிர்ச்செய்கையாளர் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகியோரை பதிவு செய்தல் மற்றும் GI சங்கத்தினை ஒழுங்கு செய்தல். | 2009 - 2022 |

| | | |
|---|---|---|
| மசாலா பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்தி உற்பத்தியாளர்களின் வர்த்தக சங்கம் (SAPPTA) | கறுவா பயிர் செய்தியாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகியோரை பதிவு செய்த மற்றும் GI சங்கத்தினை ஒழுங்கு செய்தல். | 2009 - 2022 |
| வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | ஐரோப்பிய ஒன்றியத்துடன் தேவையான தொடர்பு நடவடிக்கைகளுக்கு உதவி செய்தல். | 2009 - இது வரை |

இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) SLSI கறுவா தரங்களை தயாரித்தல், GAP, GMP தரங்களை தயாரித்தல் என்பவற்றை இதுவரை மேற்கொண்டிருக்கவில்லை.

### 3.8.5 இலங்கை புவியியல் சுட்டி சங்கம் (CCGIA)

விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) புவியில் சுட்டியானது ஐரோப்பிய ஒன்றியத்தில் பதிவு செய்தல் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்தல் மற்றும் புவியியல் சுட்டியை எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்காக 2019 ஆம் ஆண்டில், இலங்கை புவியியல் சுட்டி சங்கம் (Ceylon Cinnamon GI Association- CCGIA) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் தாபிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் கறுவா புவியியல் சுட்டி சங்கம் அமைக்கப்பட்டு அங்கத்தவர்களை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மாவட்ட பிரதிநிதிகளை ஒன்றிணைத்து தேசிய சங்கத்தினை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சங்கத்தின் அடிப்படை நோக்கமானது புவியியல் சுட்டிக்கான கறுவா விபரக் குறிப்பினை (specification) CCGIA அங்கத்தவர்களுக்கு அறிமுகப்படுத்துதல் மற்றும் பெறுமதியிடல் மூலம் இந்த விபரக் குறிப்பினை பின்பற்றுவதற்கான கட்டுப்பாடுகளை (Control Plan) தயாரித்தல் என்பவற்றை 3 கட்டங்களில் கீழ் நடைமுறைப்படுத்துவது ஆகும்.

**i.** சுய கட்டுப்பாடு - உரிய தரப்பினர்களினால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படுகின்ற தரக்கட்டுப்பாடு

**ii.** உள்ளகக் கட்டுப்பாடு - கறுவா புவியியல் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற தரக் கணக்காய்வு

iii. வெளிப்புறக் கட்டுப்பாடு - ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் மூலம் பொருத்தமான கணக்காய்வு நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற தரக்கணக்காய்வு.

இந்தக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் Control Union என்னும் நிறுவனத்தின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனத்துடன் இணைந்து எதிர்காலத்தில் பயிற்சி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

(ஆ) புவியில் சுட்டி சங்கத்தின் தரப்பினர்கள் அதன் அங்கத்தவர்கள் ஆவர். அதாவது பயிர்ச்செய்கையாளர்கள், தயாரிப்பாளர்கள், இடைத்தரகர்கள், ஏற்றுமதியாளர்கள் ஆவர். அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் பின்வருமாறு ஆகும்.

| **தரப்பினர்கள்** | **ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள்** |
|---|---|
| பயிர்ச்செய்கையாளர்கள் | பரிந்துரை செய்யப்பட்ட விபரக் குறிப்புகளுக்கு அமைய உயர் தரத்திலான கறுவாவினை பயிர் செய்தல். |
| தயாரிப்பாளர்கள் | பரிந்துரை செய்யப்பட்ட விவக்ர குறிப்பிற்கு அமைய உயர் தரத்திலான கறுவா உற்பத்தியினை தயாரித்தல். |
| இடைத்தரகர்கள் | பரிந்துரை செய்யப்பட்ட விபரக் குறிப்பிற்கு அமைய உயர் தரத்திலான கறுவாவினை சேகரித்தல். |
| ஏற்றுமதியாளர்கள் | பரிந்துரை செய்யப்பட்ட விபரக் குறிப்பிற்கு அமைய உயர் தரத்திலான உற்பத்தியினை ஏற்றுமதி செய்தல். விபரக் குறிப்பிற்கு இணங்க தரத்தினை பேணுதல் மற்றும் பெறுமதியிடல் மூலம் கண்டறியும் தன்மையினை பேணி செல்லுதல். |

சங்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மாவட்ட ரீதியில் செயலமர்வுகளை நடத்தி வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. எனினும் இதுவரையிலும் அதன் அங்கத்துவத்தைப் பெற்றிருந்தோர் பயிர்ச்செய்கையாளர் 01 நபரும், ஏற்றுமதியாளர்கள் 09 பேரும் மற்றும் பயிர்ச்செய்கை மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டிலும் ஈடுபட்டுள்ள 03 பேரும் மட்டுமே ஆவர்.

(இ) இந்த சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு கறுவா பயிர் செய்தல் மற்றும் தயாரிப்பதற்கு உரியதான விபரக் குறிப்புகள் அங்கத்தவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது சங்கத்தினாலேயே ஆகும். எவ்வாறு இருப்பினும் இதுவரையிலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதே போன்று தற்போதுள்ள கறுவா புவியியல் சுட்டி சங்கத்தின் அரசியலமைப்பை திருத்துவதற்கும் மற்றும் புதிய சங்கத்தினைத் தாபிப்பதற்கும் சட்டமா அதிபர்

திணைக்களத்தில் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக ஏற்றுமதி அபிவிருத்தி சங்கத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) கறுவா GI தரத்தினை சர்வதேச ரீதியில் ஊக்குவித்தல் தொடர்பில் பாரிய கடமை பொறுப்பை ஏற்றுமதி அபிவிருத்தி சபை நிறைவேற்றுகின்றது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொண்ட பிரயத்தனத்தின் பின்னர் 2022 பெப்ரவரி மாதத்தில் கறுவா GI தரத்தினை பெற்றுக் கொண்டுள்ளது. கறுவாவின் GI தரத்தினை ஏனைய நாடுகளில் ஊக்குவிப்பு செய்யும் நடவடிக்கைத் திட்டம் மற்றும் இதற்குத் தேவையாக உள்ள விற்பனை திட்டம் என்பன இன்னமும் தயாரிப்பு கட்டத்திலேயே காணப்படுகின்றன.

(உ) 2022 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி இலங்கைக்கு GI சான்றிதழ் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கு அமைய இலங்கை கறுவா பயிரானது ஏனைய கறுவா உற்பத்திகளுக்கு இடையில் விசேட வேறுபாடுகளுக்கு உரித்துடையது என ஏற்றுக்கொள்வதாகும். தேசிய மட்டத்தில் இலங்கை இந்தச் சான்றிதழை பெற்றுக் கொண்டிருந்த போதிலும் அதன் பின்னர் கறுவா உற்பத்தியாளர்களுக்கு GI இலச்சினை பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான பல வழி வகைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனினும் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையில் தரை மட்டத்திலான விவசாயிகளுக்கான சங்கத்தினை தாபித்தல் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக கறுவா உற்பத்தியாளர்களுக்கு GI சான்றிதழைப் பெற்றுக் கொடுப்பதற்கு வேறு எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்பு இருந்து காணப்படும் பிரதேச விவசாயக் குழுவே இந்த புதிய விவசாய சங்கமாக தாபிக்கப்பட்டுள்ளதுடன் அவை பதிவு செய்யப்படுதல் அல்லது குழு கூட்டங்களை நடத்துதல், அறிக்கைகக் குறிப்புகளை பேணுதல் போன்ற ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படும் முறையொன்று கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் களப்பரீட்சிப்பின் போது இடம்பெற்ற விவசாயிகளின் சந்திப்பில் மற்றும் உற்பத்தியாளர்களின் சந்திப்புகளில் அவர்கள் சான்றிதழ் தொடர்பாகவோ அல்லது அந்த நடைமுறை தொடர்பாகவோ அறிவினைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(எ) இதுவரையில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் கறுவா ஏற்றுமதியாளர்களை ஒன்றிணைத்து உற்பத்தியாளர்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்பி இருக்கவில்லை. அதனால் GI சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய உள்ளக, வெளிப்புற மற்றும் சுயாதீன கணக்காய்வினை மேற்கொள்வதற்கு முடியாது இருந்துள்ளது.

### 3.8.6 பொதியிடல் மற்றும் பெயர் சீட்டிடல்

மசாலாப் பொருட்கள் அடிப்படை முறையில் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி ரீதியில் ஏற்றுமதி செய்யும் போது பொதியிடல் மற்றும் பெயர் சீட்டிடல் தொடர்பில் விசேடமாக கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். பொதியிடலின் போது மசாலாப் பொருட்களின் வடிவம், சுவை, மணம் போன்றவை பாதுகாக்கப்படக் கூடிய வகையில் சுத்தமான, சுகாதாரமான முறைமைகளைப் பின்பற்றுவதன் மூலம் அதன் தரத்தினைப் பேணிக் கொள்ள முடியும்.

### 3.8.6.1 பொதியிடலில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கடமைப் பொறுப்புகள்

ஏற்றுமதியாளர்களுக்கு மற்றும் சாத்தியமான ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களது ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையினை முன்னேற்றிக் கொள்வதற்கு மற்றும் அதிகரித்துக் கொள்வதற்கு ஆதரவு வழங்குவதற்கு தொழில்நுட்பம், தரம் மற்றும் பொதியிடல் அபிவிருத்தி உள்ளிட்ட வழங்கல் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பொறுப்பாகும். அவ்வாறு இருக்க மசாலாப் பொருட்கள் துறையில் ஏற்றுமதியாளர்களுக்கு 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் பொதியிடல் மற்றும் பெயர் சீட்டிடல் என்பவற்றை முன்னேற்றும் நடவடிக்கைகளுக்கான ஆதரவினைப் பெற்று கொடுத்திருக்கவில்லை.

2022 இடைக்கால வரவு செலவு அறிக்கைக்கு அமைய இலங்கை பொருட்களில் பொதியிடல் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனை நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான அரச நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்புகளை இலகுபடுத்துவதற்கு தேசிய பொதியிடல் மத்திய நிலையம் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினுள் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் ஏற்றுமதியில் 2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் ஏற்றுமதியாளர்களின் பொதியிடல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தது.

### 3.8.6.2 பொதியிடலில் கைத்தொழில் அமைச்சின் கடமைப் பொறுப்புகள்

பொதியிடல் தொடர்பாக கைத்தொழில் அமைச்சிடமிருந்து கிடைத்த பதிலுக்கு அமைய பொதியிடல் தொடர்பான ஆலோசனைச் சேவையினை பெற்றுக் கொள்வதற்கு அமைக்கப்பட்ட ஒரு அரச நிறுவனம் இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் சிறிய அளவிலான தொழிற்சாலைகளில் பொதியிடல் தொடர்பான தேவைப்பாடுகளில் ஆலோசனை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது எனவும், தனியார் பிரிவுகளில் பொதியிடல் தொழிலதிபர்களின் அங்கத்துவத்தைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இலங்கை பொதியிடல் நிறுவனத்தின் மூலம் பொதியிடல் தொழிற்சாலைகளுக்கு வியாபார கண்காட்சிகள், கூட்டங்கள், மாநாடுகள் என்பன நடாத்தப்படுகின்றன எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

## 3.9 ஏற்றுமதி விவசாயப்பயிர் உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பு தொடர்பில் ஏனைய அரச நிறுவனங்களின் கடமைப்பொறுப்புகள்

### 3.9.1 இரசாயன ஆய்வுகூட சேவை வசதிகள்

இலங்கையின் தேசிய ஏற்றுமதி உத்தி முறையின் ஒரு பகுதியாக மசாலாப் பொருட்கள் மற்றும் கலவைகளின் உத்தி முறை 2018 - 2022 திட்டத்தினுள் அடையாளம் காணப்பட்டு இருந்த வகையில் ஏற்றுமதி விவசாயப்பயிர் சார்ந்த உற்பத்திகளின் தரத்தினை பரீட்சிப்பு செய்யும் ஆய்வு கூடங்களின் குறைபாடு நாடு முழுவதிலும் காணப்படுவதாக 2018 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டு இருந்தது. 2022 ஆம் ஆண்டு வரையிலும் இரசாயன ஆய்வுகூட வசதிகளை பெற்றுக் கொள்ள கூடிய ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமாக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் பெயரிடப்படக் கூடியதாக இருந்த போதிலும் கறுவா ஆராய்ச்சி நிறுவனம், மாத்தளை மத்திய ஆராய்ச்சி நிலையம், மசாலா பொருட்கள் மற்றும் அவை சார்ந்த விற்பனை சபை இதற்கான வசதிகளை போதிய அளவில் அபிவிருத்தி செய்திருக்காமை மற்றும் நாட்டினுள் ஏற்றுமதி விவசாயப்பயிர் சார்ந்த ஆய்வுக்கூடங்களுக்கு நிலவுகின்ற தட்டுப்பாடு என்பன அவதானிக்கப்பட்டது.

### 3.9.2 இரசாயன ஆய்வு கூட சேவை வசதிகளை வழங்குதல் - கறுவா ஆராய்ச்சி நிறுவனம்

தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையம், கறுவா தொடர்பாக இலங்கையில் உள்ள ஒரே ஆராய்ச்சி நிலையமாகும். கறுவா கைத்தொழிலின் நலனை நோக்கி கறுவா பயிர்ச்செய்கை மற்றும் தயாரிப்பு தொடர்பான அனைத்து பிரிவுகளினதும் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான சட்ட ரீதியான நிறுவனமான இந்த நிறுவனத்தின் மூலம் அரச அனுமதி கட்டணத்தின் அடிப்படையில் வெளித் தரப்பினருக்கும் இரசாயன ஆய்வு கூட சேவை வசதிகளை பெற்றுக் கொடுத்தல் இடம்பெறுகின்றது. நிறுவனத்தினுள் இடம்பெறும் விவசாய அறிவியல் மற்றும் பயிர்களை முன்னேற்றும் பிரிவு, மண் மற்றும் தாவர ஊட்டப் பிரிவு, தாவர பாதுகாப்பு பிரிவு, அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பப் பிரிவு போன்ற பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகள், பயிற்சிகள் என்பவற்றுக்கு போன்றே ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்பினருக்கு தரமான சேவையினை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப வசதிகள் கொண்ட ஆய்வுக்கூடத்தின் தேவைப்பாடு நிலவுகின்றது. நிறுவனத்தினுள் காணப்படும் ஆய்வுக்கூடம் மற்றும் வசதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கறுவா ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட இரசாயன ஆய்வு கூட அறிக்கைகள் தொடர்பான விபரங்களுக்கு அமைய இலங்கை அங்கீகார சபையின் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட ஆய்வுகூட அறிக்கைகளை வழங்குதல் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது என 2022 ஜூன் 28 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமையில் தென்மாகாணம் மற்றும் அவை சார்ந்த கறுவா உற்பத்தியாளர்களுக்கு இரசாயன பரிசோதனைகளுக்கு கொழும்பு போன்ற தூர இடங்களுக்கு தனியார் இரசாயன ஆய்வுக்கூடம் மற்றும் கைத்தொழில் தொழில்நுட்பம் போன்ற நிறுவனங்களுக்கு செல்லுவதற்கு பாரிய தொகை மற்றும் நேரம் செலவிட நேரிடுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. சான்றிதழ் வழங்குதல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| பிரிவு | ஆராய்ச்சியின் பெயர் | 2019 | | 2020 | | 2021 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வெளிப்புற | உள்ளக | வெளிப்புற | உள்ளக | வெளிப்புற | உள்ளக |
| அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பப் பிரிவு | **GCMS identification** (ஆவியாக கூடிய எண்ணெயில் உள்ளடங்கியுள்ள இரசாயனப் பொருட்களைக் கண்டறிதல் மற்றும் அதற்குரிய அறிக்கையினை பெற்றுக் கொள்ளுதல்) | 01 | 650 | 11 | 722 | 10 | 680 |
| | **Sulfite Content (On dry basis)** | 00 | 36 | 09 | 36 | 07 | 56 |
| | **Oil Content (on dry basis)** | 12 | 402 | 52 | 858 | 18 | 157 |
| | **Moisture Content** | 02 | 357 | 44 | 457 | 23 | 275 |
| | **Water activity** | 01 | 387 | 11 | 312 | 35 | 121 |
| | **மொத்தம்** | **16** | **1832** | **127** | **2385** | **93** | **1289** |

(ஆ) அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பப் பிரிவு மற்றும் மண் மற்றும் தாவர ஊட்டப் பிரிவு என்பவற்றின் மூலம் 28 விஞ்ஞான கூட சேவைகளை வழங்குதல் இடம்பெற்ற போதிலும் 12 சேவைகளுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கப்பட்டு இருந்ததுடன் ஏனைய ஆராய்ச்சிகள் நிறுவனத்தினால் அறவிடப்படும் கட்டணங்களுடன் ஒப்பிடும்போது அந்த சேவைகள் குறைந்த கட்டணத்தில் வழங்கக் கூடியதாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ஆய்வு கூட சேவை | அறவீடு / Cost (Rs.) | ஏனைய நிறுவனங்களின் விலைகள் (ITI) | Status of the Accreditation/ அங்கீகாரத்தின் நிலை |
|---|---|---|---|---|
| Post-harvest technology division | | | | |
| 1. | Determination of moisture content in volatile sample with report** | 300.00 | 9,000 | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 2. | Determination of spice volatile oil content and moisture content (%) with report** | 750.00 | | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 3. | Determination of bark oil content and moisture content (%) with report (cinnamon) | 750.00 | 2,000.00 | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 4. | Determination of moisture content (%) with report | 750.00 | | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 5. | Determination of non volatile ether extraction content (%) with report** | 1,800.00 | | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 6. | Determination of water activity in sample with report (water activity meter)** | 450.00 | | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 7. | Soil PH and EC with report** | 100.00 | 100.00 | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 8. | N,P,K analysis without report** | 1,000.00 | 670.00 | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| | N,P,K analysis without report** | 700.00 | | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 9. | Total N in soil** | 350.00 | | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 10. | Phosphorous analysis in soil** | 350.00 | | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |
| 11. | Exchangeable K analysis in soil** | 350.00 | | அங்கீகாரத்திற்கான அனுமதிக்கப்பட்டது |

(இ) நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள 8 ஆய்வுகூட வசதிகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாது உள்ளதுடன் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. இந்த சேவைகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களுக்கு உரிய சேவைகளுக்காக சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் திறன் கிடைக்கும். குறித்த சேவைகள் மற்றும் நிறுவனங்களினால் அறவிடப்படும் கட்டணங்கள் மற்றும் ஏனைய தனியார் பிரிவுகளில் அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| ஆய்வு கூட சேவை | அறவீடு /Cost (Rs.) | ஏனைய நிறுவனங்களின் விலைகள் (ITI) | Status of the Accreditation/ அங்கீகாரத்தின் நிலை |
|---|---|---|---|
| **Post-harvest technology division** | | | |
| **GCMS Analysis for volatile oil with report (Cinnamon)** | 6,000.00 | 12,000.00 | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது |
| **GCMS Analysis for pesticide residual with report (cinnamon)** | 5,000.00 | | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது |
| **Determination of leaf oil content and moisture content (%) with report (cinnamon )** | 750.00 | 2,000.00 | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது |
| **Specific gravity*** | 600.00 | | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது |
| **Solubility in alcohol*** | 500.00 | | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது |
| **Refractive index*** | 700.00 | | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது |
| **Optical rotation*** | 700.00 | | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது |
| **Soil analysis CR, Cu*,Ca*, Na, Fe*,Ni, Mn, MG*,Zn*,Li, As, Se, Be, AI** | | | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது |

(ஈ) மேலே குறிப்பிடப்பட்ட சேவைகளை அங்கீகரிப்பதற்குப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு சுமார் ரூபாய்.2,055,000 தொகை தேவைப்படுகின்றது என்பதும் நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாத காரணத்தால் மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வுகூட சேவைகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் தாமதமடைந்து உள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது. குறித்த தேவைப்பாடுகள் மற்றும் பெறுமதிகள் பின்வருமாறு ஆகும்.

| இலக்கம் | உருப்படி | மொத்த மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|---|
| 1 | ICPOES உபகரணங்களைப் பராமரித்தல் | 795,000.00 |
| 2 | GCMS சேவை செய்தல் /Services | 300,000.00 |
| 3 | உபகரணங்களின் அளவுத் திருத்தம் /Instrument calibration | 200,000.00 |
| 4 | Chemicals and Consumables | 500,000.00 |
| 5 | PT and ILC Programme | 50,000.00 |
| 6 | Renew of Accreditation | 80,000.00 |
| 7 | Assessment charges | 50,000.00 |
| 8 | Service of other equipment (Spectrophotometer, Distillation unit) | 80,000.00 |
| | Total | **2,055,000.00** |

(உ) தேசிய கறுவா ஆராய்ச்சி நிறுவனத்தின் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் சந்தையை இலக்காகக் கொண்டு புதிய உற்பத்திகள் உருவாக்கப்பட்டு இருந்தது எனினும் அந்த உற்பத்திகள் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்குவதற்கு தேவையான தரச் சான்றிதழை உரிய நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொண்டிருக்காத காரணத்தால் உயர்ந்த தரத்தினைக் கொண்ட உற்பத்தியினை சந்தைக்கு வழங்குவதற்கு முடியாது இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 - 2019 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தோல் நோய் மற்றும் பல் நோய்க்கான பூஞ்சை மற்றும் பாக்டீரியா எதிர்ப்பு செயற்பாடுகள் (anti-bacterial and antifungal activity) தொடர்பான கறுவாவின் திறன் தொடர்பில் ஆராய்ச்சி முன்மொழிவு அரச வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அந்த நிறுவனத்தில் காணப்பட்ட உள்ளகக் குறைபாடுகள் காரணமாக குறித்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டிருந்தது

(ii) 2017 - 2019 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நீரிழிவு நோய்க் கட்டுப்பாட்டிற்காக கறுவா தேநீர் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக்கான மருத்துவ ரீதியான உறுதியினை பெற்றுக் கொண்டு அதனை சந்தைக்கு வழங்கியிருக்கவில்லை

(iii) 2019 - 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கறுவா எண்ணெய் மற்றும் கற்பூர எண்ணெய் என்பவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நுளம்பு விரட்டும் ஊதுபத்தி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த உற்பத்தி மனித உடலுக்கு பொருத்தமானதா என மருத்துவ ரீதியான ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்காதுடன் அதன் மூலம் அதற்குப் பொருத்தமான சந்தையினை உருவாக்குவதற்கு முடியாதிருந்தது.

### 3.9.3 ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பிரதேச அலுவலகங்களின் பங்களிப்பு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்குரிய வடக்கு, வடமேல், மத்திய மற்றும் தெற்கு ஆகிய 4 மாகாண அலுவலகங்கள் மூலம் 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மசாலாப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் பிரிவில் ''புதிய சாத்தியமான ஏற்றுமதி நிறுவனத்தை அடையாளம் காணுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் வேலைத்திட்டத்தின் கீழ்'' 44 ஏற்றுமதியாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

(ஆ) ஏற்றுமதித் தயாரிப்பு கிராமிய வேலைத் திட்டத்தின் கீழ் வடமேல் மற்றும் தெற்கு ஆகிய இரண்டு பிரதேச அலுவலகங்களில் வெனிலா பயிர்ச்செய்கைக்கு பயனாளிகள் 150 பேரும், மத்திய மாகாணத்தில் கோப்பி, வெனிலா மற்றும் ஏலக்காய் பயிர்ச்செய்கைக்கு பயனாளிகள் சுமார் 2645 பேரும் தெரிவு செய்யப்பட்டு இருந்ததுடன் அரச செலவினைக் குறைக்கும் நிதி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய நிதி ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தால் இந்த செயல்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்ததாக தெரிவிக்கப்பட்டு இருந்ததுடன் வடமாகாணத்தில் இந்த செயற்திட்டம் செயற்படுவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.9.4 கைத்தொழில் அமைச்சின் கடமைப் பொறுப்புகள்

''கைத்தொழில் பன்முகப்படுத்தலின் ஊடாக உள்நாட்டு, வலய மற்றும் சர்வதேச வழங்கல் வலையமைப்புடன் தொடர்புபட்டு உலகளாவிய போட்டித் தன்மையில் ஒப்பீட்டளவில் இலாபத்தை எட்டுவதற்கு உள்நாட்டுக் கைத்தொழில் துறையினை நவீன முறைமைகள் ஊடாக உறுதிப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்'' கைத்தொழில் அமைச்சின் தற்போதைய விடயப் பரப்பாகும். அதற்கமைய இறக்குமதி ஏற்றுமதி செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்ளுவதற்கு ஒன்றிணைந்த பொறிமுறையினை தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த முறைமைகளை உறுதியாக்குவதற்கான கொள்கை, வேலைத் திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களை உருவாக்குதல் இந்த அமைச்சில் விசேட முன்னுரிமை ரீதியில் அடையாளம் காணப்பட்டிருந்தது.

அதற்கமைய ஏற்றுமதி விவசாயப் பயிர் சார்ந்த ஏற்றுமதியாளர்களை நோக்காக கொண்டு கைத்தொழில் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும் கடமைப் பொறுப்புகள் தொடர்பில் செய்யப்பட்ட விசாரணைகளின் பதில்களுக்கு அமைய பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மசாலா பொருட்கள் சார்ந்த கைத்தொழில் 2018 - 2022 மார்ச் வரையில் கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு ஆகும்.

| **ஆண்டு** | **ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 2018 | 08 |
| 2019 | 09 |
| 2020 | 10 |
| 2021 | 08 |
| 2022 மார்ச் | 09 |

(ஆ) மசாலாப் பொருள் கைத்தொழிலின் தேவைப்பாடுகளை அடையாளம் காணுவதற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழிலில் ஆலோசனைக் குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவின் ஊடாக தொழிலதிபர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்பினை மேற்கொண்டு தேவையான அபிவிருத்தி மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

(இ) இந்த ஆலோசனைக் குழுவின் மூலம் உள்நாட்டு மசாலா பொருள் உற்பத்திக் கைத்தொழில் தொடர்பான தரவு ஒழுங்கமைப்பினை உருவாக்குவதற்கு 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. மசாலாப் பொருட்கள் உற்பத்தியாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் சந்தை என்பவற்றுக்கு இடையில் மிகவும் நெகிழ்வான தொடர்பினை உருவாக்குவதன் மூலம் வீணாவதைக் குறைத்தல், வினைத்திறனை உயர்த்துவதன் மூலம் தரமான உற்பத்தியினை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் ஆகும்.

### 3.9.5 வணிகத் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகள்

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் என்பவற்றின் கீழ் ஆதாரநிலை சான்றிதழ் வழங்கும் பொறுப்பு வணிகத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வியாபார ஒப்பந்தங்களின் கீழ் பண்டங்களை ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான ஆதாரநிலை சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தகைமையுள்ள ஏற்றுமதியாளர்கள் மட்டும் வணிக திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படுவர். அந்த ஏற்றுமதியாளர்களுக்கு ஆதாரநிலை சான்றிதழைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஏற்றுமதிக்கான சுங்கவரி நிவாரணம் பெற்றுக் கொள்ள முடியும். விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

அதற்கமைய இந்த அறிக்கையில் கலந்துரையாடப்படும் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை உள்ளடங்கும் வியாபார ஒப்பந்தங்கள் 07 ஆகும். அந்த வியாபார ஒப்பந்தங்களின் கீழ் இடம்பெறும் ஏற்றுமதித் தொகை தொடர்பான தரவுகள் இணைப்பு 13 இல் காட்டப்பட்டுள்ளது.

| **வியாபார ஒப்பந்தம்** | **ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதி** |
|---|---|
| ISFTA - இந்து - இலங்கை சுதந்திர வியாபார ஒப்பந்தம் | 2000.03.01 |
| APTA - ஆசியா பசுபிக் வியாபார ஒப்பந்தம் | 2006.09.01 |
| PSFTA – பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வியாபார ஒப்பந்தம் | 2005.06.12 |
| SAFTA - தெற்காசிய சுதந்திர வியாபார ஒப்பந்தம் | 2006 |
| GSTP - உலகளாவிய முன்னுரிமை வியாபார முறை | 1989 |
| GSP - முன்னுரிமை பொதுமுறை | சுமார் **1964** தொடக்கம் |

(ஆதாரம் - வணிகத் திணைக்களத்தின் இணையதளம்)

2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் வியாபார ஒப்பந்தங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளின் தொகை மொத்த ஏற்றுமதியுடன் ஒப்பிடும்போது வியாபார ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியின் பங்களிப்பு பின்வருமாறு ஆகும்.

| உருப்படி | ஏற்றுமதித் தொகை (மெட்ரிக்தொன்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | | | 2020 | | | 2021 | | |
| | சுங்க தரவுகளுக்கு அமைய | வியாபார ஒப்பந்தங்களில் | % | சுங்க தரவுகளுக்கு அமைய | வியாபார ஒப்பந்தங்களில் | % | சுங்க தரவுகளுக்கு அமைய | வியாபார ஒப்பந்தங்களில் | % |
| கறுவா | 17176.18 | 10181.70 | 59.28 | 18721.83 | 10002.64 | 53.43 | 18813.52 | 9132.19 | 48.54 |
| மிளகு | 7812.69 | 5689.62 | 72.83 | 9038.45 | 6358.59 | 70.35 | 17959.16 | 14921.66 | 83.09 |
| ஏலக்காய் | 12.78 | 1.32 | 10.33 | 1.35 | 0.94 | 69.47 | 2.61 | 1.88 | 72.05 |
| கிராம்பு | 5115.22 | 4167.89 | 81.48 | 2579.39 | 1927.36 | 74.72 | 6478.68 | 4691.18 | 72.41 |
| சாதிக்காய் | 2657.96 | 1226.75 | 46.15 | 1774.07 | 796.79 | 44.91 | 1710.29 | 995.75 | 58.22 |
| கோபி | 22.70 | 9.46 | 41.68 | 26.64 | 8.84 | 33.18 | 30.47 | 12.01 | 39.41 |
| கொக்கோ | 2.04 | 0.00 | 0.00 | 2.81 | 0.00 | 0.00 | 3.91 | 0.00 | 0.00 |
| வேனிலா | 0.71 | 11.11 | 1567.79 | 0.62 | 19.31 | 3095.84 | 1.43 | 15.24 | 1064.28 |
| வெற்றிலை | 4677.81 | 4280.59 | 91.51 | 3939.68 | 3540.30 | 89.86 | 3833.66 | 3727.00 | 97.22 |
| கற்பூர புல் | 10.46 | 0.00 | 0.00 | 5.78 | 0.00 | 0.00 | 4.08 | 0.00 | 0.00 |
| லெமன் கிராஸ் | 5.74 | 0.00 | 0.00 | 2.76 | 0.00 | 0.00 | 1.61 | 0.00 | 0.00 |
| இஞ்சி | 36.17 | 21.76 | 60.15 | 110.49 | 42.03 | 38.04 | 113.81 | 80.34 | 70.59 |
| மஞ்சள் | 116.59 | 67.27 | 57.70 | 69.25 | 34.81 | 50.27 | 42.38 | 24.27 | 57.27 |
| கொரக்கா | 98.23 | 317.53 | 323.24 | 141.52 | 327.42 | 231.36 | 176.34 | 746.13 | 423.11 |
| பாக்கு | 6134.10 | 5885.53 | 95.95 | 12583.98 | 12545.28 | 99.69 | 10516.26 | 10467.54 | 99.54 |

(ஆதாரம் - இலங்கை சுங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள், வணிக திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள்)

அதற்கமைய இலங்கை சுங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த ஏற்றுமதி தரவுகள் மற்றும் வணிகத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் என்பவற்றை ஒப்பிட்டு பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வியாபார ஒப்பந்தங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளில் 10 சதவீதம் தொடக்கம் 92 சதவீதம் வரையில் உள்ளடக்கப்பட்டிருந்தது என்பதை காணக் கூடியதாக இருந்தது. எனினும் வெனிலா மற்றும் கொரக்கா தொடர்பான தரவுகளைப் பார்க்கும் போது மொத்த ஏற்றுமதியை விட வியாபார ஒப்பந்தங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி அதிகம் எனக் காட்டப்பட்டுள்ளமை சிக்கலானதாகும்.

(ஆ) கொக்கோ, கற்பூர புல், லெமன் கிராஸ் போன்ற பயிர்கள் வியாபார ஒப்பந்தங்களில் மூலம் உள்ளடக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) அதேபோன்று இந்த வியாபார ஒப்பந்தங்கள் ஆதிகாலம் தொட்டு காணப்படும் ஒப்பந்தமாக உள்ளதுடன் 16 வருட காலத்தில் புதிய ஒப்பந்தங்கள் எதுவும் கைச்சாத்திடப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) இந்து - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (ISFTA) கீழ் வருடத்திற்கு 25,000 மெட்ரிக் தொன் ஒதுக்கம் (Quota) இலங்கைக்கு கிடைத்துள்ளது. எனினும் அதன் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்றுமதி தொகை 2019 ஆம் ஆண்டில் 1137 மெட்ரிக் தொன்னும், 2020 ஆம் ஆண்டில் 1043 மெட்ரிக்தொன்னும் மற்றும் 2021 ஆம் ஆண்டில் 2099 மெட்ரிக்தொன்னும் மட்டுமாகும். அதற்கமைய அந்த ஏற்றுமதி சந்தர்ப்பத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னுரிமை பொது முறையின் (GSP) கீழ் ஐரோப்பா, சுவிற்ஸ்லாந்து, நோர்வே, துருக்கி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு ஆதார நிலை சான்றிதழ் வழங்குவதற்கு அண்மையில் REX System எனும் பெயர் கொண்ட கணனி ஒழுங்கமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஏற்றுமதி விவசாயப்பயிர் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள (அண்ணளவாக) 363 ஏற்றுமதியாளர்களிடையே (ஏற்றுமதி அபிவிருத்தி சபை - 2018 தரவுகள்) இந்த ஒழுங்கு அமைப்பின் கீழ் பதிவு செய்திருந்த ஏற்றுமதியாளர்கள் 88 பேர் மட்டுமே ஆகும்.

(ஊ) அதே போன்று இந்த வியாபார ஒப்பந்தங்கள் தவிர ஏனைய ஒப்பந்தங்களின் கீழ் ஆதாரநிலை சான்றிதழ் வழங்கும் மின்னணு முறைமை இதுவரையில் அறிமுகப்படுத்தப்படவில்லை.

### 3.9.6 நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரசபையின் கடமைப் பொறுப்புகள்

2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகார சபை சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரசபை முக்கியமாக நுகர்வோர் உரிமையை பாதுகாத்தல் மற்றும் நியாயமான சந்தை போட்டித் தன்மையை உருவாக்குவதற்காக வாதிடுகின்றது. இங்கு நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகார சபைக்கு ஏற்றுமதி விவசாயப்பயிர் தொடர்பான பொறுப்புக்கள் தொடர்பில் கணக்காய்வினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

(அ) ஏற்றுமதி விவசாயப் பயிர் தொடர்பாக விலை ஒழுங்குறுத்தல் மற்றும் பொருட்கள் தொடர்பான பொறுப்புக்கள் தொடர்பான அவதானிப்பின் போது நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகார சபை போதுமான அளவு ஒழுங்குறுத்தல்களை மேற்கொண்டு இருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. கவனத்தில் கொண்ட கடந்த கிட்டிய நான்கு வருட காலப் பகுதியிலும் இந்த ஏற்றுமதி பயிர்கள் தொடர்பில் பாரிய விலை தளம்பல்கள் மற்றும் சந்தையில் பொருட்களின் தட்டுப்பாடு என்பவற்றைக் காணக் கூடியதாக இருந்ததுடன் அது தொடர்பாக நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரசபை போதியளவு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2020.04.21 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2172/5 கொண்ட வர்த்தமானியின் மூலம் ஒரு கிலோகிராம் மஞ்சளுக்கு ரூபாய்.750 கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 2020.09.23 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2194/49 கொண்ட வர்த்தமானியின் மூலம் குறைக்கப்பட்டு இருந்தது. அது தவிர வேறு எந்த பயிருக்கும் கட்டுப்பாட்டு விலையினை உற்பத்தியாளருக்கோ அல்லது நுகர்வோருக்கோ வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதனால் சந்தை கேள்வி மற்றும் வழங்கலைப் போன்று விலை தொடர்பாகவும் செயற்பாடுடுக் கட்டுப்பாடு அல்லது ஒழுங்குறுத்தல் சரியான முறையில் இடம்பெற்றிருக்கவில்லை .

(இ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளைக் கவனத்தில் கொள்ளும்போது நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரசபை மஞ்சள் பயிருக்காக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலையை மீறுதல் தொடர்பில் 68 விசாரணைகளும் தீர்மானிக்கப்பட்ட தரம் இல்லாமை தொடர்பான 59 விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அந்த தவறின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஏற்றுமதி விவசாயப் பயிர் தொடர்பில் பொறுப்பு கூறும் விசேட அலகு ஒன்றினைத் தாபித்தல் அல்லது அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தகர்களை / நுகர்வோர்களை தெளிவுபடுத்தும் வேலைத் திட்டங்களை நடத்துதல் தொடர்பில் ஆராயும் போது நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரசபை அது தொடர்பில் விசேட கவனத்தினை செலுத்தி இருக்கவில்லை. எனினும் நெறிமுறையான வியாபார சூழலில் பாதுகாப்பான நுகர்வோரை உருவாக்குவதற்கான நோக்கினை யதார்த்தமாக்குவதற்கு இந்த ஏற்றுமதி விவசாயப்பயிர் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

### 3.9.7 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகள்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டின் கீழுள்ள பொருட்களுக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பாக அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு ஏற்ப ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல் மற்றும் வெளிப்படுத்துதல் இந்த திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) அதற்கமைய இந்த அறிக்கையில் கலந்துரையாடப்படுகின்ற விவசாயப் பயிர்களுக்கு தற்காலத்தில் அதிகாரத்தில் உள்ள இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் தொடர்பில் 09 பயிர் வகைகளுக்கு 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2189/4 கொண்டதும் மற்றும் 2017 நவம்பர் 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2044/40 கொண்டதுமான வர்த்தமானி அறிவித்தல் மூலம் தற்போதைய காலம் வரையிலும் இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும் இலங்கை சுங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளுக்கு அமைய 2021 ஆம் ஆண்டில் இந்தப் பயிர்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

| உருப்படி | இறக்குமதித் தொகை (கிலோகிராம்) | பெறுமதி (ருபா) |
|---|---:|---:|
| கறுவா (CINNAMON) | 87 | 86,107 |
| மிளகு (PEPPER) | 59,208 | 68,186,770 |
| ஏலக்காய் **(CARDAMOM)** | 512 | 545,105 |
| கிராம்பு (CLOVES) | 10,011 | 11,273,841 |
| சாதிக்காய் (NUTMEG) | 2 | 4,836 |
| கொக்கோ (COCOA) | 2 | 1,147 |
| இஞ்சி (GINGER) | 472 | 465,495 |
| மஞ்சள் (TURMERIC) | 799 | 583,567 |
| பாக்கு (ARECANUT) | 239,000 | 173,655,560 |

ஆதாரம் - புள்ளிவிபர பிரிவு, இலங்கை சுங்கம்

## 3.10 ஏற்றுமதி பண வரவுகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் கடமைப் பொறுப்புகள்

இலங்கையினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து ஏற்றுமதிகளினதும் பணவரவுகள், 1948 இன் 58 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள 2022 இன் 01 ஆம் இலக்க ஏற்றுமதி வருமானங்கள் இலங்கைக்கு கொண்டு வரும் விதி(விதிகள்) திருத்தத்தின் மூலம் ஒழுங்குறுத்தப்படுகின்றது. அந்த விதிகளின் மூலம் அந்நிய செலாவணி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் அந்நிய செலாவணி திணைக்களத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வியாபாரிகள் (அனுமதிப்பத்திரமுடைய வணிக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி) ஊடாக, ஏற்றுமதி வருமானங்கள் இலங்கைக்கு வரவிடுதல் தொடர்பான தகவல்கள் பெறப்படுகின்றன என குறிப்பிடப்பட்டிருந்தது.

ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் ஏற்றுமதி செய்தல் திறந்த கணக்கு முறையின் ஊடாக இடம்பெறும் போது ஏற்றுமதியாளர்களினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு ஏற்றுமதி ஆவணங்களை சமர்ப்பிக்காத சந்தர்ப்பங்களில் அவ்வாறான ஏற்றுமதி தொடர்பான தகவல் அதிகாரம் அளிக்கப்பட்ட வியாபாரிகளிடம் காணப்படுவதில்லை. அதற்கமைய அந்த சந்தர்ப்பங்களில் அந்நிய செலாவணி இலங்கைக்கு கிடைத்ததுள்ளது என உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறை ஒன்று இலங்கை மத்திய வங்கியிடம் காணப்படாததுடன் இருக்கும் குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட வியாபாரிகள் இணைந்து நிகழ்நிலை ஏற்றுமதி வருமான கண்காணிப்பு ஒழுங்கமைப்பை (Online Export Proceeds Monitoring Scheme) தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இந்த ஒழுங்கமைப்பில் வகைப்படுத்தும் திறனின் (sorting) அடிப்படையில் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் ஏற்றுமதி செய்வதற்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திறன் காணப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 4 பரிந்துரைகள்

**4.1** ஏற்றுமதி விவசாயப் பயிர்களை ஊக்குவிப்பதற்கு ஏற்றுமதி விவசாயம் தொடர்பான கொள்கையினை உள்ளடக்கி விவசாயக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துதல்.

**4.2** 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டமானது ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிக்கும் நோக்கில் மிகவும் உற்பத்தி திறனாக நடைமுறைப்படுத்தும் போது நேர்மறை திருத்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டு உடனடியாக அமுல்படுத்துதல்.

**4.3** ஆராய்ச்சி முன்னுரிமைகளை அடையாளம் கண்டு அதனுடன் போதியளவு நிதியினை பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றை நடைமுறையில் பயன்படுத்துவதற்கு அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களை ஊக்குவித்தல் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் ஏற்றுமதியினை ஊக்குவித்தல்.

**4.4** உள்நாட்டு மருந்துகளுக்குத் தேவையான பயிர்களை உற்பத்தி செய்வதற்கு மேலதிகமாக ஏற்றுமதியினை நோக்காக கொண்டு இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனம், ஆயுர்வேத திணைக்களத்திற்கு சொந்தமான மூலிகை தோட்டங்களில் மற்றும் வேறு பொருத்தமான இடங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

**4.5** பிரதேசங்களுக்குச் சொந்தமான சிறு ஏற்றுமதி பயிர்களை பயிரிடுவதற்கு விவசாய சங்கங்கள், கூட்டுறவு சங்கங்கள் என்பவை பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவித்தல், அறுவடையினை அதிகரித்தல், தரத்தினை அதிகரித்தல் என்பவற்றுக்கான வேலைத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் சந்தைகளை உறுதிப்படுத்துதல்.

**4.6** விவசாயப் பயிர்களில் இருந்து முடியுமான வரையில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள், துணை உற்பத்திகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றுக்கான வழிமுறைகளைத் திட்டமிடுதல்.

**4.7** மசாலாப் பொருட்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்தி விற்பனை சபையின் மூலம் சிறு ஏற்றுமதிப் பயிர்களைக் கொள்வனவு செய்தல், உற்பத்தியாளர்களுக்குத் தேவையான இருப்பினை பெற்றுக் கொடுத்தல் மற்றும் நியாயமான விலைக்குத் தரமான பொருட்களை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்தல்.

4.8 ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்குரிய விதை மற்றும் நாற்றுப் பொருட்களை சான்றுப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திடம் உள்ளதால் அதற்குத் தேவையான சட்ட ரீதியான அதிகாரத்தை ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் வகையில் குறித்த சட்டரீதியான திருத்தங்களை உருவாக்குதல்.

4.9 ஏற்றுமதி விவசாயப் பயிர் வகைகளுக்குரிய நாற்றுக்களை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் போது பயிர்ச்செய்கைக்குத் தேவையான வசதிகள் காணப்படுகின்ற தீர்மானமாக அடையாளம் காணப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு மட்டும் நாற்றுக்களை வழங்குதல் மற்றும் அறுவடை செய்தல் வரையில் தொடர்ச்சியான கண்காணிப்பு முறையினைத் தயாரித்தல்.

4.10 ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் சார்ந்த விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றிதழை வழங்குவதற்கு விசேட வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துதல் மற்றும் அவர்கள் சான்றுப்படுத்தப்பட்ட உற்பத்தியினைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளுவதற்கு ஊக்குவித்தல்.

4.11 ஏற்றுமதி விவசாயப் பயிருடன் தொடர்புடைய தரப்பினர்களைப் பதிவு செய்தல் மற்றும் புவியியல் தரவுகள் கட்டமைப்பை (GIS) அடிப்படையாகக் கொண்ட வரைபடத்தின் அடிப்படையில் பயிர் செய்யும் பிரதேசங்களை அடையாளம் காணக்கூடிய வகையில் மத்திய தரவு ஒழுங்கமைப்பினை பேணுதல், தரவு பரிமாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்களை காலத்திற்கு காலம் ஒழுங்குறுத்தல்.

4.12 அதிக ஏற்றுமதி வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய பயிர் தொடர்பாக காலத்துக்கு காலம் தரவுப் பகுப்பாய்வு மூலம் குறித்த பயிர் உற்பத்தியினை ஊக்குவித்தல்.

4.13 புதிய வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு வரி நிவாரணம் மற்றும் வேறு வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் கறுவாவிற்குப் பெற்றுக் கொண்டுள்ள புவியியல் சுட்டியின் (GI) மூலம் உடனடி பலன்களைப் பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டத்தினை தயாரித்தல்.

4.14 2022 வரவு செலவுத் திட்ட முன்மொழிவிற்கு அமைய அனைத்து ஏற்றுமதிகளினதும் ஒழுங்குறுத்தலுக்கு மத்திய நிறுவனம் ஒன்றை அமைத்தல் மற்றும் மூலப் பொருட்களாக அல்லாது பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் ஏற்றுமதி ஊக்குவிப்பிற்கு முதலீடு செய்வதற்குப் போதிய அளவு நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுத்தல் மற்றும் துறையுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் குறித்த கடமைப் பொறுப்புகளில் ஈடுபடுத்துதல்.

4.15 ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்படும் அந்நிய செலாவணி இலங்கைக்கு கிடைக்கின்றது என்பதைச் சான்றுப்படுத்தும் முறைமையை குறித்த பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து உடனடியாக தாபிப்பதற்கு நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பினை வலுப்படுத்துதல், ஏற்றுமதி வருமானத்தை இலங்கைக்குக் கொண்டு வருதல் தொடர்பிலான விதிகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்கள் காட்டும் உடன்பாடுகள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தல். (நிகழ்நிலை ஏற்றுமதி கண்காணிப்பு ஒழுங்கமைப்பு)

4.16 பொதியிடலின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு அரச நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல், வர்த்தக நாமத்தினை பயன்படுத்துதல் தொடர்பில் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்கான வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல்.

4.17 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் செயற்படுத்தப்பட்ட மசாலாப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தொடர்பான திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது அடையாளம் காணப்பட்ட மேலே கூறப்பட்ட குறைபாடுகளுக்குரிய பரிந்துரைகளைப் புதிய திட்டத்தினை தயாரிக்கும் போது பயன்படுத்துதல்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2023 யூன் மாதம் 02 திகதி

**2011 தொடக்கம் 2021 வகையான காலப்பகுதியினுள் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் விவசாயக் கொள்கைச் சபையிடம் 24 ஆராய்ச்சி பிரேரணைகளை முன் வைத்து அதற்காக ரூபா 45.5 மில்லியன் செலவிட்டிருந்தது.**

| இலக்கம் | ஆராய்ச்சியின் பெயர் | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | பூர்த்தி செய்த ஆண்டு | செலவிடப்பட்ட மொத்த தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | productivity improvement of cocoa through integrated soil and plant nutrient management system including good management practices(continuation) | 2011 | 2013 | 2.4 |
| 02 | Development of a cinnamon variety with high yield, superior oil quality, resistant to Rough bark disease and cinnamon wood Boring Moth | 2011 | 2013 | 1.2 |
| 03 | Multi –faceted crop improvement project on Black pepper | 2011 | 2015 | 2.4 |
| 04 | In vitro clone propergation of pepper local selections with high yield and quality | 2011 | 2014 | 2.8030 |
| 05 | Technology innovation for large scale in vitro multiplication of Cardamom,Cinnamon,Black pepper,Ginger and Turmeric | 2011 | 2013 | 2.96 |
| 06 | preparation of bio-fertilizer(Arbuscular mycorrhizae -AM) and bio-control agents(Trichoderma species and Pseudomonas florensence) for the nursery and field applications in Black Pepper (Piper nigrum L.) | 2011 | 2013 | 0.2171 |
| 07 | Detection of microbial contaminations at different stages of post harvest practices of Export Agricultural Crops | 2011 | 2013 | 0.7659 |

| | | | | |
|---|---|---|---|---|
| | (EACs)mainly Black papper (piper nigrum L)and its control (continuatin) | | | |
| 08 | Management of Cardamom Thrips(Sciothrips cardamom)in Cardamom (Elettaria cardamomum Maton)plantations under natural forests(continuation) | 2011 | 2013 | 2.9520 |
| 09 | Development of crop health based integrated pest management (IPM)package for managing Cinnamon pests(Arthropods,Pathogens and weeds) | 2012 | 2014 | 3.2210 |
| 10 | Development of tray drying technology to improve quality of export agricultural crops | 2012 | 2013 | 1.3225 |
| 11 | productivity improvement of cocoa through integrated soil and plant nutrient management system including good management practices Phase II | 2014 | 2015 | 0.8 |
| 12 | Technology innovation for large scale in vitro multiplication of Cardamom,Cinnamon,Black pepper,Ginger and turmeric Phase II | 2014 | 2015 | 0.8 |
